# ஆரணி - 2006

## BT/ARAYAMPATHY MAHA VIDYALAM

## ARAYAMPATHY

### மட்/ஆரையம்பதி மகா வித்தியாலயம்

ARAYAMPATHY

# ஆரணி---2006

**மலர்க்குழு**

நெறியாளர் :- **திரு.மா.தங்கவடிவேல்**
(வித்தியாலய அதிபர்)

நூலாசிரியர் :- **திருமதி.சி.பத்மநாதன்**
(வித்தியாலய பிரதி அதிபர்)

மலர்க்குழு அங்கத்தவர்கள்:-
**திரு.சி.வசிதரன்**
**திரு.க.சற்குருலிங்கம்**
**திருமதி.கு.ஸ்ரீதரன்**
**திருமதி.வி.மணிசேகரன்**

அட்டைப் பட அமைப்பு:- திரு.க.சற்குருலிங்கம்

கணனி வடிவமைப்பு:- திரு.சி.வசிதரன்

அச்சிடல்:- **திரு.க.கருணேந்திரா , திருமதி.ம.வன்னியசிங்கம், திருமதி.கு.வர்ணகுலசிங்கம், திருமதி.ப.ரகுநாதன், திருமதி.சு.தம்பிராசா,**

வெளியீடு:- மட்/ஆரையம்பதி மகா வித்தியாலயம், ஆரையம்பதி.

**18-09-2006**

# பொருளடக்கம்


1.எங்கள் பாடசாலை வரலாறு.
2.உயர்ந்த மனிதனின் உன்னத கருத்துக்கள்
3.மண்
4.இன்றைய கல்வி நிலையின் ஆரம்பப் பிரிவு
5.சமுகவாழ்க்கையில்சமயத்தின் முக்கியத்துவம்
6.கடல் சுனாமி (கவிதை)
7.ஒன்றின் மகிமை
8.இசையின் பெருமை
9.திரும்பி வரா நினைவுகள் (கவிதை)
10.சர்வதேசசின்னங்களும் அடையாளங்களும்
11.ஈழத்து தமிழ் நாடக வளர்ச்சி
12."THE IMPORTANCE OF THE ENGLISH LANGUAGE"
13.இந்து சமயத்தில் பெண்களின் பங்களிப்பு
14.வீரமாமுனிவரும் அவரது தமிழ்ப் பணிகளும்
15.ஆலய வழிபாடு ஏற்படுத்தும் உடல் உள மாற்றங்கள்
16.கணனியைக்கற்றாலும்பழமையைப் போற்றுவோம்
17.தடம்பதித்தஇலக்கியப்பெண்களும்தடுமாறும் இன்றையபெண்களும்
18.காலங்களில் நாட்டியம்
19.பாடசாலைக் காலம்
20.ஓசோன் படை பாதிப்பு
21.கூர்ப்பு சிறத்தல்
22.குரங்கின் பார்வையில் மனிதர்கள்
23.கல்வி எங்கள் சொத்து(கவிதை)
24.தமிழ்இலக்கியப்பாரம்பரியத்தில்உமறுப்புலவர்
25.மண்பானை போதித்த தத்துவம் (சுயசரிதை)
26.**"ABACUS"**
27.சிங்காசன சிறப்பு
28.வளர்ச்சி பெற வேண்டிய வாசிப்புக் கலை
29.நான் விரும்பும் வைத்திய தொழில்
30.நெசவுத் தொழில்
31.கல்வியின் பயன்பாடு

# ஆசிச் செய்தி

தத்தம் பாடசாலையில் பற்று வைக்கும்போது அப்பாடசாலையின் வளர்ச்சி நிச்சயப்படுத்தப்பட்டதொன்றாக இருக்கும் என்பதில் இருவேறு கருத்து இருக்கமுடியாது என்பது என் கருத்து.

அந்த வகையில் மட்/ஆரையம்பதி மகா வித்தியாலயத்தின் கடந்த கால முகாமைத்துவத் தலைவர்கள் தத்தமது காலத்தில் பாடசாலையில் பற்று கொண்டு தம்மாலான பணிகளைச் செய்து வந்துள்ளனர்.அந்த வரிசையில் தற்போதைய அதிபரும் அவருடன் இணைந்து செயற்படும் ஆசிரியத் தூண்களும் இவ்வித்தியாலயத்தின் வளர்ச்சியில் அதிக அக்கறையுடன் செயற்பட்டு வருவதை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது.

பாடசாலை என்பது மாணவர்களைப் பரீட்சைக்குத் தயார்படுத்தும் இயந்திரமன்று.அது மாணவர்களின் மனப்பாங்கு விருத்தியிலும் விழுமிய நிலை நோக்கிய பயணத்திற்கு வழி காட்டுவதிலும் அவர்தம் உள்ளார்ந்த ஆற்றல்களை வெளிக்கொணர்ந்து நிறைமாந்தர்களாக்குவதிலும் பாரிய பங்களிப்பைச் செய்யும் சமூக நிறுவனமாக இருக்க வேண்டும்.

மேலும் பாடசாலையானது இணைப்பாடவிதான செயற்பாடுகள் மூலமாகவும் மாணவர்கள் ஒவ்வொருவரையும் இனங்காட்ட வழி செய்ய வேண்டும்.

இதை உணர்ந்த இப்பாடசாலையும் தம் மாணவர்களின் ஆற்றல்களை-படைப்பு வீரியத்தை வெளிக்காட்டும் விதத்தில் "ஆரணி"எனும் சஞ்சிகையை வெளியிட முன்வந்ததையிட்டு மகிழ்ச்சியடைகிறேன்.இது கன்னிப்படைப்பாயினும் கனதியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

சஞ்சிகையை முழுமையாக வெளியிட்டு வைக்கும் வரை, அதை மற்றவர்கள் கைகளில் சேர்ப்பிக்கும் வரை உள்ள சிரமங்கள் பல என்பதையும் நானறிவேன்.

சிரமம் என்றால் எல்லாம் சிரமம்தான்.அதைப் பொருட்டாகக் கொள்ளாமல் இந்த சஞ்சிகையை வெளியிட்டு வைப்பதில் முயற்சியுடன் செயற்பட்ட அனைவருக்கும் என் நன்றி.

மேலும் பொன் விழாவை நோக்கிய பயணம் இனிதாக அமைய வாழ்த்துக்கள்.

**ஏ.எம்.இ. போல்**
**வலயக் கல்விப் பணிப்பாளர்,**
மட்டக்களப்பு.

வலயக் கல்வி அலுவலகம்,
மட்டக்களப்பு.

# ஆசிச் செய்தி

மண்முனைப்பற்றுக் கல்விக் கோட்டத்தில் கல்வியை வழங்குகின்ற பாடசாலைகளில் காத்திரமான பங்களிப்பினை மட்/ஆரையம்பதி மகா வித்தியாலயம் வழங்கிக் கொண்டிருக்கின்றது.23-10-1957ல் ஆரம்பிக்கப்பட்டு பொன் விழாக் காணத் துடிக்கும் இப்பாடசாலையின் வரலாற்றில் முதன்முதல் வெளியிடப்படும் "ஆரணி" எனும் அழகான பெயர் கொண்ட சஞ்சிகைக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வெய்துகின்றேன்.

மாணவர்களின் பல்வேறு ஆற்றல்களை வெளிக் கொணரும் களமாக பாடசாலைகள் திகழ்கின்றன.அதன்வழி இப்பாடசாலையும் மாணவர்களின் ஆற்றல்களை மேம்படுத்துவதிற்கும்,வெளிக்காட்டுவதற்கும் இச்சஞ்சிகையூடாக களம் அமைத்து வழிகாட்டியிருக்கின்றது.

குறிப்பாக இக்கல்விப் பிரதேசத்திலே சஞ்சிகை வெளியீடு என்பது மிகக் கடினமான பணி.இக் கடினமான பணியினை செவ்வனே நிறைவேற்றியுள்ள அதிபரும் ஆசிரியர்களும் பாராட்டிற்குரியவர்கள்.

இச்சஞ்சிகை இவ்வருடம் முதல் காத்திரமான படைப்புக்களைத் தாங்கி வருடாந்தம் வெளிவர என் ஆசிகள்.

*திரு.ந.சிதம்பரமூர்த்தி,*
*கோட்டக்கல்விப் பணிப்பாளர்,*
*மண்முனைப்பற்று.*

# உங்களுடன் என் மனத்துளிகள்.....

ஆரையம்பதியில் பெருமையாய் உயர்ந்து நிற்கும் வித்தியாலயமாக விளங்குவது இம் மகா வித்தியாலயமாகும். இவ்வித்தியாலயம் பொன் விழாக்காண விளைந்து நிற்கும் இக்கால கட்டத்திலே கன்னி வெளியீடாக மலர்கின்றது ஆரணியாகும்.

ஆரணி, பரமசிவனின் பாகமாக உறைந்திருக்கும் பார்வதியின் திருநாமங்களில் ஒன்றாக விளங்குவதுடன் காளி, கண்ணகி போன்ற பெண் தெய்வங்களின் பெயரையும் கொண்டுள்ளமை சிறப்புக்குரியதாகும்.

இந் நூலுக்கு ஆரணி எனப்பெயரிட தூண்டியமைக்கு மற்றுமோர் காரணத்தையும் இங்கே கூறலாம் என நினைக்கின்றேன். ஆரையூர் பெண் தெய்வ வழிபாட்டுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற ஓர் கிராமம். சக்தியை காளியாக, கண்ணகியாக பேச்சியாக தங்களின் இஷ்ர தெய்வங்களாகக் கொண்டு சித்திபல பெற்றவர்கள் இவ்வூர் மக்கள். இந் நூலும் அவளின் திருநாமத்தை ஏற்று மங்காத புகழுடன் வாழ வேண்டும் என்ற பேரவாவுமாகும்.


இந்நூல் முற்று முழுதாக ஆசிரியர்களதும் மாணவர்களினதும் ஆக்கங்களால் உருவாக்கப்பட்டது. மாணவர்களின் உள்ளார்ந்த திறன்களை வெளியிடும் ஒரு களமாக ஆரணி அமைவதுடன் ஆசிரியர் குழாத்தின் கருவூலங்களையும் வெளிப்படுத்தும் நல்லதோர் நூலாகவும் அமைகின்றது.

இவ்வாக்கங்கள் மலர் வடிவம் பெறுவதற்கு ஊக்கமும் ஆக்கமும் காட்டியவர்கள் இவ்வித்தியாலய அதிபர் என்பது குறிப்பிடத்தக்கது. மற்றும் மலராக்கக் குழுவினர்களின் ஒத்துழைப்பும் ஆரணி உங்கள் கரங்களில் தவழ பேருதவி செய்தன என்பதையும் என்னால் மறக்க முடியாது.

நன்றி

இப்படிக்கு

நூலாசிரியர் சி. பத்மநாதன்.



## எமது பாடசாலையின் வரலாறு

மீன் பாடும் தேன் நாடு என வர்ணிக்கப்படுகின்ற மட்டுமாநகரின் தெற்கே சுமார் எட்டுக் கிலோ மீற்றருக்கு அப்பால் கம்பீரமாக அழகூட்டி நிற்கும் கிராமமே ஆரையம்பதியாகும்.

ஆரையம்பதி கிராமத்திலே ஆரம்ப காலத்தில் மூன்று பாடசாலைகளே கல்வி நிறுவனங்களாக விளங்கின. இராமக்கிருஷ்ண மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை, அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, நொத்தாரிஸ் றோமன் கத்தோலிக்கப் பாடசாலைகளே அவைகள். இக் கிராமத்தில் மகாவித்தியாலயம் இல்லாதகுறையை நீக்கியதே ஆரையம்பதி மகாவித்தியாலயமாகும்.

இக்கிராமத்தில் வாழ்ந்த கல்வி மான்களினது வேண்டுகோளுக்கிணங்க எமது மாவட்டத்தின் அப்போதைய பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ செ. இராசதுரை அவர்களின் உதவியுடன் உதயமாகியதே இப்பாடசாலையாகும். 1957ம் ஆண்டு ஐப்பசி மாதம் 23ந் திகதி எமது பாடசாலையின் திறப்பு விழா மிகவும் கோலாகலமாக நடாத்தப்பட்டது.

இப் பாடசாலை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின், வகுப்பு 6 தொடக்கம் 11ம் வகுப்பு மாணவர்களை நிரந்தர மாணவர்களாக இணைத்துக் கொண்டது. இப் பாடசாலையின் கனிஷ்ட பிரிவினர் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையிலே கல்வி கற்றனர்.இப்பாடசாலையின் திறப்பு விழாவிற்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை அதிபர் திரு.ஏ. நாகையா அவர்களுடன் ஏனைய ஆசிரியர்களும் உயர்தர வகுப்பு மாணவர்களும் மேள வாத்திய இசையுடன் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர். இத் திறப்பு விழாவிற்கு பிரதம அதிதிகளாக பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ செ. இராசதுரை அவர்களும், அக் காலகட்டத்தில் அரசாங்க அதிபராக இருந்தவரும் எமது பிரதேசத்தின் கிராம சபைத் தலைவர் திரு.க.அமரசிங்கம் அவர்களும் வரவேற்கப்பட்டார்கள். இந் நிகழ்வின் பிரதம

அதிதியாக கலந்து கொண்ட அரசாங்க அதிபர் பாடசாலை பதிவு ஏட்டில் குறிப்பிடும்போது "இக்கிராமமக்கள் இங்கு சந்தோசமாக நடமாடுவதை என்னால் அவதானிக்க முடிகின்றது"எனக் குறிப்பிட்டுள்ளார்.

இப்பாடசாலையின் ஆளணியினரின் வரலாற்றை நோக்கின் அதிபர் உட்பட ஆசிரியர்கள் 12 பேரும் மாணவர்கள் 150 பேரும் ஆரம்பத்தில் இருந்தனர். இப் பாடசாலை அடுத்த வருடம் பொன்விழா காண்பதற்கு விளைந்து நிற்கும் இவ்வேளையில் மாணவர்களின் எண்ணிக்கை சுமார் 800 ஐக் கொண்டதாகவும் அதிபர் உட்பட ஆசிரியர்கள் 30 பேரைக் கொண்டிருப்பதுடன் முகாமைத்துவ உதவியாளர்,திட்டமிடல் நிதி உதவியாளர், விஞ்ஞான ஆய்வு கூட உதவியாளர், நூலக உதவியாளர் இவர்களோடு பாடசாலை சிற்றூழியர் மூவரையும் கொண்ட பாடசாலையாக விளங்குகின்றது.

ஆரம்பத்தில் தரம் 6 இல் இருந்து க.பொ.த(சா.த) வரை வகுப்புகளைக் கொண்ட இப் பாடசாலை 1984 இல் ஆரம்பப் பிரிவையும் தன்னுடன் இணைத்துக் கொண்டது. மற்றும் 1985 ல் க.பொ.த (உ..த) கலைப் பிரிவும் இப்பாடசாலையில் ஆரம்பிக்கப்பட்டது. தொடர்ந்து க.பொ.த. (உ.த) வர்த்தகப் பிரிவும் ஆரம்பிக்கப்பட்டு முழுமைத்துவம் கொண்ட பாடசாலையாக பிரகாசிக்கின்றது. இப் பாடசாலையின் விரிவாக்கத்திற்கு ஊக்கமும் ஆக்கமும் அளித்தவர் அக்கால கட்டத்திலே அதிபராக இருந்த திரு.இ.கணபதிப்பிள்ளையாவார்.

இப்பாடசாலையில் இது வரை பதினைந்து அதிபர்கள் கடமையாற்றி உள்ளனர். .திரு.ஏ. நாகையா அதிபர், திரு.வி.ரி.சின்னையா அதிபர், திரு.யோ. வீரசிங்கம் அதிபர், திரு.ஆர்.தவகுலரெட்ணம்,அதிபர்,திரு.எஸ்.சிவலிங்கம்அதிபர்,திரு.ஐ.பரமானந்தம்அதிபர்,திரு.சிறிஇராசசிங்கம் அதிபர் ,திரு.எஸ்.வாமதேவன் அதிபர்,திரு.இ.கணபதிப்பிள்ளைஅதிபர்,திரு.ரி.சச்சுதானந்தமுதலிஅதிபர் ,திரு.எஸ்.இராமச்சந்திரன் அதிபர், திரு.ஆர்.துரைராசசிங்கம் அதிபர் திரு.மு.சோமசுந்தரம்அதிபர்,திரு.சி.சுந்தரம்பிள்ளைஅதிபர்,திரு.ந.சிதம்பரமூர்த்திஅதிபர், திரு.ப..ஜீவானந்தம் அதிபர், தற்போது திரு.மா. தங்கவடிவேல் அதிபராகும்.

இவ் வித்தியாலயத்தின் பௌதிக வள அபிவிருத்தியை நோக்கின், ஆரம்பகால கட்டத்தில் ஓர் விஞ்ஞான ஆய்வு கூடமும் மூன்று வகுப்பறைக் கட்டடங்களையும் கொண்டதாகஅமைந்திருந்தது. திரு.ஆர்.தவகுலரெத்தினம் அதிபரின் காலத்தில் அவரின் வேண்டுகோளுக்கிணங்க மேலும் ஓர் கட்டடம் இப்பாடசாலையில் அமைக்கப்பட்டது. திரு.எஸ்.வாமதேவன் அதிபரின் கால கட்டத்தில் மேலும் ஒரு மண்டபமும் அமைக்கப்பட்டது. பின் திரு.ஆர். துரைராசசிங்கம் அதிபரின் காலத்தில் அவரின் முயற்சியால் இப் பாடசாலையில் மாடிக் கட்டடம் ஒன்று

அமைக்கப்பட்டது. மேலும் மாணவர் தொகைக்கேற்ப மண்டபம் போதாமையினால் இடப்பற்றாக்குறை காணப்பட்டது. இதனை நிவர்த்தி செய்யும் முகமாக, மேலும் ஒரு கட்டடம் தேவையாக இருந்தது. இது திரு.ந. சிதம்பர மூர்த்தி அதிபரின் முயற்சியால் அமைக்கப்பட்டது. மற்றும் இப்பாடசாலையின் நீர் குழாயின் அமைப்பு கணினி ஆய்வு கூடம் பாடசாலையின் சுற்று மதில்பிரதான வாயில் அமைப்பு என்பன தற்போதைய அதிபர் திரு.மா. தங்கவடிவேல் அவர்களின் கடும் முயற்சியின் பயனாக இப்பாடசாலையில் அமைக்கப்பட்டுள்ளது.

இறுதியாக இப் பாடசாலையின் எதிர்வு கூறல் ஒன்றையும் கூறாமல் இருக்க முடியாது. அதிபர் ஆசிரியர்களின் கடின உழைப்பும் உறுதியும் இப் பாடசாலையின் புதியதோர் ஒளிக்கீற்று பிரகாசிக்கலாம் என்பது திடமானதாக உள்ளது. அதாவது தற்போதைய அதிபரின் திடமான உறுதியானதொரு எண்ணம் யாதெனில், இப் பாடசாலையில் இவ் வருடத்திலே க.பொ.த.(உ.த) பிரிவில் விஞ்ஞானப் பிரிவை ஏற்படுத்துவதுடன் இதனை ஓர் தேசிய பாடசாலையாக தரம் உயர்த்த வேண்டும் என்பதேயாகும். அவரின் முயற்சி நிறைவேற எல்லாம் வல்ல இறைவனும் துணைநிற்க வேண்டும் எனக் கூறி முடிக்கின்றேன்.

திருமதி.சி.பத்மநாதன்
(பிரதி அதிபர்)

# உயர்ந்த மனிதனின் உன்னத கருத்துக்கள்.

♣ மனதில் இருப்பதையே சொல்ல வேண்டும், இல்லையெனில் மௌனமாக இருப்பதே சிறப்பானது. - புத்தர்

♣ நாம் உலகத்தை தவறாகப் புரிந்து கொண்டு அது நம்மை ஏமாற்றுவதாகக் கூறுகிறோம். -தாகூர்

♣ கற்காமல் இருப்பதை விட பிறக்காமல் இருப்பதே மேல்! ஏனெனில் அறியாமைதான் துர்ப்பாக்கியத்தின் மூலவேர். - பிளேட்டே

♣ உலகின் சிறப்புக்கள் அனைத்திலும் உயர்ந்தது அசைவற்ற, அமைதியான மனச்சாட்சியாகும். –ஷேக்ஸ்பியர்

♣ நான் என் தாய்க்கு மிகவும் கடமைப் பட்டிருக்கிறேன் -சுவாமி விவேகானந்தர்.

♣ இலட்சியத்திற்கு உழைப்பவனை யாராலும் வெல்ல முடியாது - காந்தியடிகள்

ஊக்கமுடைய மனிதன் தன் கடமைகளைத் தொடர்ந்துசெய்து கொண்டே இருப்பான். – எமர்சன்

♣ நான் எப்போதும் அவசரப்பட்டாலும் ஒரு போதும் பரபரப்பு அடைவதில்லை - ஜான்வெஸ்லி

♣ சிந்தனை செய்யும் தனித்திறன் காரணமாகவே மனிதன் உயர்ந்தவனாகக் கருதப்படுகின்றான். –ஐன்ஸ்டீன்

♣ எந்த விதமான அதிகார வர்க்கத்தில் இருந்தாலும் பொறுப்புணர்ச்சியுடன் செயல்பட வேண்டும். -காமராஜர்

உங்கள் மனதில் உண்மையும் பெருந்தன்மையும் இருக்குமானால் அதுவே இயற்கை அழகு - ஜி.டி நாயுடு

♣ நூல் நிலையம் இல்லாத வீடு உயிரில்லாத உடல்போன்றது.
– தோமஸ்அல்வாஎடிசன்

♣ புகழ்ச்சியை விட கண்டனம் அவ்வளவு பெரிய ஆபத்தைவிளைவித்து விடாது.
-எமர்சன்

♣ அறியாமையே கஸ்டங்கள் அனைத்திற்கும் காரணம்.
-பிளேட்டே

♣ சொல்லும் செயலும் பொருந்தி வாழ்கிற மனிதனே உலகில் மிகவும் மகிழ்ச்சியாக வாழும் மனிதன்
- பண்டிதர் நேரு

♣ என் வெற்றிகளுக்கு ஒரு வீதம் அறிவும் தொண்ணூற்றொன்பதுவீதம் உழைப்பும் தான் காரணம்.
-தோமஸ் அல்வா எடிசன்

நல்லவற்றைக் கூட்டிக் கொள் , தீயவற்றறைக் கழித்துக்கொள் , அன்பைப் பெருக்கிக்கொள், வாழ்க்கையை நன்கு வகுத்துக்கொள். – எமர்சர்

♣ ஒரு நல்ல புத்தகம் ஒரு நல்ல மனிதனுக்கு நல்ல சொத்தாகும். – வில்லியம் காஸ்விட்

-திருமதி. ர. மகேந்திரன்
பயிற்றப்பட்டகணித ஆசிரியை

## -அறிவியல்-

01.பூரண வளர்ச்சியளிக்கும் உணவு அல்லாத மற்றொன்று எது? விட்டமின்

02.காபோஹைதரேட் செடியின் எப்பகுதியில் தயாரிக்கப்படும்? ஸ்டார்ச்

03.ஸ்டார்ச் வேர்களில் சேமிக்கப்பட்டால் அந்த வேரின் பெயர் எவ்வாறு அழைக்கப்படும்?
கிழங்கு

04 தாவரங்களில் பெரும்பாலானவை ஸ்டார்ச்சை எவ்விடத்தில் சேகரித்து வைக்கின்றன? காய்களில், கனிகளில்

05.ஸ்டார்ச் தயாரிக்க இன்றியமையாத ஒன்று எது?
சூரிய ஒளி

06.இலையில் உணவு தயாரிக்க இயற்கையாக உள்ள அமைப்பு எது? குளோரோபில்

07. குளோரோபில் என்பது தமிழில் எப்பெயரால் அழைக்கப்படுகிறது? பச்சையம்

-மாணவர்-

# மண்.

மண்ணானது பூமியின் மேற்பரப்பைக் கொண்டதும், தாவர வளர்ச்சிக்கு உதவுவதுமான, ஓர் தளர்வான ஊடகமாகும். இது பொதுவாகசேதன, அசேதனப் பொருட்களுடன் சேர்ந்த ஒரு திடமான அல்லது தளர்வான கலவையாகக் காணப்படும். மண்ணில் காணப்படும் அசேதனப் பொருட்கள் (INORGANIC COMPOUND), பாறைகள் (ROCKS), மற்றும் கனிப்பொருட்கள் (MINERALS) என்பன சூழற்காரணிகள், இரசாயனத்தாக்கங்கள், மற்றும் இயற்கை மாற்றங்கள் போன்ற தொடர்ச்சியான அழிவுகளினால் (DECOMPOSITION) உருவாக்கப்பட்டவையாகும். சேதனப் பொருட்களாவன, மண்ணிலே காணப்படும் நுண்ணுயிர்களால் தாவர, மற்றும் சேதனப் பொருட்களின் அழிவுகளால் உருவாகுபவையாகும்.

மண்ணின் தன்மையானது, அது காணப்படும் இடத்திற்கேற்ப வேறுபடுகின்றது. ஓர் இடத்தில் காணப்படும் மண்ணின் தன்மை அப்பிரதேசத்தில் காணப்படும் இரசாயனத்தன்மை (CHEMICAL NATURE), பௌதிகத்தன்மை (PHYSICAL NATURE) என்பவற்றில் தங்கியிருக்கும். இத்துடன் மண்ணில் வளரும் தாவரங்கள், மற்றும் தாவரங்களின் எண்ணிக்கை என்பவற்றிலும் தங்கியுள்ளது. மற்றைய காரணியாக நிலமட்டத்தைக் குறிப்பிடலாம். இது நிலப்பரப்பு சரிவாகவோ, சமதரையாகவோ காணப்படுவதையொட்டி வேறுபடும். மேலும் பண்ணை வளர்ப்பு (FARMS), கட்டிடங்கள் அமைத்தல் (CONSTRUCTION OF BUILDINGS) போன்றவற்றால் ஏற்படும் குழப்பங்களும் (DISRUPTIONS) காரணிகளாக அமையும்.

மண்ணானது நிறம் (COLOUR), தன்மை (TEXTURE), இரசாயனக்கலவை (ORGANIC MIXTURE), மற்றும் அவற்றில் வளரும் தாவர வகை என்பவற்றைப் பொறுத்து வேறுபடும். மேலும் மண்ணானது ஓர் உயிரினத் தொகுதியைத் தன்னகத்தே கொண்டு காணப்படுகின்றது. அதாவது காற்று (AIR), நீர் (WATER) மற்றும் தாவர வாழ்க்கைக்குத் தேவையான சூரிய ஒளி (SUN LIGHT) என்பவற்றை உள்ளடக்கியுள்ளது.

தாவரங்களில் நிலவும் உணவுச் சங்கிலியிலிருந்து (FOOD CHAIN) முக்கிய இரசாயனத் தொடர்பாடான ஒளித்தொகுப்பு

**(PHOTOSYNTHESIS)** மூலம் தாவரங்கள் சூரிய ஒளியை சக்தியாக மாற்றீடு செய்கின்றன. இச்செயற்பாடானது மண்ணில் தாவரங்கள் செய்து கொள்ளப்படும் பரிமாற்றத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும். எனவே மண் இல்லாவிட்டால் தாவரங்களில் செயற்பாடுகள் நடைபெறமுடியாது. தாவரங்கள் தொடக்கம் மனிதர்கள் உட்பட உணவுச்சங்கிலித் தொடர்பைக் காணமுடியாது. பூக்கள் இல்லை, பூங்காக்கள் இல்லை, புல்வெளிகள் இல்லை, காடுகள் இல்லை இவ்வாறு பல உயிர்ச் சூழற் தொகுதியைக் **(ECOSYSTEM)** காணமுடியாது. எனவே பூமியில் உயிரினங்களின் வாழ்க்கைக்கு மண் மிக முக்கியமானதொன்றாகும்.

மண்ணின் வகைகள் **(CATERGORIES OF SOIL)** மற்றும் அதன் தன்மை **(TEXTURE)** என்பவற்றின் கற்கையை மண்விஞ்ஞானம் **(SCIENCE OF SOIL)** என்று அழைக்கப்படும். மண்விஞ்ஞானமானது, விவசாயம், தாவர வளர்ச்சிக்குத் தேவையான வளத்தன்மையை பொருத்தமானவிதத்தில் **(FERTINENTLY)** விவசாயிகள் பராமரிப்பதற்கு மண்விஞ்ஞானம் பயனுள்ளதாக இருக்கின்றது.

பொறியியல் **(ENGINEERING)**, மற்றும் கட்டடங்கள் நிர்மாணிப்பதற்கும் **(CONSTRUCTION OF BUILDING)** மண்ணின் தன்மைபற்றிய அறிவு அவசியமாகும். பொதுவாக மண் பொறியியலாளர்கள் **(SOIL TESTERS)**, கட்டடங்கள்**(BUILDING)** வீதிகள் **(STREETS)**, தொழிற்சாலைகள் **(FACTORIES)**, கூட்டுத் தொடர் மாடி மனைகள் **(FLATS)**, போன்றவற்றை நிர்மாணிப்பதற்கு முன்பு, மண் ஆராய்ச்சியில் ஈடுபடுகின்றனர். மண்ணின் உள்ளடக்கம் பற்றி ஆராய்ந்தால்,

**01. மண்ணின் உள்ளடக்கம்:- (COMPOSITION OF SOILS)**

மண்ணானது சேதன, அசேதன பொருட்கள் சேர்ந்த முப்பத்து மூன்று (33) சேர்வைகளைக் கொண்டும், கனிப்பொருட்கள், காற்று, நீர், மற்றும் தாவர, விலங்குக்கழிவுகள் என்பவற்றைக் கொண்டும் காணப்படும். சாதாரண மண்சேர்வையில் கனிப்பொருட்கள் மற்றும் சேதனப் பொருட்கள், மண்ணின் மொத்தக் கலவையில் 50% ஐ உள்ளடக்குவதுடன் மிகுதி 50% ஐ மண்வெளியாகக் கொண்டிருக்கும். இவ்வெளி அல்லது மண்துளையினூடாக மண்ணீர், வளி என்பவற்றின் போக்குவரத்து நிகழும். இத்துளை அல்லது வெளியினூடாக நுண்ணுயிர்களின் நடமாட்டம் மற்றும் சிறிய விலங்குகள், தாவர வேர்வளர்ச்சிகள் என்பன நடைபெறுகின்றன.

அ. மண்ணிலுள்ள அசேதனப் பொருட்கள்:- **(INORGANIC COMPOUND IN SOIL)**

மண்ணில் காணப்படும் கனிப்பொருட்களின் துணிக்கைகள் 2.0mm விட்டத்திலும் குறைவானதாக இருக்கும். இவ்வாறு துணிக்கைகளின் அளவுக்கேற்ப மண்விஞ்ஞானிகள்( **SCIENCTIST OF SOIL)** மண்ணை மூன்று வகைகளாக வகைப்படுத்தியுள்ளனர். அவையாவன

01. மணல் **(SAND)**
02. வண்டல் ( **SILT)**
03. களி **(CLAY)** என்பவைகளாகும். ஐக்கிய அமெரிக்கா விஞ்ஞானத்திணைக்களத்தின் வகைப்படுத்தலுக்கமைய துணிக்கைகளின் அளவுகளாவன.,

01. மணல் **(SAND)** – (0.05**MM** – 2.00**MM**வரை)
02. வண்டல் **(SILT)** – ( 0.002**MM** – 0.05**MM** வரை)
03. களி **(CLAY)** - ( 0.002**MM** இற்குச் சிறியவை)

**கனிப்பொருட்கள்:-**

மண்தோன்றிய மூலகங்களுக்கு ஏற்ப இவற்றின் அளவு வேறுபடும். தாவரங்களுக்குத் தேவையான கனிப்பொருட்கள், கல்சியம் **(CA)**, மகனீசியம்**(MG)**, பொசுபரசு**(P)** கந்தகம்**(S)**, மங்கனீசு**(MN)** என்பனவாகும்.

**ஆ. சேதனப் பொருட்கள்:-**

மண்ணில் காணப்படும் மற்றைய முக்கிய பொருள் சேதனப் பொருட்களாகும். இவை தாவர மீதிகள், தாவர வேர்கள், தாவரத்திலிருந்து விழும் ,தாவர இலைகள் போன்றவை இறந்து உக்கலடைவதால் மண்ணுடன் சேர்ந்து மண்ணின் வளத்தை அதிகரிக்கச் செய்யும். அத்துடன் மண்ணிலுள்ள நுண்ணுயிர்களால் மண்புழுக்கள், கறையான்கள், அட்டைகள், பூரான்கள், மற்றும் நுண்ணங்கிகளாவன பற்றீரியா, பங்கசு போன்றவைகள் காணப்படுவதுடன், இவற்றின் எச்சங்களும், சுரப்புப் பொருட்களும், மண்ணுடன் கலந்து அமில, காரத்தன்மையையும், **PH** அளவையும் தோற்றுவிக்கின்றன.

**PH பெறுமானம்.**

அமிலத்தன்மை கூடியமண் **PH** பெறுமானம் குறைந்ததாகவும், காரத்தன்மை கூடியமண் **PH** பெறுமானம் கூடியதாகவும் காணப்படும். நடுநிலையான மண் **PH** பெறுமானம் 7 ஆகவும்

காணப்படும். தாவர வளர்ச்சிக்கு நடுநிலையான மண்ணே உகந்ததாகும்.

### இ. நீர் (WATER)

மண் விஞ்ஞானிகள் மண்ணின் தன்மையை நீர் வடிந்து செல்லும் வேகத்தைக் கொண்டு வகைப்படுத்துவர். மண்ணில் நீர் மண்துளைகளினூடாக புவியீர்ப்புச் சக்திக்கு இணங்க நுண்துளை அசைவினால் செல்கின்றது. இவ்வாறு உட்புகும் நீர் தாவரவேர்களினூடாக தேவையானளவு உள்ளெடுக்கப்படுகிறது.

### ஈ, மண்ணின் பண்புகள் (CHARACTERS OF SOILS)

### நிறம் (COLOUR)

மண்ணானது பலவகை நிறங்களில் காணப்படும். இது மங்கிய கபில நிறம், சிவப்பு, செம்மஞ்சள், மஞ்சள், நரைநிறம், நீலம், பச்சை போன்ற நிறங்களில் காணப்படும்.

### உ. தன்மை (NATURE)

மண்ணின் தன்மையானது அதில் காணப்படும் முக்கிய கனிப்பொருட்களின் வகைகளைப் பொறுத்து மணல், வண்டல், களி என வகைப்படுத்தப்படுகின்றது. மண்ணின் வளம் மண்வகையைப் பொறுத்து வேறுபடும். பெரிய துளைகளையுடைய மண் வகை நீரை இலகுவில் வடியவிடுவதால் குறைந்த வளத்தன்மையைக் கொண்டிருக்கும். இது பொதுவாக மணல் மண் எனப்படும். இம் மணல் தாவர வளர்ச்சிக்கு, பயிர்ச்செய்கைக்கு ஏற்றதல்ல. நடுத்தர வகை மண் (இருவாட்டி மண் அல்லது தோட்ட மண்) நீரை அளவாக வடிய விட்டு சேதனப் பொருட்களை உள்ளடக்கியதாகக் காணப்படும். இது வளத்தன்மை கூடியதாகவும். மணல், உக்கல், அடையல், களி, என்பவற்றை அளவாகவும் கொண்டு காணப்படும். இதுவே தாவர வளர்ச்சிக்கும், பயிர்ச்செய்கைக்கும் ஏற்ற மண்ணாகும். மண் உருவாவதற்கு மிக நீண்ட காலம் தேவைப்படும். ஆயிரம் அல்லது மில்லியன் ஆண்டுகள் கூட எடுக்கலாம். வளர்ந்து வரும் சனத்தொகைக்கு ஏற்ப உணவுத் தேவையை ஈடுசெய்வதற்கும், பயிர்களின் உற்பத்தியை பெருக்குவதற்கும், நிலங்களை அழிவிலிருந்து காப்பாற்றுவதற்கும் மண்ணானது மிக மிக இன்றியமையாதொன்றாகும். ஆகவே இப் பெறுமதி மிக்க மண்ணை அழிவிலிருந்து பாதுகாப்பது மனித நெஞ்சங்கள் ஒவ்வொன்றினதும் தலையாய கடமையென்று கூறினால் அது மிகையாகாது.

நன்றி.

திருமதி. ப. தயாபரன்,
ஆசிரியை (பயிற்றப்பட்ட விஞ்ஞானம்)



## இன்றைய கல்வி நிலையின் ஆரம்பப் பிரிவு.

21ம் நூற்றாண்டில் காலடி எடுத்து வைத்திருக்கும் நாம் இன்றைய கல்வி நிலையும் அதன் வளர்ச்சியும் பற்றி நோக்குவது இன்றியமையாததொன்றாக கருதப்படுகிறது.

அவ் வகையில் நாம் ஆரம்பப்பிரிவில் கல்வி கற்கும் மாணவர்களின் நிலை பற்றியும், கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் நிலை பற்றியும் தெளிவான ஒரு எண்ணக்கருத்தை வளர்த்துக் கொள்வது அவசியமானது. இன்றைய நிலையில் முதலாம் நிலை இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை என ஆரம்பப் பிரிவுகளை பிரித்து அதற்கமைவாகவே கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் நடைபெறுகின்றன.

இந் நிலையில், நிலை ஒன்று மாணவர்களின் கற்றல் செயற்பாடானது, ஆசிரியர் பெற்றோர் கைகளிலேயே தங்கியுள்ளது. எல்லோரும் சொல்கின்ற ஓர் வசனம் "பலமான அத்திவாரம் இல்லாத வீடு உறுதியற்றதாகும்" சரியான முறையில் அத்திவாரம் இடப்பட வேண்டும். இவ்வாறு செய்கின்ற போது தான், பெற்றோரினதும் ஆசிரியரினதும் தொடர்பாடல் அதிகரிக்கின்றது. இதன் மூலம் குழந்தையானது மகிழ்ச்சிகரமான கற்றலைப் பெற்று கொள்கின்றது என எண்ணத் தோன்றுகின்றது. " அச்சாணி இல்லாத தேர் முச்சாணும் ஓடாது" என்ற கூற்றிற்கிணங்க ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு முழுமையாக ஆசிரியர்கள் தங்களை அர்ப்பணித்து செயற்படுவது கற்பித்தலின் முதல் வளர்ச்சிப் படியாக கருத்தில் கொள்ளலாம்.

கற்றலின் அடுத்த நிலையான இரண்டாம் நிலை மாணவர்கள் தொடர்பாகவும் தொட்டு செல்ல வேண்டிய கடப்பாடு எமக்கு இருக்கின்றது. மாணவர்கள் எழுத்துலகிற்கு முழுமையாக தன்னை அர்ப்பணித்து சுய கற்றல் செயற்பாட்டில் ஆர்வமுடன் ஈடுபடுகின்றார்கள். இந் நிலையில் பெற்றோர்கள் பெரும்பாலும் பிள்ளைகளின் கல்வியில் பலர் சிரத்தை கொள்வதும் சிலர் சிரத்தை காட்டாது இருப்பதும் பிள்ளையின் கல்வியில் சிறிது மாற்றத்தை ஏற்படுத்துகின்றது.

இதனைக் கருத்தில் கொண்டு ஆசிரியர்கள் செயற்படவேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

உதாரணமாக:-
வளப்பற்றாக்குறை, மாணவர்கள் வரவு ஒழுங்கின்மை, குடும்ப பொருளாதார பிரச்சனை இவ்வாறு இருக்கும் போது பெற்றோர் தனது பிள்ளைகள் பாடசாலைக்குச் சென்றால் போதும் என்ற எண்ணம் ஏற்படுவதாலும் பெற்றோரின் கவனக் குறைவாலும் பிள்ளைகள் கல்வியில் நலிவடைந்து செல்லும் போக்கை அவதானிக்க கூடியதாக உள்ளது. எது எவ்வாறாக இருந்தாலும்

தனது பிள்ளைகள் நாட்டின் நல்ல பிரஜையாக பரிணமிக்க வைப்பது ஆசிரியர்களின் கையில் மட்டுமல்ல பெற்றோர்களின் கையிலும் தங்கியுள்ளது எனக் கூற விளைகின்றேன்.

மூன்றாம் நிலை மாணவர்கள் பொதுவாக தாங்கள் சுயமாக சிந்தித்துக் கற்கும் ஆற்றல் கொண்டவர்களாக இருக்கிறார்கள். இருந்தும் கூட ஆசிரியர்களின் கரிசனை மிக அதிகமாக இருக்க வேண்டும். அவ்வகையில் அவர்களின் வேலைப்பழு அதிகரித்துக் கொண்டு செல்கின்றது. அத்துடன், புலமைப் பரிசில் பரீட்சைக்கும் மாணவர்களை ஆயத்தம் செய்ய வேண்டியவர்களாகவும் உள்ளனர். இதற்கு ஒரு சில மாணவர்களே தயாரான நிலையில் இருக்கின்றார்கள். சிலர் மீள் திறன் குறைந்தவர்களாகவும் காணப்படுகின்றார்கள். இப்படியான நிலையில் இருக்கும் மாணவர்களை ஆய்வுக்கு உட்படுத்தும் போது அவர்களின் குடும்பச் சூழல், பொருளாதார நிலை என்பன அவர்களுக்கு தடைக்கல்லாக அமைகின்றது. மீள் திறன் குறைவான மாணவர்களுக்கு ஏற்ற கல்வி முழுமையாக வழங்கப்பட்டாலும் கூட அவர்கள் அந்நிலையில் இருப்பதற்கு காரணம் அவர்களின் குடும்ப சூழலே ஆகும்.

இங்கு நான் ஒன்றைக் கூற விரும்புகிறேன் "கல்வி ஒரு பன் முகநோக்கு" எனும் நூலின் பேராசிரியர் சோ. சந்திரசேகரம் அவர்கள் பின்வருமாறு கூறியுள்ளதை நோக்கும் போது, பிள்ளையை வயது அடிப்படையில் குழுக்களாக பிரித்து கற்பிப்பது கல்வி முறையின் தோல்விக்கு முக்கிய காரணம் என்பது பல ஆய்வாளர்களின் கருத்தாகும் எனக் குறிப்பிடுகின்றார். இத்தகைய ஏற்பாட்டினால் நன்றாக படிக்கும் பிள்ளைகள் பிற பிள்ளைகள் தமது தராதரங்களை எட்டி பிடிக்கும் வரையில் காத்திருக்க வேண்டியுள்ளது. இதற்கு மாற்று ஏற்பாடுகள் எடுக்கப்படவேண்டும் என்பது எனது அபிப்பிராயமாகும்.

இறுதியாக கூறப்போனால் பாடசாலைகளில் ஆசிரியர்களின் பணி வெறுமனே கற்பித்தலோடு நின்று விடுவதில்லை மாணவர்களை முழுமையான மனிதர்களாக உருவாக்கும் பெரும் பணியும் ஆசிரியர்கள் கையில்தான் தங்கியுள்ளது. அதனை அவர்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். மாணவர்களின் பிரச்சனைக்கான மூலங்களை அறிந்து கொள்ள வேண்டும். பிரச்சனைகளின் தீர்வுக்கான முயற்சிகளை முன் வைப்பதற்கு சாதகமான உறவு நிலையையும் தளத்தையும் கட்டி எழுப்புவதன் மூலம் தமது முயற்சிகள் மாணவர்களில் ஏற்படுத்தும் தாக்கங்களை நுணுக்கமாக மதிப்பீடு செய்வதற்கு ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இவையாவும் ஆசிரியருக்கும், பெற்றோர்களுக்கும், மாணவர்களுக்கும் இடையில் வினைத்திறன் மிக்க தொடர்பாடல் முறைமையொன்றினை கட்டியெழுப்புவதன் மூலமே சாத்தியமாகும் எனலாம்.

(திருமதி. விஜயேஸ்வரி. மணிசேகரன்.) பயிற்றப்பட்ட ஆரம்பப் பிரிவு

## சமூக வாழ்க்கையில் சமயத்தின் முக்கியத்துவம்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்".

என்பது பொய்யா மொழி. மனிதன் இப் பூவுலகில் நன்நெறியில் வாழ்வதனால் அவனுக்கு வீட்டின்பம் கிடைப்பதோடு மட்டுமல்ல அவன் வாழ்ந்து கொண்டிருக்கும் சமூகத்திலும் நன்மதிப்பைப் பெறுவான். சமூகம் என்பது குறித்த ஒரு பிரதேசத்தில் வசிக்கும் பொது இலக்குகளையும் விழுமியங்களையும் கொண்ட மக்கட் கூட்டம். சமூகத்தின் உயர்வும் தாழ்வும் அச்சமூகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒவ்வொரு தனிமனிதனிலும் தங்கியுள்ளது.

பிறப்பு முதல் இறப்பு வரை சமூகத்தினுள் வாழும் மனிதன் தொடர்ச்சியாக சமூகமயமாக்கல் செயன் முறைக்கு உள்ளாகின்றான். ஒவ்வொரு தனி மனிதனும் தனது பிறப்புரிமையால் பெற்றுக் கொள்ளும் ஆற்றல்களை விட அவன் வாழும் போது செய்யும் செயல் முறைகளாலும் நடத்தை மாற்றங்களாலும் மனப்பாங்குகளாலும் சமூகத்தின் வளர்ச்சிக்கு உதவுகின்றான்.

சமூகமென்பது பல குடும்பங்கள் ஒன்று சேர்ந்த ஒரு மக்கள் கூட்டம் என்பதால், இங்கு நாங்கள் சமூகத்தினையும் சமயத்தியையும் இணைத்து அவதானிப்பதோடு, தனிமனித வாழ்க்கையையும் சமயத்தையும் ஒன்றாக அவதானிப்பதும் அவசியமானது. எனவே முதலில் நாம் ஒவ்வொரு தனிமனித வாழ்க்கையிலும் சமயம் எவ்வாறு இணைந்துள்ளது என்பதை அவதானிப்போம்.

வாழ்க்கை வேறு சமயம் வேறு அன்று. வாழ்க்கையை நல்வாழ்க்கையாக நெறிப்படுத்துவது சமயமே. சமய நெறி நின்றொழுக வேண்டியது ஒவ்வொரு தனி மனிதனதும் கடமையாம். ஏனெனில், வையகத்தில் உள்ள உயிரினங்களில் மனிதனை விட ஏனைய உயிரினங்களுக்கு சாதி சமய வேறுபாடுகள் இல்லை . அவற்றுக்கு நல்லதையும் தீயதையும் பிரித்தறியக் கூடிய பகுத்தறிவும் இல்லை. மனிதனே பகுத்தறிவு என்னும் ஆறாவது அறிவை உடையவன். இதனால் அவன் நல்லதையும், கெட்டதையும் பிரித்தறியக் கூடியவனாக இருக்கிறான். மனிதப் பிறவியினால் தான் முத்தியின்பத்தை பெற்றுக் கொள்ள தான் என்ன செய்ய வேண்டும் என்பதை அறிந்து கொள்ள முடியும். அதனாலேதான் மனிதப் பிறவி இ ப்பூவுலகிலே தேவையானது என்கின்றனர் ஆன்றோர். "அரிது அரிது மானிடராதல் அரிது" என ஔவையாரும் "மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மானிலத்தே" என்று அப்பரும் கூறியுள்ளார்.

ஆறாவது அறிவு விளங்கப் பெற்று அதன் வழி நிற்கும் மனிதன் தன்னுயிரை போலவே மன்னுயிரையும் பேணுவான், இரக்கமுடையவனாக இருப்பான்,

தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்வான், பஞ்சமா பாதகங்களைச் செய்வதற்கு அஞ்சுவான், பிற உயிர்களின் துன்பத்தை தனக்கு நேர்ந்த துன்பமாக கருதுவான்.

சமயம் மனிதனில் உள்ள தெய்வத் தன்மையைத் தூண்டி விட வேண்டும். அவனைச் சன் மார்க்கத்தில் செலுத்த வேண்டும், சகோதரத் தன்மையை வளர்க்க வேண்டும், பிற மதங்களை வெறுக்காமல் நாம் அதனை மதிக்க பழகிக் கொள்ள வேண்டும். உலகிலே தோன்றிய மெய்ஞானிகள் அனைவரும் எவ்வுயிரையும் தம்மைப் போல் கருதி வழிபடும் சமய வாழ்வையே அறிவுறுத்தியுள்ளனர். உலகிலுள்ள எல்லாச் சமயங்களும் தன்னுயிர் போல பிறர் உயிர் பேணும் பண்பினையே ஒருமுகமாக வலியுறுத்துகின்றன. சைவ சமயமும் இப் பண்பினையே வலியுறுத்தி நிற்கின்றது.

விஞ்ஞான முன்னேற்றமடைந்த இவ் இருபத்தோராம் நூற்றாண்டில், உலகில் எங்கு பார்த்தாலும் கொலை, களவு, கொள்ளை, வறுமை, நோய், பயங்கரவாதம் என்பன போன்ற தீய செயல்களே அதிகரித்துக் காணப்படுகின்றன. சமய விருப்பும், சாந்தியும், நற்பண்பும், சமாதானமும் குறைந்து கொண்டே செல்கின்றன. இப் பண்புகள் விருத்தியடைய வேண்டுமாயின், அது தனி மனிதனிலிருந்து ஆரம்பித்து குடும்பத்தினூடாக சமூகத்தினிடையே பரவி நாட்டிற்கும் உலகிற்குமாக பயனளிக்க வேண்டும். இந்த நிலமை குறிப்பாக சமய நெறி கற்பதன் மூலமே உருவாகும்.

சமய வாழ்வு பெறாத மனிதன் இன்னும் பிறப்பு எடுக்காதவன் என்றே கூறலாம். மனிதப் பிறவியின் நோக்கம், உண்டு களித்து உறங்கி மாழ்வதன்று. நான் யார்? என் உள்ளமென்பது யாது? ஞானம் என்பது என்ன? என்னை யார் அறிவார்? என்று தன்னை தானே ஆராய்தல் வேண்டும். அது மட்டுமல்லாது உலகு, உயிர், கடவுள் எனும் மூன்றையும் நீக்கி முழு அறிவு விளக்கம் பெறுபவனே உண்மை மனிதனாகிறான். இதுவே மனிதப் பிறவியின் நோக்கமாகின்றது.

இவ்வாறு அறியாமை நீக்கப் பட்டோர் அறியாமை நீங்கப் பெறாதவர்களுக்கு தாம் கண்ட மெய்மையை உணர்த்துவர். இவையே அனுபூதி மான்களின் அனுபவக்கூற்றுக்களாகின்றன. இக் கருத்துக்களே அறிவு நூல்கள் ஆகின்றன. அனுபூதி மான்களாலும், சமயப் பெரியார்களாலும் சமூக நல்வாழ்விற்காக முறைப்படுத்தப்பட்டனவே நால் வகை வாழ்க்கை நிலைகளாகும்.. சமூகத்துடன் ஒன்றிணைந்து சமுதாயத்தினை படிப்படியாக ஆன்மீக உச்ச நிலைக்க கொண்டு செல்ல வல்லன. இவ் ஒழுக்க நெறிகள் ஒவ்வொன்றும் ஒரு தனி மனிதன் எங்ஙனம் வாழ வேண்டும் என்பதையே எடுத்துக்கூறுகின்றது.

அன்பே சிவம் என்பது சைவ சமயத்தின் அடிப்படை தத்துவம். அன்பை வளர்ப்பதற்காகவே மக்களின் வாழ்க்கையை இல்லறம் என்றும் துறவறம் என்றும் இரு நிலைகளில் வைத்து நமது சமயம் நெறிப்படுத்துகின்றது.இல்லறத்திற்கு அன்பே உயிர் நிலை என்றும்

திருவள்ளுவர் கூறுகின்றார். அவர் கூறும் இல்லறவியல் இல்வாழ்க்கையானது அன்பை வளர்ப்பதற்குரிய ஒரு பயிற்சிக் களமாக அமைகின்றது. இளமைப் பருவத்தில் மனிதத் தன்மை மிகுந்தவர்களாக இருந்தாலும் இல்வாழ்க்கையில் ஈடுபடும் பொழுது வாழ்க்கையெனும் நீரோட்டத்தில் அது மறக்கப்படுகிறது. தம் பிள்ளைகளுக்கான தன்நலத்தை மறந்த அன்பினை அவர்கள் பால் செலுத்தப் பழகும் போது, அவ்வன்பு படிப்படியாக விரிந்து சமூகம் அளவிலாத மலர்ச்சியடைய வழிவகுக்கப்படுவதை அவதானிக்கலாம். இதுவே அவர்களைத் தொண்டு வாழ்க்கைக்கும் அறச் செயலுக்கும் இட்டுச் செல்கின்றது. அறச் செயல்கள் பல வகைப்படும் அவற்றுள் பின்வருவன முக்கியமானவை.

01. அறவைச் சோறு
02. அறவைத் தூரியம்
03. அறவைப் பிணம் சுடுதல்
04. அறு சமயத்தொருக்கு உண்டி
05. ஆதுலர் சாலை
06. ஐயம்
07. ஓதுவார்க்கு உணவு
08. கன்னிகா தானம்
09. கா
10. சிறைச்சோறு
11. தடம்
12. தண்ணீர்ப்பந்தல்
13. நடைத் தின்பண்டம்
14. நோய் மருந்து
15. பசுவுக்கு வாயுறை
16. பிறரறங் காத்தல்
17. மகப்பிரசவித்தல்
19. மடம்
20. விலை கொடுத்து கொலையுயிர் மீட்டல்.

இத்கைய அறங்கள் சமூக வாழ்க்கைக்கு தேவையானவை. இவ்வறங்கள் சமூகத்தில் ஒருவர் மற்றவருக்கு செய்யக் கூடியனவாய் இருப்பதனால் இவற்றைக் கடமைகள் என்றே கூறலாம். சைவ சமயம் இவற்றை பசு புண்ணியங்கள் என்று கூறுகிறது. முத்தியின்பத்தில் விருப்புடையோர் இப்புண்ணியங்களைச் செய்யும் பொழுது இறைவனுடைய திருவருளே என்னைக் கருவியாகக் கொண்டு இவற்றைச் செய்விக்கிறது என்னும் உணர்வோடு செய்வார்களேயானால் அச் செயல்களில் பலன்கள் செய்பவர்களை சென்றடைகின்றன..

அறுபத்து மூன்று நாயன்மார்களுள் அப்பரடிகள், இளையான்குடிமாற நாயனார், மெய்ப்பொருள் நாயனார் என்போர் இல்லறத்தில் இருந்து கொண்டு பசு புண்ணியங்கள் செய்து முத்தியடைந்தவர்கள். ஆசிரம தர்மங்களும் மனத்தைப் பக்குவப்

படுத்தி துறவறத்தை நாடி முத்தி பெற வேண்டும் என்பதனையே வற்புறுத்துகின்றன. தகுந்த மனப்பக்குவம் பெற்ற துறவறத்தை மேற்கொள்வதையே திருக்குறளும் அறம், பொருள், இன்பம், வீடு என வகுத்துக் கூறுகிறது.

இல்லற நிலையில் அன்பு என்பது உயிர் நாடியாக அமைகின்றது. இது அருள் நிலைக்கு வழிகாட்டுவதாகும். துறவறத்திற்கு அருள் நிலையே முக்கியமானதாகும். எனவே அருள் நிலை பெற அன்பு தேவைப்படுகிறது. அது சமூகத்தில் வாழ்கின்ற வாழ்க்கையில் இன்றியமையாததாகின்றது எனலாம். தாயுமானவர் இவ் அன்பு பற்றி கூறும் போது.

" எவ்வுயிரும் தன்னுயிர் போல் எண்ணி இரங்கவும்
நின் தெய்வ அருட்கருனை செய்யாய் பராபரமே"

என்கிறார். எல்லா உயிர்களும் ஒன்றென்பதால் அவ்வுயிர்களுக்கு பணி செய்வதே இன்ப நிலை என்றார் தாயுமானவர்.

" அன்பர் பணி செய்யவெனை ஆளாக்கி விட்டு விட்டால்
இன்பநிலை தானே வந்தெய்யும் பராபரமே"

என்கிறார் தாயுமனவர்

" மன்னுயிர் ஓம்பி அருளாள்வதற்கு இல் என்ப
தன்னுயிர் அஞ்சும் வினை"

என்கிறார் திருவள்ளுவர்

எல்லா உயிர்களிடமும் அன்பு காட்டும் போது அது அருளாக மாறுகிறது. அவ்வாறு அன்பு பாராட்டுவோர் உள்ளத்தை அருள் நிறைத்துக் கொள்வதால் அவர்கள் எதற்கும் அஞ்சுவதில்லை. திருநாவுக்கரசு நாயனாரின் வாழ்க்கை வரலாறு இதற்கு சிறந்த உதாரணமாகும். திருநாவுக்கரசரை சமணர்கள் நீற்றறையில் இட்டபோதும், யானையால் இடறப் பண்ணிய போதும், நஞ்சு கலந்த பாற்சோறு கொடுத்த போதும் அவர் நாமார்க்கும் குடியல்லோம் யமனை அஞ்சோம்" என்ற மன உறுதியோடு இருந்தமைக்கு அவர் மன்னுயிர் போற்றியதே எனலாம்.

உலகம் போற்றும் உத்தமர் காந்தி மகான் கூட தம் வாழ் நாள் முழுவதும் அன்பு, அகிம்சை. சத்தியம் என்ற ஆன்மீகப் பண்புகளையே போற்றி வாழ்ந்தார். இவர் சமூகத்தில் இருந்து கொண்டே அதற்கு சேவை செய்தவையே ஒரு தெய்வீக பணியாக கொண்டிருந்தார். படைப்பலம் இல்லாது, ஆயுதப் பலம் இல்லாது ஆன்மீக பலத்தினால் இந்தியாவுக்கு சுதந்திரம் பெற்றுக் கொடுத்தவர் இம் மகான்.

இதற்காக இவர் உபயோகித்தது சத்தியம், அன்பு, அகிம்சை, என்னும் கருவிகளேயாகும். சத்தியத்தை உயர்வதற்கு உதவக்கூடிய கருவி அன்பு அல்லது அகிம்சை என்று காந்தி அடிகள் உணர்ந்து அதன் வழி செயலாற்றினார். நமக்குள் இருக்கும் இறைவன் ஒவ்வோர் உயிருள்ளும் இருக்கிறார். உயிருக்குச் சேவை செய்தால் அது கடவுளுக்குச் செய்யும் சேவை என்று வாழ்ந்து காட்டியவர் காந்தியடிகள்.

மக்கள் சேவை மகேசன் சேவை என்ற இது சமூக வாழ்க்கையில் முக்கியத்துவம் பெறுகிறது. இதனைப் போன்றே தருமம் செய்தலை அவதானித்தோமாயின் "அறம் செய்ய விரும்பு" ஒளவையார் இரத்தினச் சுருக்கமாக கூறியதை அறம் என ஒரு பகுதியாக கூறுகின்றது திருக்குறள்.

" மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்
ஆகுவ தீது பிற"

என்றும்

" அழுக்காறு அவா வெகுளி இன்னாச் சொல் நான்கும்
இழுக்கா இயன்ற தறம்"

என்றும் கூறுகின்றது.

அறம் அருளோடு சேர்ந்து இருத்தல் வேண்டும். அருள் வழிப்பட்ட அறமே நிலை வேறுடையது. அருளை அடிப்படையாக கொள்ளாமல் செய்யும் அறம் ஞானம் இல்லாதவன் ஞானமின்மையால் தானே அழிந்து விடும் நிலைபோன்றது. இதனை

"தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால் தேரின்
அருளா தான் செய்யும் அறம்"

எனத் திருக்குறள் விளக்குகின்றது. அருள் வழிபட்ட அறமே வீட்டின்பத்தை கொடுக்கும் என்பதை,

" குலங்கெடுத்து கோள் நீக்க வல்லான் தன்னை
குலவகையன் மடப்பாவையிம் பாலானை" என்கிறார்

நாவுக்கரசர். அருணகிரநாதரும் அறம் செய்தலை

" அன்பறிவாம் என்னாது அறஞ்செய்க மற்றது
பொன்னுங் கால் பொன்றாத் துனை"

என்கிறது திருக்குறள். இழப்பவர்க்கும் வறியவர்க்கும் இரக்கத்துடன் ஈந்தால் அது மீண்டும் ஒன்றுக்கு நூறாக எமக்கு திரும்பக் கிடைக்கும் என்பது எமது சமூகத்தில் வயது முதிர்ந்தோர் கூறும் அறிவுரையாகும். ஒரு அவரை விதையை மண்ணில் போட்டால் அது ஆயிரக் கணக்கான அவரைக் காயாக எமக்குத் திருப்பி தருவது போலவும், தென்னை மரத்துக்கு தண்ணீர் விட்டு வளர்த்து அதன் இளநீரை பயனாகப் பெறுவது போலவும் அறத்தினால் நற்பயன் உண்டாகும்.

"நன்றி ஒருவர்க்கு செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொல் என வேண்டா- நின்று"
தளராவளர் தெங்கு தானுண்ட நீரைத்
தலையாலே தான் தருதலால்"

என்ற பாடலும் இதனையே கூறுகின்றது. மகாபாரத்திலே இதற்கு நல்ல உதாரணம் கூறப்படுகின்றது. பாண்டவர் வாழ்ந்த அஸ்தனாபுரத்திற்கு ஒரு சமயம் கண்ணபிரான் வந்திருந்தார். அரண்மனையில் உள்ள தாமரைத் தடாகத்தில் பாண்டவர்களுடன் கண்ணபிரானும் நீராடிய போது கண்ணபிரானுக்கு ஏற்பட்ட தர்ம சங்கடமான நிலையில் இருந்து காப்பாற்றியவர் திரௌபதியே. அன்று அவர் செய்த உதவியை துரியோதனன் சபையில் துச்சாதனன் துகிலுரிந்து மானபங்கம் செய்த போது,துகில் ஒன்றுக்கு ஆயிரமாக இலட்சமாக பெருகிக் கிடந்தன.

எனவே தனி மனித வாழ்க்கையை வாழ்வாங்கு வாழ்வதற்கு வழிகாட்டுவது சமயம். பல தனி மனிதர்கள் ஒன்று சேர்ந்த சமூக வாழ்க்கை பிறர் போற்றத் தகுந்த சமூகமாக மாறுவதற்கு வழிகாட்டுவது சமூக ஒழுக்கங்கள். சமூகத்தில் நிலை தடுமாறல், சமூகப் பிறழ்வு பெறாதது, சமூக வாழ்க்கையை சீராக நிலை தளம்பல் இல்லாமல் கொண்டு செலுத்துவது சமயம். சமயத்தில் கூறப்பட்ட அறநீதிக்கருத்துக்களும், ஒழுக்கவியற் கருத்துக்களும் மேலும் தேவார திருவாசகம் போன்ற சமய இலக்கியங்களும், அவற்றுக்கு மேலாக இந்நெறிமுறையில் நடைமுறை வாழ்க்கையாக வாழ்ந்து காட்டிய சமயப் பெரியார்களது வாழ்க்கை வரலாறுகளும் இதற்கு உதாரணமாக அமைகின்றன.

"நன்றி"

ஆக்கம். செல்வி .க. சுசிலாதேவி.
பயிற்றப்பட்ட சமயம்.

☞ எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது.

☞ எது நடக்கிறதோ அதுவும் நன்றாகவே நடக்கிறது.

☞ எது நடக்க இருக்கிறதோ அதுவும் நன்றாகவே நடக்கும்.

☞ உன்னுடையது எதை இழந்தாய் எதற்காக நீ அழுகிறாய்.

☞ எதை நீ கொண்டு வந்தாய்? எதை நீ இழப்பதற்கு

☞ எதை நீ படைத்திருக்கிறாய் அது வீணாகுவதற்கு....

-கீதாசாரம்-

# கடல் சுனாமி

எங்களின் வளமே
நீ என்பர்

உன்னை நம்பியே
ஆயிரமானோர் வாழ்வர்

நீ
அடிக்கடி கோபம் கொள்வதாக
கூறிக் கொள்வர்.

கடல் கோள் என்ற பெயரில்
கருக் கொண்ட வரலாறு
பல கூறும்.

இது,
இட்டுக்கட்டிய கற்பனை
என்றெண்ணிய எமக்கு

நீ
ஆயிரம் கிராமங்களை தின்ன
அலையாய் எழுந்த கதை மட்டும்
மனதில் மறையாது நிலைத்து நிற்குமே

ஆக்கம் :- திருமதி .வி. மணிசேகரம் (ஆசிரியை)
பயிற்றப்பட்ட ஆரம்பப்பிரிவு.

## ஒன்றின் மகிமை

ஏகபத்தினி பிரதன் - ஒரு மனைவியை மட்டும் உடையவன்

பதிவிரதை - ஒரு ஆடவனை மட்டும் கணவனாக கொண்டவள்

ஏகாமிய வாதம் - ஒன்றே இறைவன் என்பது

ஏக புதல்வன் - குடும்பத்திலே ஒரு மகனாக இருப்பவன்

ஏக புதல்வி - குடும்பத்திலே ஒரு மகளாக இருப்பவள்

ஏகப் பிரதி நிதி - அநேகமான மக்களின் விருப்பு வெறுப்பின்றி தெரிவுசெய்யப்பட்டவர்.

ஆக்கம்:- செல்வி. க. ரத்னப்பிரியா
தரம் :- 10 A

## மூன்றெழுத்து.

"கல்வி" என்ற மூன்றெழுத்து "வாழ்வு" என்ற மூன்றெழுத்தினை தீர்மானிக்கின்றது.

"அன்னை" தந்தை என்ற மூன்றெழுத்து "உயிர்" என்ற வாழ்வைக் கொடுப்பது போல "கல்வி" என்ற மூன்றெழுத்து அதனைப் பெற்றவரின் வாழ்வினை சிறக்கச்செய்து "தொழில்" என்ற மூன்றெழுத்தினை பெற உதவுகின்றது.

இதன் மூலம் "புகழ்" என்ற மூன்றெழுத்தையும் "பதவி" என்ற மூன்றெழுத்தையும் இதன் மூலம் "சவால்" என்ற மூன்றெழுத்தை சமாளிப்பதையும் இதன் மூலம் "பொறுமை" மற்றும் "அன்பு" என்ற மூன்றெழுத்தையும் பெற்றுக்கொள்ளவும், "பண்பு" என்ற மூன்றெழுத்தை வளர்த்துக் கொள்ளவும் "பொருள்" என்ற மூன்றெழுத்தையும் "பணம்" என்ற மூன்றெழுத்தை பெற்றுக் கொள்ளவும் "திறன்" எனும் மூன்றெழுத்தை வளர்த்துக் கொள்ளவும் "நேரம்" என்பதனை முகாமைத்துவம் செய்யவும் "சாதனை" என்ற மூன்றெழுத்தை அடைய ஊக்கம் கொடுப்பதும்"அறம்" செய்ய பழக்குவதும் ஒருவருக்கு "பெருமை"யை பெற்றுத்தருவதும் ஒருவருக்கு "பொறாமை" என்ற மூன்றெழுத்து இல்லாமல் செய்வதும் இவ்வாறாக "கல்வி" என்ற மூன்றெழுத்து இல்லாமல்வாழ்வு" என்ற மூன்றெழுத்து இல்லை.

-திருமதி.சு.தம்பிராசா
ஆய்வு கூடப் பணியாளர்.

# இசையின் பெருமை.

சங்கீதமானது செவிக்கு இன்பத்தை தரும் ஒலிகளைப் பற்றிய கலையாகும். அது சிறந்த கலைகளில் ஒன்றாகும். (Fine Arts) அதாவது நுண் கலை என்று சொல்லப்படும் சிறந்த கலைகளில் அது மிக்க மேன்மையான கலையாகும். மிருகங்கள், பண்டிதர்கள், பாமரர்கள், வயோதிபர்கள், குழந்தைகள் முதலிய எல்லோருக்கும் இன்பத்தைத் தரக்கூடியது சங்கீதமாகும். சங்கீதத்திற்கு "காந்தர்வ வேதம்" என்று பெயர். கடவுள் வழிபாடு செய்வதற்கும் கடவுளை அறிவதற்கும் சங்கீதம் ஒரு முக்கிய சாதனமாகும் இக் காரணம் பற்றியே சங்கீதத்தை ஒரு வித்தை என பெரியோர்கள் கூறுவர். கடவுள் நாத பிரம்மமாக விளங்குகிறார். அனேக மகான்கள் இசையால் வழிபட்டு நற்கதி அடைந்திருக்கிறார்கள். சுந்தர மூர்த்தி நாயனார் பாடியுள்ள திருவாவூர் தேவாரப் பதிகத்தில் "ஏழிசையாய் இசைப்பயனாய்" என்று கடவுளைப் பற்றி கூறி உள்ளது கவனிக்கத்தக்கது.

சங்கீதம் ஓர் உன்னத கலையாகும். அதை ஒரு தனிமொழி எனவும் கூறலாம். சாமர்த்தியமான வார்த்தையினால் வெளியிட முடியாத மிக நுட்பமான கருத்துக்களையும் இசையின் மூலமாக வெளியிட முடியும். மனிதன் தன்னுடைய யுக்தியினாலும் அறிவின் திறமையினாலும் வளர்த்த அருங் கலைகளில் சங்கீதமும் ஒன்று. மனிதனுக்கு கடவுள் கொடுத்துள்ள குரல் பேசுவதற்கு மட்டுமல்ல பாடுவதற்கும் கூடத்தான் என்பதை உணர வேண்டும். பாடும் பொழுது தான் ஒருவன் தன் குரலின் முழு பயனையும் அடைய முடியும். கைவிரல்களும் இசைக்கருவிகளை பயிலுவதற்காகவே வித்தியாசமான அசைவுகளுடன் அமைந்திருக்கின்றன.

உத்தமமான சங்கீதத்தையே நாம் அடிக்கடி கேட்க வேண்டும். அப்பொழுதுதான் உட்காதிலுள்ள நரம்புகளுக்கு உணர்ச்சி உண்டாகும். இக் காரணம் பற்றியே திருவள்ளுவர் செவி செல்வத்தை புகழ்ந்து கூறியுள்ளார்.

"செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம் அச்
செல்வத்துள் எல்லாம் தலை"

திருஞானசம்பந்தர் முதன் முதலில் பாடிய "தோடுடைய செவியன்" என்னும் தேவாரத்தில் சிவபெருமானின் செவியை முதலில் கூறியுள்ளதும் கவனிக்கத்தக்கது.சங்கீத சாஸ்திரத்திற்கு காந்தர்வ தத்துவம் என்று பெயர். இயற்கை பிரமாணங்களையும் அனுபவங்களையும் ஆதாரமாகக் கொண்டு

ஸ்வராணவம் என்னும் புத்தகத்தில் சங்கீத சாஸ்திரங்களிலும் வீணை முதலிய வாத்தியங்களில் தேர்ச்சி பெற்றவனும் தான சம்பந்தமான ஞானத்தை அடைந்தவனும் பிரயாசையின்றி மோட்ச பதவியை அடைகிறான் எனக்கூறுகின்றது. சங்கீத ஞானத்திற்கும் சாஸ்திரத்திற்கும் வீணை முதலிய வாத்தியங்களில் தேர்ச்சியடைந்தவர்களுக்கும் லய ஞானம் உடையவர்களுக்கும் நம் முன்னோர்கள் எவ்வளவு பெருமையை கொடுக்கிறார்கள் என்பது விளங்குகின்றது.

மற்றும் இசையானது புராதன காலத்திலிருந்து நமக்கு வந்துள்ள விலையற்ற நிதிகளில் ஒன்றாகும். இதர கலைகளையும் சாஸ்திரங்களையும் கற்பதனால் அடையக்கூடிய பயனை ஒருவன் லலித கலைகளில் முதன்மையான இந்து சங்கீதத்தை முறைப்படி கற்று வந்தால் நிச்சயமாக அடையலாம். தேனையும், பாலையும் விரும்புவது போல் எல்லோரும் சங்கீதத்தை விரும்புவார்கள்.

மும்மூர்த்திகளான தியாகராஜா சுவாமி, சியாமா சாஸ்திரிகள், முத்து சுவாமிகள்தீஷிகர் ஆகியோர் தங்களது ஆயிரக்கணக்கான கிருதிகள் மூலமாகவும் பல அபூர்வ ராகங்கள் மூலமாகவும் ராகங்களுக்கு ஜீவனளித்து இசையின் பெருமையை வெளிப்படுத்தியுள்ளார்கள். மும்மூர்த்திகளும் மூன்று விதமான ராகங்கள் மூலம் இசையை வெளிக்காட்டியுள்ளார்கள்.

கானம் செய்யும் போதும் கானத்தை கேட்கும் பொழுதும் நாம் எக் கவலையையும் மறந்து இன்படைகின்றோம். உயர்தர சங்கீதத்தை கேட்கும் பொழுது நாம் மெய் மறந்து இன்பக் கடலில் மூழ்குவதுடன் தெய்வீக உலகில் உலாவுகிறோம். என்னும் உணர்ச்சியையும் பெறுகிறோம். இத்தகைய இனிய அனுபவம் சங்கீதத்திற்கே உரியதாகும். மனிதனுடைய துர்க்குணங்களை போக்கி நற்குணங்களை பெருக்கி அவனை சன சமூகத்திக்கு ஒழுங்கானவனாக ஆக்கக் கூடிய சக்தி சங்கீதத்திற்கே உள்ளது. எத்தேசத்தவர்களையும் ஒருவன் தன்னுடைய இசையை மகிழும் படி செய்யலாம். பாட்டின் பொருள் விளங்காதவர்கள் அப் பாட்டின் இசையை கேட்டு மகிழ்கிறார்கள். சங்கீத வித்துவான்களுக்கு எத் தேசத்திலும் நல்வரவும், நன்மதிப்பும் உண்டு. நாகர்கத்தில் முன்னேற்றமடைந்த தேசங்களிலெல்லாம் சன சமூகத்தால் இசைப்புலவர்களை மிக அன்புடன் பாராட்டி வருகின்றார்கள். நோயைக் கூட குணப்படுத்தக் கூடிய சக்தி இசைக்கு உண்டு என்றே கூறமுடியும். இசைக்கு மயங்காதவர்கள் அன்பு, பணிவு, சாந்தம், பொறுமை, நல்லொழுக்கம் போன்ற நற்குணங்களை பெறமுடியாது. சங்கீதம் பயிலாத ஒருவன் இவ்வுலகில் இயல்பாக தனக்கு கிடைக்கக் கூடிய ஒரு அரிய கலையின்பத்தை வீணாக இழந்தவனாகின்றான்.

ஆக்கம்:- திருமதி. சா.சதானந்தன்.
பயிற்றப்பட்ட ஆசிரியை(சங்கீதம்)

## திரும்பி வரா நினைவுகள்.

ஊர்.

ஆறுகளும் ஓடைகளும் சலசலக்க
ஆலயங்கள் பல நிரம்ப
அறிவுகள் பல்கிப் பெருக
கலைகள் பல கலகலப்பது
அழகான ஊர்.

பாடசாலை

ஏணிகள் காட்டி ஏற்றிட
படிகள் கட்டி உயர்ந்திட
பண்புகள் வளர்ந்திட
பாடங்களைப் போதிக்கும்
பள்ளிக்கூடம்.

அதிபர்.

ஆசிரியனின் ஆசிரியனாய்
ஆளுமையுள்ளவன்
அடக்கியாள்வது போல்
அரவணைப்பவன்
பள்ளியெனும் வண்டியின்
சாரதி
விபத்தில் சிக்காமல்
நிதானமாய் ஓட்டி
வெற்றியை அடைபவன்.

ஆசிரியன்.

ஆசிரியன்
குற்றங்களை நீக்குபவன்
குணங்களை வளர்ப்பவன்
உருகி எரியும் கற்பூரமாய்
தன்னையே உருக்குபவன்
தயாள சிந்தனையாளன்.

மாணவர்கள்

அறிவைத் தேடி
அலையும் எறும்புகள்
முதன்மை பெற முண்டியடித்தாலும்
குறும்புகள் கூடி குழம்பி நிற்பர்
நல்லது கெட்டது அறியா வயது
நல்வழி அவர்களை
சரி வழிகாட்டும்.

இவர்கள்
இவைகள் கால மாற்றத்தில்
எங்கும் நிலைக்கும்
என்றும் இனிக்கும்
நினைத்தாலே இனிக்கும்
திரும்பி வரா நினைவுகள்.

ஆக்கியோர் :- திருமதி. ஞா. சிவதாஸ்
பயிற்றப்பட்டஆசிரியை (ஆரம்பப்பிரிவு)

## எல்லாம் இரண்டு

| | | |
|---|---|---|
| வருவதும் போவதும் | - | இன்பம், துன்பம் |
| வந்தால் போகாது | - | புகழ், பழி |
| போனால் வராது | - | மானம், உயிர் |
| தானாக வருபவை | - | இளமை, மூப்பு |
| தம்முடன் வருபவை | - | பாவம், புண்ணியம் |
| அடக்க முடியாதவை | - | ஆசை, துக்கம் |
| தவிர்க்க முடியாதவை | - | பசி, தாகம் |
| நம்மால் பிரிக்க முடியாதவை | - | பந்தம், பாசம். |

தே.ரட்ஷாயினி(மாணவி)
9ஏ

# சர்வதேச சின்னங்களும் அடையாளங்களும்

| சின்னங்கள் | அடையாளங்கள் |
|---|---|
| 01. வெள்ளைப்புறா ☞ | சமாதானம் |
| 02. கறுப்புக்கொடி ☞ | மரணம் |
| 03. தலைகீழான கொடி ☞ | துன்பம் |
| 04. செஞ்சிலுவை ☞ | மருத்துவமனை |
| 05. கப்பல்களில் மஞ்சள்கொடி ☞ | தொற்று நோய் |
| 06. செம்பிறை ☞ | அரபு நாடுகளில் செஞ்சிலுவை சங்கத்தின் அடையாளம் |
| 07. பச்சை விளக்கு ☞ | சாதகம் |
| 08. உடைந்த கைவிளக்குகளுடன் இரு கைகள் ☞ | ஊழியர் விடுதலை |
| 09. தாமரை ☞ | பண்பாடு |
| 10. அரைக்கம்பத்தில் தேசியக்கொடி ☞ | சோகம் |
| 11. மேல்நோக்கி செங்குத்தான கொடி ☞ | வெற்றி |
| 12. பெருவிரல், சிறுவிரல் இரண்டையும் மடித்து மத்தியில் உள்ள மூன்று விரல்களையும் காட்டுதல் ☞ | சாரணர் அமையம். |

ஆக்கம். யோ. சுவோஜன் (10A)
மட் /ஆரையம்பதி மகா வித்தியாலயம்.

# ஈழத்து தமிழ் நாடக வளர்ச்சி

நாடகம் என்பது ஆற்றப்படும் கலை ஆகும். ஒரு இடத்தில் நாடகம் நிகழ்த்தப்பட வேண்டுமாயின் சபையும், அரங்கும் இருக்க வேண்டியது குறிப்பிடத்தக்க ஒரு அம்சமாகும். ஏனைய இலக்கியங்கள் போல் அல்லாது நாடகத்திற்கு அவையும், அரங்கும் இன்றியமையாதனவாகும்.

இவ்வாறான நாடகத்தின் வளர்ச்சி ஈழத்தில் மிகவும் குறைவாகவே காணப்படுகிறது. இலங்கையைப் பொறுத்த வரையில் தமிழ் நாடக வளர்ச்சியில் முன்னுரிமை வகிப்பது யாழ்ப்பாணமும், மட்டக்களப்பும் என்றதால் மிகையாகாது ஒவ்வொரு கால கட்டங்களிலும் நாடக ஆசிரியர்கள் தோன்றியிருப்பதை வரலாறு சுட்டிக்காட்டுகின்றது. அந்த வகையில் கூத்து முறையில் காணப்பட்ட நாடகங்களை மேடை அமைப்பு முறைக்கு கொண்டு வந்த பெருமை அவர்களையே சாரும்.

அந்த வகையில் ஈழத்தில் ஆங்கிலேயர் வருகையின் பின் புதிய மேடை நாடகங்கள் அரங்கேற்றப்பட்டமை கண்கூடு. இந் நாடக வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைந்தவை யாழ்ப்பாணப் பாடசாலைகளாகும்.

இலக்கியம் "காலத்தைக் காட்டும் கண்ணாடி" என்பதால் நாடகங்களும் காலங்களை பிரதிபலிக்கும் வகையில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த வகையில் ஈழத்துத் தமிழ் நாடகங்களும் காலங்களின் மாற்றத்திற்கு ஏற்ப வளர்ச்சி பெற்று வருவதைக் காணமுடிகிறது.

ஈழத்து நவீன நாடக வரலாற்றில் கலையரசு சொர்ணலிங்கம் அவர்கள் முக்கிய இடத்தை வகிக்கிறார். இவருடனே ஈழத்து நவீன நாடக மரபு ஆரம்பமாகின்றது. இவர் ஒரு நாடக ஆசிரியர் மட்டுமல்ல நெறியாளரும், தயாரிப்பாளரும் ஆவார். இவர் தன்னுடைய ஆசிரியரான பம்பல் சம்பந்த முதலியாரின் நாடகங்களையே மேடையேற்றியுள்ளார். வேதாள உலகம், சாரங்கதரா, மகோரா, சிம்ஹௌநாதன், வாணிபுரத்து வணிகர், நீ விரும்பிய விதமே, சகுந்தலை என்பவற்றைக் குறிப்பிடலாம் எனவே இவரை ஈழத்தின் நவீன நாடகத் தந்தை எனக் கூறலாம்.

ஈழத்து மக்களின் வாழ்க்கை வரலாற்றையும், அவர்களுடைய அன்றாட நடைமுறையையும், அன்றாடப் பேச்சு வழக்கையும், நாடகங்களின் கையாண்ட பெருமை பேராசிரியர்க. கணபதிப்பிள்ளை அவர்களையே சாரும். இந்த வகையில் பேராசிரியர் கூற்று கவனிக்கத்தக்கது.

"நாடகம் என்பது உலக இயல்பை உள்ளபடி காட்டுவது. ஆகவே வீட்டிலும், வீதியிலும் பேசுவது போலவே

அரங்கிலும் ஆடுவோர் பேச வேண்டும். இந்த நாடகத்தில் காணப்பட்ட பாணி யாழ்ப்பாண குடா நாட்டிற்குப் பொதுவாகவும், பருத்தித் துறைப்பகுதிக்கு சிறப்பாகவும் உள்ளது"

இவருடைய நாடகங்கள் உலக இயல்பை உள்ளபடி காட்டுவதால் இயற்பண்பு நெறி சார்ந்த போக்கு காணப்படுகிறது. எனவே இவரை "தமிழ் இயற்பண்பு நாடக மரபின் முன்னோடி" எனலாம். நானாடகம், இருநாடகம் ஆகிய சமூக நாடகங்களையும், மாணிக்கமாலை என்ற தழுவல் நாடகத்தினையும், சங்கிலி என்ற வரலாற்று நாடகத்தினையும் எழுதி நாடக மரபில் முக்கிய இடத்தைப் பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கிராமப் புறங்களிலிருந்த நாட்டுக் கூத்து மரபைக் கொண்ட நாடகங்களை மேடை ஏற்றிய பெருமை பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்களைச் சாரும். நாட்டுக்கூத்தினை வளர்த்ததோடு, அதனைச் செம்மைப்படுத்தி மேடை ஏற்றிய பெருமையும் இவருக்குரியதே. இந்த வகையில் கர்ணன் போர், நொண்டி நாடகம், இராவணேசன், வாலிவதை என்னும் நான்கு நாடகங்களைத் தயாரித்தார். இவற்றுள் கர்ணன் போரும், நொண்டி நாடகமும் மட்டக்களப்பில் விடிய விடிய ஆடப்பட்ட கூத்துக்களாகும். இவை முறையே வடமோடி, தென்மோடி கூத்துக்களைப் பிரதிபலிக்கின்றன.

1970க்குப் பின் நாடகத் துறையில் நெறியாளர் அரங்கு ஆரம்பமாகிறது. இவற்றின் முன்னோடிகளாக கலைஞர்.நா. சுந்தரலிங்கம், அ. தாசீசியஸ் ஆகியோர் காணப்படுகிறார்கள். சுஹைர் ஹமீத் அதல பாதாளம், பொம்பலாட்டம், அவனைக் கொன்றவன் நீ ஆகிய மொழிபெயர்ப்பு தழுவல் நாடகங்களை நெறியாள்கை செய்துள்ளார்.

நா.சுந்தரலிங்கம் "அபசுரம்" என்ற அபத்த நாடகச் சுவை கொண்ட புதிய முறை நாடகமொன்றை எழுதியுள்ளார். அவ் வகையில் இவர் நாடக நெறியாளராகவும், நடிகராகவும், நாடக எழுத்தாளராகவும் இருந்தார். அடுத்து முகையனின் "கடூழியம்" என்ற நாடகத்தை நெறிப்படுத்தி நாடக உலகில் தனக்கென ஒரு இடத்தைப் பிடித்துக் கொண்ட பெருமை இவரைச் சாரும்.

1980களில் மரபுவழிக் கூத்தின் பயிற்சி கொண்ட மௌனகுரு அவர்கள் முக்கிய இடத்தைப் பிடித்துக் கொள்கின்றார். இவருடைய நாடகம் பற்றி பேராசிரியர் கைலாசபதி அவர்களின் கூற்று வருமாறு.

"வடமோடிப் பாணி கைவந்த மௌனகுரு ஆட்ட முறையில் அமைந்த அசைவுகளை நாடகங்களிற் கையாள்வது பயன் தரு சோதனை ஆகும்" என்கிறார்.

இவரோடு பாலேந்திரா, நிர்மலா, நித்தியானந்தன், மு. நித்தியானந்தன் ஆகியோர் முக்கிய இடம் பெறுகின்றார்கள்.

இவ்வகையில் நாம் ஈழத்து தமிழ் நாடகங்களை பார்க்கும் இடத்து அவை ஈழத்து நாடகக் கருவும், உருவும், அதன்

பண்பும், பயனும், ஈழத்துச் சமூக, அரசியல் வளர்ச்சிக்கு ஏற்ப வளர்ந்து வந்துள்ளன.

ஆரம்பத்தில் நாடகங்கள் பாட்டுருவில் அமைந்திருந்தன. பின்னர் அந் நாடகங்களில் உயர் மக்களுக்குரிய உயர் தமிழ் இடம்பெற்றது. சாதாரண மக்களை பாத்திரங்களாகக் கொண்ட பேச்சுத் தமிழ் நாடகத்தில் பிரதான இடம்பெறுகிறது. அது இந் நாடகத் தமிழ் அடைந்த வளர்ச்சி என்று பேராசிரியர் சி. மௌனகுரு அவர்கள் ஈழத்து தமிழ் நாடக அரங்கு என்ற நூலில் குறிப்பிட்டிருப்பது கவனிக்கத்தக்கது. இவ்வகையில் வளர்ந்து கொண்டிருக்கும் நாடகத்தினை மேலும் வளர்ச்சியடையச் செய்வது நமது கடமையாகும்.

ஆசிரியர் :- திருமதி. பி. கிருபைராஜா
பட்டதாரி ஆசிரியை(தமிழ்)

## நாடுகளும் நாணய அலகுகளும்.

| | | |
|---|---|---|
| 01. ஐக்கிய இராச்சியம் | ☛- | ஸ்டேலிங் பவுன் |
| 02. அமேரிக்கா | ☛- | அரசுகள் டொலர் |
| 03. பிரான்ஸ் | ☛- | பிராங் |
| 04. இத்தாலி | ☛- | லிரா |
| 05. சோவியத் ஒன்றியம் | ☛- | ரூபிள் |
| 06. இந்தியா | ☛- | ரூபாய் |
| 07. ஜெர்மன் | ☛- | டொயிஸ் மார்க் |
| 08. ஜப்பான் | ☛- | ஜென் |
| 09. குவைத் | ☛- | தினார் |
| 10. ஓமான் | ☛- | ஓமான் றியால் |
| 11. சவுதி | ☛- | றியால் |
| 12. பாகிஸ்தான் | ☛- | ரூபாய் |
| 13. சீனா | ☛- | யுவான் |
| 14. நோர்வே | ☛- | குறோணர் |
| 15. சிங்கப்பூர் | ☛- | சிங்கப்பூர் டொலர் |

# IMPORTANCE OF ENGLISH TODAY

English Language has become very important for various reasons in Sri Lanka today. In fact, it is not only in Sri Lanka , but through out the whole world, English language has become important and necessary. So that it is considered as one of the International language of the world.

After fifteen years of studying in the two languages, namely in Tamil and Sinhala up to the University level, the Tamil and Sinhalese are unable to communicate with one another. They have become strangers to one another. But it was not so in the past. Many people from both sides of the divide knew English and so could easily communicate with one another. But the situation has changed today and they have become to dislike one another.

If the situation is to change, and peace and harmony to prevail in Sri Lanka, people from both ethnic groups must learn the International language. A person doesn't lose anything at all if he/ she learns to read, speak and write in another language. Knowing the English Language well, makes a person a better perfect person. And also English language gives certain amount of leadership to a person.

Today most of the trade relations are carried out in English not only in Sri Lanka but through out the entire world. Computer technology has completely changed the world communication system, and to master it one has to know English language.

There are most of the numerous books and the books used in higher Education in English to day than at time before in the history of the world. One can easily find all the needed information and study materials in English than in any other language.

Today if one gets out of Sri Lanka, it would be almost impossible to do anything with out minimum knowledge of English. One can't fill up the different forms at the various airports without knowing English. One can't even communicate with other people in other countries, if one doesn't know

English. Peoples can't learn all the language of the would. But the one who know English can easily get about in any part of the world and manage his affairs with ease, because English is spoken everywhere . Even the Chinese, the Japanese, the Russians, the Germans and the French are learning English today.

To learn a language, in the first place one must love that language. If you fall in love with a language, you will
certainly learn that language, within the shortest period. This is the first and foremost requirement. Secondly, in order to master a language, one must be ready to apply one self to it, everyday. Repetition is the mother of studies. Thirdly, in order to be at home with English, one must be ready to spend time to improve his/ her handwriting and reading habits. If you can read and write with ease in English, you are already on the way to master it soon.

If you want to learn English, then think in English, sing English songs, write in English, speak in English, read English books, newspapers and magazines, and most importantly listen carefully to people who speak English well.

*Thank you*

**Mrs. A. Mahendrarajah (Trained Tr.in.English)**
**BT/ Arayampathy M.V**

# இந்து சமயத்தில் பெண்களின் பங்களிப்பு.

மனிதன் அறிவுத்திறன் பெற்று வாழத் தொடங்கிய காலத்தில் இருந்தே சமயமும் உடன் வளர்ந்து வந்துள்ளது. ஆதி கால மக்களிடையே சமய உணர்வு குறைவாக காணப்பட்டாலும் ஏதோ ஒரு நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டே அவர்கள் வாழ்க்கை நடாத்தி வந்தனர்.

சமயமானது மனித உணர்வை மக்களிடையே ஏற்படுத்துகின்ற ஓர் அம்சமாக காணப்படுகின்றது. பொதுவாக சமயங்களில் கடவுள் நம்பிக்கை காணப்பட்டாலும் வாழ்கையின் நன் நோக்கத்தை நிறைவேற்ற உதவும் கொள்கையாகவே சமயம் விளங்கி வருகின்றது. இதனால் சமயம் மனித வாழ்க்கையில் "நெறிப்படுத்தல்" என்ற கோட்பாட்டை வலியுறுத்துகின்றது. இந்த நெறிப்படுத்தல் மனிதனுக்கு அவசியமானது என்பதை உணர்ந்த யாவரும் ஏதோ ஒரு சமயத்தை தமது வாழ்வில் ஆதாரமாக்கி நம்பிக்கையாக்கி வாழ்கின்றனர்.

உலகில் உள்ள பல்வேறு சமயங்களில் இந்து சமயம் தொன்மை வாய்ந்த சமயமாக விளங்குகின்றது. இந்து சமயம் பற்றி அறியும் சான்றுகளாக வேத இலக்கியங்கள், உபநிடதங்கள், தர்ம சாஸ்திரங்கள், திவ்விய பிரபந்தங்கள் என்பவை விளங்குகின்றன. இவை அனைத்தும் மனித வாழ்க்கையை நெறிப்படுத்தும் நோக்கத்திற்காகவே எழுந்திருக்க வேண்டும் என்பது அவை கூறும் விடயங்களில் மூலம் அறியக் கூடியதாகவுள்ளது.

இவ்வாறாக வாழ்க்கை நெறிப்படுத்தும் இந்து சமயம் பெண்களுக்குரிய சமூக அந்தஸ்த்து பற்றிய தகவல்களையும் கூறியுள்ளது. உபநிடதத்தில் பெண்கள் மேலான நிலையில் வைத்துக் கூறப்பட்டுள்ளனர். "பிரகதாரணிய உபநிடதத்தில்" "கார்கி" என்ற பெண் பற்றி குறிப்புக்கள் காணப்படுகின்றது. அக் காலத்தில் பெண்கள் மிகுந்த கல்வியுடையவர்களாக இருந்தார்கள் என்பதை இது உணர்த்துகின்றது.

மேலும், பெண்கள் தெய்வமாகின்ற நிலையும் காணப்பட்டது. பெண் பெருமையும் மதிப்பும் உடையவளாக உயர்த்தப்பட்டாள். செல்வத்திற்கும், கல்விற்கும், வீரத்திற்கும் அதி தேவதைகளாக பெண்கள் லக்சுமியாகவும், சரஸ்வதியாகவும், துர்க்கையாகவும் கொள்ளப்பட்டனர். பக்தி நெறியில் சக்தி என்ற புதிய கோட்பாடு உருவாகத் தொடங்கியது. இறைவனுக்கே அர்த்தநாதீஸ்வர வடிவம் கற்பிக்கப்பட்டது. இதை உலகிலுள்ள அனைத்தையுமே படைத்தவன் சக்தி என்ற நம்பிக்கை உருவாகியது அதாவது இந்த உலகம் தோன்ற முதற் காரணம் மாயை, நிமிர்த் காரணம் இறை, துணைக் காரணம் சக்தியும் காணப்படுகின்றது.

பல்லவர் காலத்தில் எழுந்த பக்திப் பாடல்கள் கூட பெண்களுக்கு மேலான தகமைகளை கொடுத்துள்ளது. காரைக்கால் அம்மையார், திலகவதியார்,

"வரும் இவள் நம்மைப் பேணும் அம்மை காண் உமையே" என சிவனே காரைக்கால் அம்மையாரை புகழ்ந்து கூறியுள்ளதை காணக்கூடியதாக உள்ளது. இம் மூவருள் காரைக்கால்அம்மையார் தனிச் சிறப்புப் பெற்றவராக பெண்ணின் பெருமையை உலகிற்கு உணர்த்துபவராக கிருஷ்டிக்கப்பட்டுள்ளார். இறைவனைப் பற்றி அவர் பாடிய பாடல்கள் பெண்கள் பழமைக்கு எடுத்துக்காட்டாக மட்டுமன்றி சைவ சமயத்தை வளர்ப்பதற்கும் வித்திட்டவர் என்ற பெருமையையும் உணர்த்தி நிற்கின்றது. பல்லவர் காலத்தில் பகிதி இயக்கம் தோன்றுவதற்கு காலாக இருந்தவர் காரைக்கால் அம்மையார் ஆவார்.

மேலும் பெண்களுக்காக இந்து சமயம் வளர்த்த சில நெறிமுறைகள் அவர்களை ஒழுக்கச் சீர்கேடுகளில் இருந்து பாதுகாக்க பெரிதும் உதவின. கணவனை இழந்து விட்ட நிலையில் பெண்களின் வாழ்வு சமயத்தோடு தொடர்பு படுத்தப்பட்டது. துறவியைப் போல வாழ வேண்டும் என கூறிகிறது. அதாவது " வெறுந்தரையில் தான் படுக்கலாம் ஒரே ஒரு வேளை எளிய உணவுதான் உட்கொள்ளலாம்., வர்ண ஆடைகளோ அணிகலன்கயோ, வாசனைப் பொருட்களை உபயோகிக்வோ கூடாது" என்று இந்து மதம் கூறியுள்ளது.

அக் கட்டுப்பாடான வாழ்க்கை முறை பெண்களுக்கு அவை விதிக்கப்பட்ட காலத்தில் பொருத்தமாக இருந்திருக்கலாம். ஆனால் தற்காலத்தில் சமயம் பற்றிய நோக்கம், போக்கு வேறுபட்டதனால் இக்கட்டுப்பாடுகள் பெண்களை அடிமையாக்க முயலவதாக பலர் கருதுகின்றனர்.

பெண்கள் தன்னிலை உணர்ந்து கடமையாற்றும் ஆற்றல் நிரம்பியவள் தன்னால் பாதுகாக்கப்பட வேண்டிய ஒழுக்க நெறிகளை அவள் உணர்ந்தவள் என்பதையே இந்து சமயம் வலியுறுத்துகின்றது. இதற்கு எடுத்துக் காட்டாக திலகவதியாரை குறிப்பிடலாம். பெற்றோர் மறைவிற்கு பின்பு தனக்கு கணவராக வரவிருந்தவரையும் போரிலே பறிகொடுத்த திலகவதியார் தனக்கென்று இன்பங்கள் கிடையாத விடத்து மற்றவர்களுக்காக துறவு பூண்டு வாழ்ந்த வாழ்க்கை பெண்களின் வாழ்வின் தத்துவத்தை விளக்குகின்றது.

மேலும் பெண்ணின் நிலை பற்றி புராண இதிகாசங்களிலும் கூறப்பட்டு இருப்பதை காணலாம். மகாபாரதம் பெண்ணின் கடமை பற்றி கூறும் போது அவள் அடையக் கூடிய கஸ்ரங்களையும் கூறுகின்றது. குந்திதேவி தன் இளமைக்காலத்தில் செய்த காரியத்தினால் தன் குடும்பத்திற்கு எத்தகைய கஸ்டங்களை தேடினாள் என்பதை மகாபாரதம் உணர்த்தியுள்ளது. பெண்ணானவள் தன் கடமை என்ன என அறியாமல் இருப்பதால் ஏற்படக்கூடிய தீமை பற்றி எடுத்துக்காட்டுகிறது.

ஐவருக்கும் மனைவியாக வாழ்ந்த பாஞ்சாலி தன் கணவர்களை விட கடவுளாலேயே காப்பாற்றப்பட்டாள் என்ற தத்துவத்தையும் மகாபாரதம் எடுத்துக்காட்டுகிறது. இராமாயணத்தில் சீதாதேவியின் குழந்தை தன்மையால் ஏற்பட்ட பாரதூரமான விளைவு

எடுத்துக்காட்டப்படுகிறது. அது மட்டுமன்றி இராம அவதாரத்தின் தேவையை உணர்த்தும் பாத்திரமாக சீதை உருவாக்கப்பட்டதோடு அல்லாமல் பெண்ணினத்தின் பண்பிற்கு ஓர் எடுத்துக்காட்டாகவும் விளங்குகின்றாள்.

இந்து சமயம் பெண்களைப் பொறுத்த வரையில் “கற்பு” என்ற சிறப்பிலக்கணத்தைக் கொடுத்துள்ளது. கற்பினால் எதையும் செய்யும் ஆற்றல் பெண்களுக்கு உண்டு என்பதை இந்து மதம் வலியுறுத்துகின்றது. கணவனை ஒரு பெண் தெய்வமாக வணங்கினால் அற்புத ஆற்றல் படைத்தவளாக விளங்குவாள் என்பதை கண்ணகியின் வரலாற்றின் மூலம் இந்து மதம் எடுத்து இயம்புகின்றது. ஒழுக்க நெறிகளை சமூகத்திற்கு ஆக்கிக் கொடுப்பவர்கள் பெண்களே என்பதை இந்து மதம் மறைமுகமாக வலியுறுத்துகின்றது.

குடும்ப நிலையில் ஒவ்வொரு பெண்ணும் ஒழுக்கம் உடையவளாக விளங்கினால் நாட்டின் ஒழுக்கம் தானாகவே பேணப்படும் என இந்து மதம் கூறுகின்றது. வீட்டிலிருந்தே மனிதனை நெறிப்படுத்த முடியும் எனக் கூறுகின்றது. அறிவு, ஆக்கம், அழிவு என்னும் முப்பெரும் சக்திகள் பெண்களிடம் உள்ளன. அச்சக்திகளை ஏற்ற சந்தர்ப்பத்தில் ஏற்றவாறு பயன்படுத்துவதனால் பெண் தன் ஆற்றலை வெளிப்படுத்துகின்றாள். இந்த உலகையெல்லாம் காக்கின்ற அன்னை பராசக்தியாக பெண்களைப் போற்றும் மரபினை இந்து சமயம் ஆரம்பித்து வைத்துள்ளது.

நன்றி.

திருமதி . இ. சந்திரகுமார்,
பட்டதாரி ஆசிரியை (இந்து சமயம்)

## வீரமாமுனிவரும் அவரது தமிழ்ப் பணிகளும்.

தமிழ்ப்பணி பல புரிந்த மேல்நாட்டறிஞருள் முதன்மையானவராக கொள்ளப்படுபவர் வீரமாமுனிவர். இவர் இத்தாலி நாட்டில் வெனிஸ் மானிலத்தில் காத்திக் கிளியோனே என்ற ஊரில் கி.பி. 1680ம் ஆண்டு நவம்பர் மாதம் 8ந் திகதி பிறந்தார். ஏசு கழகம் சார்ந்தார். 1907ல் குரு பட்டம் பெற்றார். 1711 இல் சமயத் தொண்டாற்றும் நோக்கோடு இந்தியா வந்த இவர் திருநெல்வேலி, மதுரை, திருச்சி, தஞ்சாவூர் எனப் பல இடங்களில் தங்கியிருந்தார். தம்முடைய வடிவத்தைத் தமிழ் முனிவரைப் போலவே மாற்றிக் கொண்டார். சுப்பிதீபக் கவிராயர் என்பவரிடம் தமிழ் மொழியை இலக்கிய இலக்கணங்களுடன் கற்றதோடு மேலும் பல தமிழ் அறிஞர்களுடன் தொடர்பு கொண்டு தமிழ் இலக்கிய அறிவை வளர்த்துக் கொண்டார். பட்டி தொட்டி எங்கும் மதம் பரப்ப அலைந்து திரிந்ததில் நல்ல அனுபவக் கல்வியைப் பெற்றார். 3615 பாடல்களைக் கொண்ட தேம்பாவணி என்னும் காவியத்தை இயற்றியமைக்காக மதுரையில் இருந்த தமிழ்ச் சங்கமொன்று இவருக்கு வீரமாமுனிவர் என்ற பட்டத்தை அளித்தது. இவரது இயற் பெயர் கொன்ஸ்ரன்ரைன் ஜோசப் பெஸ்கி (Constantne Josep Bwschi) என்பதாகும். தைரிய நாதர், வீர ஆசிரியன், செந்தமிழ் தேசிகர், தத்துவ போதகர், இஸ்மாத்திரிக சந்நியாசி என்ற சிறப்புப் பெயர்களையும் பெற்றிருந்தார் என அறிய முடிகிறது.

1727 – 1740 வரையான காலத்தில் பலவேறு இலக்கிய இலக்கணங்களை ஆக்கியுள்ளார். திருக்குறள், திருவாசகம், எனபவற்றைக் கற்றுப் பெருமைப்பட்டிருக்கிறார். உள்ளம் உருகியிருக்கிறார்.

"மறைமொழி வாயினன் மனிதவந்து இறைவன்
நிறைமொழிக் குரவன் நிகரின் கேள்வியன்
வீரமாமுனியென்போன் வியன்றழி முாக"

என்ற தேம்பாவணி சிறப்புப் பாயிர வரிகளும் "அருந்தமிழ் இலக்கணம் ஐந்தையும் விரித்து விளக்கினன் வீரமாமுனியே" என்ற தொன்னூல் விளக்க வரிகளும் அவரது பெருமைக்கு எடுத்துக் காட்டுகள்.

வீரமாமுனிவர் எழுதிய கவிதை இலக்கியத்திற்கு மிகச் சிறந்த உதாரணம் தேம்பாவணி என்ற காவியமாகும். கம்பராமாயணத்திற்கு ஈடு சொல்லக்கூடிய அளவிற்கு தேம்பாவணியில் தமிழ் காவியங்களின் கருத்துக்களும், சொற்றொடர்களும் செறிந்துள்ளமை பற்றி சொல்லின் செல்வர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் கருத்து தெரிவித்துள்ளார். அது தவிர திருக்காவலூர்க் கலம்பகம், கித்தேரியம்பாள் அம்மானை, கருணாம்பரம் பதிகம், தேவாரப் பதிகம், வண்ணக் கலைகள்,

தேவமாதா அந்தாதி, பூம்பாவணி ஆகிய கவிதை நூல்களை இவர் ஆக்கியளித்துள்ளார்.

இவரது தேம்பாவணி பற்றி தவத்திரு தனிநாயக அடிகள் "தேம்பாவணி" ஓர் ஏரி இதில் கிழக்கில் அருந்தும் மேற்கில் இருந்தும் வரும் ஆறுகள் கலக்கின்றன. எனக் கூறியுள்ளார். அடுத்து இவரது கவிதை நூல்களில் சிறப்பு வாய்ந்தது கித்தேரியம்மாள் அம்மானையாகும். தேம்பாவணி செந்தமிழ் நடை கொண்ட நூல் எனலாம். அம்மானை போன்ற பாவகை மட்டுமன்றி இதில் வழங்கப்படும் சொற்களும் இது பொதுமக்கள் காவியம் என்பதை விளக்கி நிற்கின்றன.

தமிழ் நாட்டிற்கு வருகை தந்த கத்தோலிக்க சமயப் பிரிவினருக்கும், அவர்களுக்கு சில ஆண்டுகளுக்கு முன்பு வந்த லூதர் சபையினருக்கும் இடையே மதப் போராட்டம் வலுப்பெற்று வந்நதது. கத்தோலிக்க வேதத்தின் கொள்கைகளை விளக்குவதற்காக வீரமாமுனிவர் வேத விளக்கம் என்ற உரை நடை நூலை எழுதினார். லூதர் சபையார் எழுதிய திருச்சபை பேதகம் என்ற நூலின் அமைந்த கொடுந்தமிழ் நடையைக் கண்டு வினவ "லூதர் இனத்தியல்பு" என்ற செந்தமிழ் நூலை மடல் எழுதும் முறையில் எழுதினார். இவ்வாறான கண்டன நூல்கள் பலவற்றை எழுதி உரைநடை வளர்ச்சிக்கும் தமிழ் உரைநடையில் கண்டனப் பண்பின் தோற்றத்திற்கும் விழிகாட்டியாக விளங்கியவர் இவரே இவை தவிர பரமார்த்த குரு கதை, வாமன் கதை, வேதிய ஒழுக்கம், பேதகம் மறுத்தல்,, திருக்கடவூர் நாட்டுத் திருச்சபைக்கு எழுதிய உரைநடை நூல்களாகும்.

பரமார்த்த குரு கதை என்ற அங்கத இக்கிய நூலை எழுதி வெளியிட்டார். இது போலிச் சாமியரைச் சாடுவதாக அமைந்துள்ளதோடு முதல் தமிழ் உரைநடை இலக்கியம் என்ற பெருமையையும் பெற்றுள்ளது. தமிழில் எழுந்த முதல் எள்ளல் இலக்கியமாக அமைந்துள்ளதோடு பாமர மக்களும் படித்து இன்புறத் தக்க வகையில் இலகு தமிழில் எழுதப்பட்டுள்ளமை சிறப்புக்குரியதாகும். பரமார்த்தகுரு கதை போலன்றி வாமன் கதை என்ற மிகச் சிறிய நூல் இவரது செந்தமிழ் நடைக்கு எடுத்துக் காட்டாகும். செந்தமிழ் கற்போருக்கு இது சிறந்த பாடநூலாக அமைந்ததென்பர். இது தேம்பாவணியில் வரும் வளவனுக்கும் வாமன் என்ற போர் வீரனுக்கும் ஏறப்பட்ட உரையாடலின் உரைநடையாக்கம் எனலாம். இவ்வாறு கதை நூல்களை எழுதுவதிலும் வீரமாமுனிவர் சிறப்புற்று விளங்கினார்

1730 இல் அவரால் எழுதப்பட்ட தொன்னூல் விளக்கம் என்ற ஐந்திலக்கண நூல் பழங்கால இலக்கிய நூல்களை கற்பதற்கு எழுதப்பட்டது எனலாம். பறவை தன்குஞ்சிக்கு இறகு முளைக்கும் வரை இரை கொடுப்பது போல தமிழ் மாணவர் தாங்களே நூல்களை கற்பதற்கு இந்நூலை எழுதியதாக அவரே குறிப்பிட்டுள்ளார். இன் நூல் தவிர இலக்கண திறவுகோல், செந்தமிழ் இலக்கணம் கொடுந்தமிழ்

இலக்கணம் ஆகிய தமிழ் இலக்கண நூல்களையும் இவர் எழுதியுள்ள்ார்.

தமிழ் மொழியில் அகராதிக் கலைக்கு வித்திட்ட பெருமை இவரையே சாரும். சதுரகராதி என்ற நூலை முதன் முதலில் எழுதி பிற்காலத்தில் பல தமிழ் அகராதிகள் தோற்றம் பெறுவதற்கு வழிகாட்டியாக விளங்கினார். சதுரகராதி என்ற நூலின் முன்னுரையில் முனிவர் கூறிய விளக்கம் நோக்கத்தக்கது. "ஓவியருக்கு வண்ணம். படை வீரருக்கு படைக்களம், கட்டிடங்கள் கட்டுவோருக்கு சுண்ணாம்புக் கல் முதலானவை தேவைப்படுவது போல பிற நாட்டு மொழி கற்போருக்கு அம் மொழியிலுள்ள சொற்கள் தேவைப்படுகின்றன." என்றார். இதுதவிர தமிழ் இலத்தீன அகராதி, போர்த்துகீச இலத்தின் தமிழ் அகராதி என்பவற்றையும் இவர் படைத்தளித்துள்ளார்.

வீரமாமுனிவரின் இன்னொரு முக்கியமான ஒரு பணி எழுத்துச் சீர்திருத்தமாகும். தொல்காப்பியர் காலத்தில் இருந்து எ,ஒ எனபவை நெடிலாகவும் மேலே புள்ளி பெற்று குறிலாகவும் (எ,ஒ) செயல்பட்டிருக்கின்றன. இக்காலத்தில் பயன்படும் இவ்விரு எழுத்திக்களின் குறில் நெடில் அமைப்பைச் செப்பம் செய்தவர் வீரமாமுனிவர் ஆவாார்.

| பழைய முறை | | புதிய முறை | |
|---|---|---|---|
| குறில் | நெடில் | குறில் | நெடில் |
| எ் | எ | எ | ஏ |
| ஒ் | ஒ | ஒ | ஓ |

இது மாத்திரமன்றி முன்பு அரவும் ரகரமும் ஒரே வடிவாகவே எழுதப்பட்டன. ரகர்த்திற்கு கால் இட்டு அரவில். இருந்து வேறுபடுத்தினார். குறில், நெடில் வடிவத்தில் இரட்டைக் கொம்பு வடிவத்தையும் ஆக்கித் தந்த பெருமையும் இவருக்குரியது என்பர்.

பன்மொழிப் புலவராக விளங்கிய இவர் திருக்குறளின் மகிமை கண்டு முதன் முதலில் அறத்துப்பால், பொருட்பால் ஆகிய இரு பால்களையும் இலத்தீன் மொழியில் மொழி பெயர்த்தார். அத்தோடு திருவாசகத்தையும் இலத்தீன் மொழியில் மொழிபெயர்த்து இரு நூல்களின் மகிமையையும் உலகறியச் செய்தார்.

மேற்குறிப்பிட்ட வாறு பெஸ்கி என்ற பெயர் பெறும் வீரமாமுனிவர் அவர்களின் தொண்டு தமிழ் மொழியைப் பொறுத்த வரை அளப்பெரியது. எஞ்ஞான்றும் மறக்கற்பாலது. தமிழைத் தாய்மொழியாக கொண்டோரை விட எந்த விதத்திலும் குறையாத பற்றைத் தமிழ்மொழி இலக்கியத்தின்பால் வைத்திருந்தார். என்பதனை அவருடைய படைப்புகளின் வழியறியலாம். இவரது தமிழ் பணியைப் போற்றும் வகையில் இவரை மையமாகக் கொண்டு பல இலயக்கியங்கள்

படைத்துள்ளமையை அறியமுடிகின்றது. அவ்வகையில் வீரமாமுனிவர் பிள்ளைத் தமிழ், வெற்றிமாலை, தொன்னூல் விளக்கப் புகழ்ச்சி மாலை என்பன குறிப்பிடத்தக்கன.

இத்தாலி நாட்டில் பிறந்து தமிழ் நாட்டிற்கு வந்து தமிழ் மொழிக்கென அரும்பணிகள் புரிந்த வீரமாமுனிவரின் பூதவுடல் மறைந்திட்டாலும் அவர் புகழுடம்பு தமிழ் உள்ளவரை நிலைத்து நிற்கும் என்பதில் ஐயம் இல்லை.

ஆக்கம். செல்வி. க. இதயவேணி
(ஆசிரியை) (தொகுப்பு)

பொது அறிவு:——

☞ இலங்கையில் குறுகிய காலம் பிரதமர் பதவி வகித்தவர். டாக்டர்: ரு. தகநாயக்க

test tupe

☞ வுநளவ வுரிந பரிசோதனைக்குழாய் குழந்தை முறையினை வெற்றிகண்ட விஞ்ஞானி
சு.பு. எட்வேட் கு.ஊ. ஸரோய்

☞ உலகில் பெரிய அரசியல் அலுவலகம்
பெண்டகன்

☞ உலக கிண்ண காற்பந்தாட்டப் போட்டி நடைபெற்ற நாடு”
ஜேர்மன்

☞ ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் பதவிக்கு போட்டியிடும் இலங்கையர்:- ஜயந்த தனபால

☞ உலகின் முதற் பெரிய நீர்வீழ்ச்சி :- வெனிசுலா நாட்டில் உள்ள ஏஞ்சல்

☞ வேகமாக நீந்தும் பறவை:- பெங்குயின்

☞ கல்குலேற்றரைக் கண்டு பிடித்தவர்:- பஸ்கால்

☞ இலங்கையின் முதலாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி:- ஜே.ஆர்.ஜெயவர்த்தனா

## ஆலய வழிபாடு ஏற்படுத்தும் உடல் உள மாற்றங்கள்

ஆலயம் என்பது ஆன்மாக்களை லயப்படுத்தும் அதாவது ஆட்கொள்ளும் இடம் எனப்பொருள் படுகின்றது. மற்றும் இதனை கோயில் அல்லது கோவில் எனக் கூறும்போது கோ என்றால் தலைவன் அதாவது மன்னுயிர்க்கெல்லாம் தலைவனாக விளங்கும் இறைவனானவன் உறையும் இடம் இல் எனப் பொருள் பட்டு கோவில் எனப் பொருள் கொண்டு நிற்கின்றது. அதனைக் கோவில் என்றும் கோயில் என்றும் கூறுவதில் பிழையில்லை.

எங்கும் எவையும் நீக்க மற வீற்றிருக்கும் இறைவனுக்கு கோவில் ஒன்று தனிப்பட்ட இடம் தேவையா என நாம் நினைக்கலாம் ஆனால் கோவில் என ஒன்று சிறப்பாக அமைந்திருப்பது தனி மனிதனின் உடல் உள முன்னேற்றத்திற்கு வழி வகுப்பதுடன் சமூதாய சீர் திருத்தத்திற்கு வழி காட்டி நாட்டின் அபிவிருத்திக்கும் சிறப்பிக்க வழிகாட்டும் என்பது உறுதி.

முதலில் ஆலய வழிபாடு உடல்தேகாரோக்கியத்திற்கு எவ்வழியில் உதவுகின்றது என நோக்கின். ஆலயத்துக்கு செல்வதற்கு முன்னர் குளித்து தோய்த்துலர்ந்த ஆடை அணிந்து செல்வதே சிறப்பானது. என இந்து மதம் குறிப்பிடுகின்றது. எனவே கோயிலுக்குச்செல்லும் ஒருவர் தனது உடல் உடை என்பவற்றை சுத்தமாக வைத்திருக்க வழி வகுக்கின்றது எனக் கூறலாம். மற்றும் கோயிலுக்கு சென்றவர்கள் ஆலய தரிசனத்தை தொடங்குவதற்கு முன்னர் ஆண்கள் அட்டாங்க நமஸ்காரமும் , பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும் செய்தல் வேண்டும் என சமய நூல்கள் கூறுகின்றன. இவ்வித நமஸ்காரங்கள் உடல் ஆரோக்கியத்திற்கு நிறந்த ஓர் உடற்பயிற்சியாக அமைந்து இரத்த சுற்றோட்டம் சிறப்பாக நடைபெற வழிவகுப்பதன் மூலம் உடல் ஆரோக்கியம் மடைகின்றது. மற்றும் ஆலயத்தை வழிபடச்செய்பவர்கள் ஆலயத்தை ஒரு தடவையேனும் அல்லது மூன்று தடவையேனும் அல்லது ஐந்து தடவையேனும் தேவாரத்தகைச் சொல்லிக்கொண்டு அல்லது நமசிவாய என்னும் திரு மந்திரத்தை சொல்லிக் கொண்டு சுற்ற வேண்டும் இதுவே தகுந்த முறை என கூறப்படுகின்றது. இதுவும் சிறப்பான உடல் ஆரோக்கியம் அளிப்பதுடன் மனமும் ஒரு நிலைப் படுவதற்கு வழி வகுக்கின்றது.

அடுத்ததாக சிறப்பான உள மாற்றம் ஏற்படவும் ஆலய வழிபாடு வழிகாட்டுகின்றது. உதாரணமாக ஆலய முன் வாசலில் காட்சிப்படுத்தி இக்கும்வாசகம் ஒன்னைக் குறிப்பிடலாம். "ஆலயத்தில் இறைவன் திரு நாமம் தலிர பேசற்க வேறொன்றும்" என குறிப்பிடப்பட்டுள்ளது. ஆலய வழிபாடு செய்பவர்கள் இறை நாமத்தை நெஞ்சிலே நினைத்துக்கொண்டு அவரின் புகழாரங்கயை வாயினால் பாடி துதிக்கும்போது அவர்களது மனதிலே வேறு

கெட்ட எண்ணங்களோ செயல்களோ தோன்றுவதற்கு வழி இல்லாமல் போய்விடுகிறது. ஆலயத்தில் கழிக்கும் அவ்வளவு நேரமும் நல்ல நினைப்பே தவிர தீய எண்ணங்கள் அவர்களின் நினைவிலிருந்து அகல்வதற்கு வாய்ப்பாக அமையும் போது சிறப்பான உள மாற்றம் ஏற்பட வாய்ப்பாக அமைகின்றது.

ஆலய வழிபாடு செய்வதன் மூலம் அன்பு கருணை மற்றவர்களையும் மதிக்க வேண்டும் என்னும் மன எண்ணம் உருவாகின்றது. எவ்வாறனில் ஆண்டவனின் சன்னிதானத்திலே எல்லோரும் சமமானவர்கள் எல்லாரிடத்தும் கண்ணியத்துடன் அன்பாகவும், அடக்கமாகவும் நடந்து கொள்ள வேண்டும் என்னும் எண்ணம் தோன்றுகின்ற போது உளமானது பரிபக்குவமடைகிறது இது ஒருவரின் சிறப்பான உள விருத்திக்கு உதவுகின்றது.மற்றும் ஆலயத்திலே பூசைகள் நடைபெறும் போது இறைவன் மீது பக்தி ஏற்படும் போதும் அரோகரா.. அரோகரா.. என ஓசையிட்டு இறைவனை அழைக்கும் போதும் அவர்களின் சிந்தனையிலே கெட்ட நினைவுகளுக்கு இடமில்லாமல் போய்விடுகிறது. இதுவும் நல்லதோர் ஏற்பாடாகவே அமையும்.

மற்றும் ஆலய வழிபாடு செய்வதற்காக செல்பவர்கள் பூசை பொருட்களுடன் செல்வது உத்தமானது என சமய நூல்கள் கூறுகின்றன. இவ்வாறான பூசைப் பொருட்களை ஆண்டவனின் சன்னிதானத்தில் படைத்து பூசை முடிந்த பின்னர் இறைவனின் பிரசாதமாக மக்களுக்கு வழங்கப்படும் போது அங்கு கொடுத்துச் சாப்பிட வேண்டும் என்னும் பக்குவம் ஏற்படுகின்றது. அதுமாத்திரமல்ல தனந்தர்கள் பொங்கல் போன்ற படைப்புகள் செய்து பொது மக்களுக்கு ஆண்டவனின் அமுது என கொடுக்கப்படுகின்றது. இந் நிகழ்வு தனவந்தனின் கொடைச் சிறப்பையும் சமூகவிழுமியப் பண்பையும் வெளிப்படுத்தி மக்களுக்கு சமமான உணர்வு ஏற்பட வழிகாட்டுகின்றது.

எனவே ஆலய வழிபாட்டினால் மக்களாகிய நாம் பெறுகின்ற சிறப்பான இயல்புகள் பணம் கொடுத்து பெற வேண்டியதில்லை இறைவழிபாடு மூலமே பெற்றுக் கொள்ள முடியும் என்பது இந்து மதத்தின் குறிக்கோளுமாகும்.

ஆக்கம்:- எம். வன்னியசிங்கம்,
அலுவலகப்பணியாளர்

# கணினியைக் கற்றாலும் பழமையைப் போற்றுவோம்.



கணினிப் பாவனை இன்று பலரினதும் அன்றாட அத்தியாவசிய தேவைக்குப் பயன்படும் அளவுக்கு வளர்ந்துள்ளது. இன்றைய எமது சமூகத்தின் பெரும்பாலான சிறுவர்கள் கணினியை இயக்கும் வல்லமை பெற்றுள்ளனர். இவர்களுள் பல சிறுவர்கள் இதர அனைத்துப் பணிகளுக்கும் மேலாகக் கணினியை பாவிக்கப் பழகிக் கொண்டுள்ளமையைக் காணமுடிகிறது. "அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு" என்ற பழமொழி கணினிப் பாவனைக்கு பொருந்தும் என்பதனைச் சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது. இது தொடர்பாக அமெரிக்கா வித்தியாசமான ஆராய்ச்சியை மேற்கொண்டது. அவ்விடயங்களையே இங்கு நாம் சுட்டிக்காட்டவுள்ளோம்.

சிறுவர்களுக்கு கணினி உகந்ததா? இல்லையா? என்பதே இவ்வாராய்ச்சியின் நோக்கமாகும். இங்கு பாலர் பாடசாலைச் சிறுவர்கள் மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டனர். இதில், முதல் பிரிவினர்களுக்குச் சாதாரண பாலர் பாடசாலைக் கல்வி மற்றும் அதற்கு இணையான செயற்பாடுகள் போதிக்கப்பட்டன. இரண்டாம் பிரிவினர்களுக்கு கணினிப்பயிற்சி வழங்கப்பட்டது. மூன்றாம் பிரிவினர்க்கு வழங்கப்பட்டது பியானோ பயிற்சியாகும். மூன்று மாதங்களுக்குப் பின்னர் மூன்று பிரிவினரதும் அறிவு வளர்ச்சி பற்றி ஆராயப்பட்ட போது பெறுபேறுகள் ஆச்சரியம் தருவதாக இருந்தன. சாதாரண பாலர் பாடசாலைக் கல்வியைப் பெற்ற பிரிவினரின் அறிவு வளர்ச்சி சாதாரண வேகத்தையும் கொண்டிருந்தது. பியானோ பயின்றவர்களின் அறிவு வளர்ச்சி இரண்டு மடங்காக உயர்ந்து இருந்தது. கணித ரீதியான அறிவு வளர்ச்சி நிலையையே இங்கு சுட்டிக்காட்டுகிறது. அத்துடன் கணினிப் பயிற்சி பெற்றவர்களின் அறிவு வளர்ச்சி குறைந்த மட்டத்தில் இருந்தமை கண்டறியப்பட்டது. இவ்வாராய்ச்சியானது அமெரிக்காவில் பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட முறையான உச்ச வளங்களைக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஒன்றாகும் அறிவு வளர்ச்சிப் பாதிப்பு இக் கணினி தொடர்பான ஆய்வின் மூலம் நிரூபிக்கப்பட்டது. என்னவென்றால் அறிவு வளர்ச்சிக்குக் கணினியை விட, இதர செயற்பாடுகளே காரணம் என்பதாகும். கணினி சிறுவர்களின் அறிவு வளர்ச்சிக்கு எவ்வாறான பாதிப்பை ஏற்படுத்துகின்றது என்று பார்க்க இயந்திரத்திற்கும் மூளைக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை முதலில் புரிந்து கொள்ள வேண்டும். கணினி என்பது சூட்சுமமாகவும், வேகமாகவும் சிந்திக்கத் தூண்டும் இயந்திரமாகும். சிறு வயதிலிருந்தே குழந்தைகள் கணினியுடன் இருப்பார்களாயின் அவர்களின் சிந்திக்கும் திறமையில் தேய்வு ஏற்படும். எமது சிந்திக்கும் திறனைப் பின் தள்ளி இயந்திரத்தின் சக்தி முன்

செல்வது அதற்குக் காரணமாகின்றது. பொழுது போக்கு விளையாட்டுக்களுக்கு அடிமையாதல். இன்று எமது சிறுவர்கள் பலரும் கணினியால் பெற்றுக் கொள்ளக் கூடிய பயன்களை மறந்து கணினி விளையாட்டு

(கேம்ஸ்)களுக்குப் பழகி இருப்பதனை நாம் அனைவரும் அறிவோம். இவ் விளையாட்டுக்களுக்கு பழகி விட்ட சிறுவர்கள் மணித்தியாலக் கணக்கில் நேரத்தை வீணடிப்பதுடன் இதிலிருந்து விடுபட முடியாமல் இருக்கிறார்கள். அதனாலேயே அவர்கள் இவ் விளையாட்டுக்களில் ஈடுபட்டு (கண்களுக்கும் பாதிப்பு) உடல் ரீதியானதும், மன ரீதியானதுமான பல பாதிப்புக்களுக்குட்பட்டிருக்கிறார்கள். அது மட்டுமன்றி இக் கணினி விளையாட்டுக் காரணமாகப் பெற்றோர் குழந்தைகளுக்கிடையே மோதல்களும் ஏற்பட்டுள்ளமை வருந்தத் தக்க விடயமாகும். பொதுவாக விளையாட்டுக்களின் போது மன நிம்மதி, தர்க்க ரீதியான தன்மை, பிரச்சனைகளைத் தீர்ப்பது மற்றும் சவால்களை வெற்றி கொள்வது போன்ற நன்மைகளை ஏற்படுத்துகின்ற போதும் இக்கணினி விளையாட்டுக்களால் கிடைக்கும் நன்மை எதுவும் இல்லை. ஆகவே, கணினியைப் பாவிக்கு முன் நீங்கள் அதனை உங்கள் முன்னேற்றத்திற்குப் பாவிக்க வேண்டுமே ஒழிய அழிவை நோக்கி அல்ல என்பதனைப் புரிந்து கொள்ள வேண்டும்.



அமெரிக்காவில் ஏற்பட்ட இன்னொரு ஆராய்ச்சியின் போது கண்டறியப்பட்ட உண்மை என்னவெனில் அமெக்காவில் உள்ள வெள்ளையர்களுடைய குழந்தைகளின் அறிவு நிலையுடன் ஒப்பிடுகையில் சீனக் குழந்தைகளின் அறிவு மட்டும் உயர்ந்து காணப்பட்டது. அதற்கு காரணமாக பல மனோதத்துவ நிபுணர்கள் கூறியது வெள்ளைக் காரச் சிறுவர்கள் கணினி மற்றும் கணிப் பொறி (கல்குலேற்றர்) பாவித்த போதும், சீனச் சிறுவர்கள் பாரம்பரிய உபகரணங்களை இன்றும் பாவிப்பதே இதற்கு மேலதிகமாகச் சம்பிரதாய பூர்வமான மனனம் செய்யும் முறையிலும் அறிவு வளர்ச்சி ஏற்படும் என நிபுணர்கள் கண்டுபிடித்துள்ளனர். சுலோகங்கள், கவிதைகள் போன்றவற்றை மனனம் செய்தலூடாக வளர்ச்சி ஏற்படும் என அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

குறிப்பாக இந்தியா, சீனா போன்ற ஆசிய நாடுகளில் குழந்ழைதகளின் அறிவு வளர்ச்சிக்கு இம்முறை பெரிதும் உதவியுள்ளது. இந்தியாவில் வாய்ப்பாடு மனனம் செய்த இந்தியக் குழந்தைகள் அமெரிக்காவுக்குச் செல்லும் போது பெற்றோர்களின் உதவியுடன் இவற்றை செய்கிறார்கள். ஆகவே, கல்குலேற்றர்பாவனையை விட அம்மனனம் செய்யும் முறை சாலச் சிறந்ததாகும். இதனூடாக அறிவு வளர்ச்சி இடம் பெறும். புராதன காலத்தில் பல நிபுணத்துவம் மிக்கவர்கள் தோன்றியமை இதற்கு உதாரணமாக காட்டலாம். இம் மனனம் செய்யும் முறையினால் அறிவு சார்ந்த துரித வளர்சசி ஏற்படுகின்றது. அதாவது,

அத்தனைக்கு இத்தனை என்றால் இத்தனைக்கு எத்தனை? என்ற தர்க்க ரீதியான வளர்ச்சி ஏற்படுகிறது. அத்துடன் இரண்டு வரிகளுக்கு இடையில் காணப்படும் தொடர்பு, மொழிப் பிரயோகம் தொடர்பான பழக்கம் அவ் வளர்ச்சிக்கு மேலும் உந்து சக்தியாக விளங்கும். மனதில் கணக்குப் போடும் திறமையும் இவ் வாய்ப்பாடு மூலம் ஏற்படும். இவ் வாய்ப்பாட்டு முறை இன்றைய நவீன யுகத்திற்கு உகந்ததல்ல எனப் பலர் கூறுகிறார்கள். கிளிப்பிள்ளை போன்று மனனஞ் செய்யும் நிலை எனச் சிலர் கூறுவர். எவ்வாறாயினும் அமெரிக்கா மீண்டும் இன்று இந்த நிலைக்கே திரும்பியுள்ளது. நவீன தொழில் நுட்ப உபகரணங்களைக் குறிப்பிடத்தக்க அளவு பாவிக்கும் அமெரிக்கச் சிறுவர்கள் மீண்டும் பாரம்பரியக் கல்வி முறையைக் தழுவியுள்ளனர்.



இவ்வாறு மனனஞ் செய்வதால் எமது மனதில் ஏற்படும் இரசாயனச் செயற்பாடு இன்று விஞ்ஞான ரீதியாக உறுதிப்படுத்தப் பட்டுள்ளது. எமது மூளையில் காணப்படும் நியூரோறுக்கிடையே மிக மெல்லிய இடைவெளிகள் காணப்படுகின்றன. ஒரே விடயத்தை மீண்டும் மீண்டும் உச்சரிப்பதால் அதில் நிலையான புரோட்டின் சேரும். அதன் மூலம் அங்கு நிலையான வளர்ச்சி இட்டுச் செல்கிறது. சுலோகங்கள், வாய்பாடுகள் மனனஞ் செய்வதிலும் மேற்படி செயலே காலம் தொட்டு அம்மனனஞ் செய்யும் முறை இருந்து வந்துள்ளது. சிறு வயதில் எமக்குக் கிடைப்பதுமனனஞ் செய்வதால் பெறும் அறிவு மட்டுமே படிப்படியாக உயர் வகுப்புகளுக்குச் செல்லும் போதுதான் அவற்றின் அர்த்தம் புரிதல் நடைபெறுகின்றது. எமது மொழியில் இலக்கண நியதிகள் உயர் வகுப்புகளுக்குச் செல்லும் போதே படிக்க முடிகின்ற போதும் எம்மை அறியாமலே அவை எம் முன் உருவாகி இருப்பது இம் மனனஞ் செய்யும் முயையினாலேயாகும். ஆகவே எமது சிறுவர்கள் புராதன நூல்களை ஒரு முறையேனும் படிக்க வேண்டும். மணல் எழுத்து இம்முறை புராதன காலம் தொட்டுப் பழக்கத்தில் இருந்து வருகிறது. இதன் மூலம் எழுத்துக்கள் அழகு பெறுவதுடன் அறிவு வளர்ச்சி, சிந்திக்கும் திறமை, படைப்பில் திறமை என்பன வளர்ச்சி பெறுகின்றன. தமிழ் மொழியில் எழுத்துக்கள் சித்திரத்தைப் போன்டறு அழகானவை. வெளிநாட்டுச் சிறுவர்கள் தமிழ் எழுத்துக்களை "பூக்கள்" எனவும் "வண்ணத்துப் பூச்சிகள்" எனவும் அழைக்கிறார்கள். இவ் எழுத்துக்களை அழகாக எழுதுவதன் முலம் மன வளப்பயிற்சியும் அறிவு வளர்ச்சியும் இடம் பெறும். ஆகவே, உங்கள் எழுத்துக்கள் முற்றத்திலோ பலகையிலோ மணலைப் போட்டு அதன் மீது எழுதவும். மேற்படி கருத்துக்கள் மூலம் நாம் கணினியை நிராகரிக்கிறோம் என்று நினைக்கக் கூடாது. கணினிப் பாவனையில் எந்தத் தவறும் இல்லை. ஆனாலும், அவற்றுக்கு மாத்திரம் அடிமையாதல் பின் விளைவுகளை ஏற்படுத்த வல்லது. எந்த விடயத்திலும் ஒரு எல்லை உண்டு. கல்குலேற்றர் இருப்பதால்

வாய்ப்பாட்டை நிறுத்துவது முறையல்ல. அறிவு மட்டுமின்றித் திறமை மிகு சிறுவர்களே நாட்டுக்குத் தேவை. அதற்காக நீங்கள் பாரம்பரிய மற்றும் நவீன தொழிநுட்பத்தின் தேவையைப் பயன்படுத்தும் போதும் நன்றாகச் சிந்தித்துப் பயன்படுத்தவும்.

ஆக்கம். ஐ மாணவி:- செல்வி .ம.லதாஜினி
(உயர் தரம்-கலைப்பிரிவு)

உலக விடயங்கள் :-

1.தினை அதிகமாகப் பயிரிடும் நாடு:-
இந்தியா

2.காற்றாடி ஆலைகள் நிறைந்த நாடு :-
ஒல்லாந்து

3.அப்பிள் பழம் அதிகமாக பயிரிடும் நாடு :-
பிரான்ஸ்

4.அதிகமாக கார்கள் உற்பத்தி செய்யும் நாடு :-
அமெரிக்கா

5.கோப்பி அதிகமாக பயிரிடும் நாடு:-

பிரேசில்

6.கம்பளி அதிகமாக உற்பத்தி செய்யும் நாடு :-
அவுஸ்திரேலியா

7.2006ல் நடைபெற்ற உலகக்கிண்ண உதைப்பந்தாட்டப் போட்டியில் வெற்றி பெற்ற நாடு:- இத்தாலி

8.இலங்கையில் 2வது அனல் மின் நிலையம் அமைக்கப்படவுள்ள இடம்:- திருகோணமலை

9.2006 ல் பொதுநலவாய விளையாட்டுப் போட்டி நடைபெற்ற நாடு:-
அவுஸ்திரேலியா

10."சுனாமி" ஆபத்தை அடிக்கடி எதிர்கொள்ளும் நாடு:-
இந்தோனேசியா

## தடம் பதித்த இலக்கிய பெண்களும் தடுமாறும் இன்றைய பெண்களும்.

இலக்கியங்கள் காலத்தின் நிலைக்கண்ணாடியாகவே என்றும் விளங்குகின்றன. இலக்கியங்களால் சுட்டப்படும் பொருளானது கற்பனையாகவோ அன்றி நிகழ்ந்தவையாகவே இருப்பினும் மற்றவர்களுக்கு நல்ல படிப்பினையை தருவதாக உள்ளன. குறிப்பாக பெண் பாத்திரங்கள் பல்வேறு சமூக பரிமாணங்களை எடுத்தியம்புவதன் மூலம் இன்றைய சமூகத்திற்கு சிறந்த வழிகாட்டிகளாக உள்ளனர். கம்பனின் சீதையைப் போன்றும் இளங்கோவின் கண்ணகியைப் போன்றும் வில்லியின் பாஞ்சாலியைப் போன்றும் சேக்கிழார் எடுத்தியம்பும் மாதரசி மங்கயற்கரசி போல் இன்னும் பல பெண்கள் வாழ்ந்து இலக்கியங்களின் வெற்றிக்கு வழிகாட்டினர்.

தெய்வத் தன்மை மிக்க இராமனையும் சீதையையும் சமூகத்தின் அங்கத்தினர்களாக்கி அவர்களுக்கூடாக அரிய பல கருத்துக்களை இராமாயணம் எனும் காப்பியம் மூலம் கம்பன் நமக்கு தந்திருக்கின்றான். கம்பராமாயணத்தில் கம்பன் காட்டும் உன்னத படைப்பக்களாக தசரதனின் துணைவியர் கோசலை, சுமத்திரை, கைகேயிஇராமனின் துணைவி சீதை இராவணனின் தங்கையான சூர்ப்பனகை, இராவணனின் மனைவி மண்டோதரி போன்ற பாத்திரங்களின் பேச்சுக்களினாலும் செயல்களினாலும் இன்றைய சமூக பெண்களுக்கு தேவையான பல வழிகாமட்டுதல்கள் கிடைக்கப் பெறுகின்றன. இவர்களில் காப்பிய கதாநாயகி சீதையின் குணவியல்புகளும் செயற்பாடும் இன்னைய சமூக மாதருக்கு எவ்வாறு வழிகாட்டியாக அமைந்திருக்கின்றது என்பதை கம்பன் பின்வருமாறு காட்டுகின்றான்.

கம்பனின் சீதை இரு மாறுபட்ட இடங்களில் நோக்கத்தக்க பாத்திரங்களாகும். சனகனின் மகளாகவும், இராமனின் மனைவி சீதையாகவும் அவள் காட்டிய செயற்பாடுகள் உன்னிப்பாக நோக்கத்தக்கவை. மிதிலை நகருக்கு இராமர் விஷ்வாமித்திரரோடும் இலக்குவனோடும் கால் பதித்து வரும் வேளையில் உப்பரிகை மாடத்திலிருந்து ஒரு சோடி கண்கள் சூரிய மலை முகழ்ந்த இராமனின் தோள்களில் தடம் பதித்தது. என்றுமில்லாதவாறு சீதையின் உள்ளமும் உடலும் மகிழ்ச்சியால் பிரவாகித்தன. " அண்ணலும் அவளும் நோக்க இதயங்கள் இடம்மாறி புக்கியபின் சீதை தன்னிலை உணர்ந்தவளாய் சிந்திக்க தொடங்கினாள் என்மனத்திடை புகுந்தவன் வேறு பெண்ணின் மணாளனாக இருந்தால் குலப்பெருமை தாழ்ந்து விடும் அல்லவா என்னும் நிலையில் கிலேசம் அடைந்தாள் எனினும் பின்னா் அவன்

தனக்குரியவன்தான என அவள் மனம் துணிந்த போது ஏனைய பெண்களைவிட சீதை மேலுயர்ந்து நிற்கின்றாள்.

தற்காலப் பெண்கள் சிலர் எவ்வித ஆய்வுமின்றி "கண்டதே காட்சி கொண்டதே கோலம்" என்னும் நிலையில் காணப்படுவதால் சமூக நலப்பாங்குகளில் அவர்களின் செல்வாக்கு செல்லாக்காசாகி விடுகிறது. விவாகரத்துக்கள் இன்று பெறுவதற்கு இந்நிலையும் ஓர் காரணமாகும். பொட்டிழந்து, பூவிழந்து தம் வாழ்வை தொலைத்து நிற்கும் இன்றைய தமிழ்ப்பெண்களுக்கு அன்றே வழிகாட்டியாக

திகழ்ந்தவள் கண்ணகி. நீதி எனப்படுவது எக்காலமும் வாழும் என்ற செங்கோட் பண்பை உணர்த்திய பெண் இவள் ஆவாள். சாதாரண பெண்ணைப் போன்று கோவலனோடு வாழப்புறப்பட்ட கண்ணகி கோவலனின் தடுமாற்றத்தால் சமூகத்தில் தன்னையும் தான் சார்ந்த குடும்பத்தையும் நிலைநிறுத்தும் பண்போடு வாழ்ந்தாள். கோவலன் மீளத்திரும்பியதும் அவனை திருத்த முடியும் என மனநோக்கி வாழ்ந்தவள் கண்ணகி. இந்நிலையானது தமது கணவன் விடும் தவறுகளை உரிய இடத்தில் சுட்டிக்காட்டி அவனைத் திருத்தல் இல்லறத்து பெண்களின் தலையாய கடன் என்று வாழ்ந்து காட்டினாள் கண்ணகி. இன்றைய பெண்கள் குடும்ப வாழ்வை தொலைத்து விட்டு தடுமாறுவதற்கு புரிந்துணர்வு இன்மையும் விட்டுக் கொடுப்பு திறன் இல்லாது இருப்பதும் காரணமாகும். இதனாலேயே பல குடும்பக் கதைகள் தெருவோரத்து காப்பியங்களாய் வீதிக்கு வந்து விடுகின்றன. ஆனால் கண்ணகியோ கணவனை அவன் விட்ட தவறுகளை பண்போடு சுட்டிக்காட்டி இல்லத்து விடயங்கள் புதினப் பத்திரிகை செய்திகளாய் மாறாது தடுத்தவள். இதிலிருந்து பெண்களுக்கு மனையறத்தின் மாண்பினை காட்டும் உன்னத பாத்திரமாக இளங்கோவின் காப்பிய நாயகியாக மிளிர்கின்றாள்.

" மாசறு பெண்ணே வலம்புரி முத்தே"

எனக் கூறிய கோவலனுடன் எதுவித சுகத்தையும் அனுபவிக்காது இல்லற மாண்பை காத்த கண்ணகி கணவன் கள்வன் எனக் குற்றம் சாட்டப்பட்டு இறந்த பின் அவனுக்காக நீதி கேட்டு புறப்பட்ட வேளையிலே கணவனை மனத்திடை பேணியிருக்கிறாள் என்பது புலனாகிறது. நீதி என்பது அனைவருக்கும் உரியது நீதியின் முன் யாவரும் சமன் எனும் சமூக கோட்பாட்டை பெண்களும் உணர்ந்து விளம்பி இன்றைய காலப் பெண்களுக்கு சமத்துவம் மிக்க உரிமை வாழ்வை உணர்த்தும் உணர்ச்சிகரமான பாத்திரமாக கண்ணகி விளங்குகின்றாள்.

"பாரதி கண்ட பாரதப் பெண்ணாக பாஞ்சாலியை நோக்குவோமாயின் எந்தவொரு பெண்ணிற்கும் நேராத பெரும் துன்பம் வந்த போதும் பெண்ணே தன்னைக் காக்க வேண்டும் என்ற ஒப்புயர்வற்ற உண்மையைச்சொன்னவள் பாஞ்சாலி. இன்றைய நம் தமிழ் சமூகத்திலும் பாஞ்சாலிகளுக்கு பஞ்சமில்லை.

துச்சாதனர்களுக்கும் பஞ்சமில்லை. பெரியோரும் அறவோரும் நீதி தெரிந்த வல்லாளர்களும் இருக்கையில் ஏன் தன்னுடைய ஐந்து கணவன்மார்களும் கற்சிலை போல் இருக்கையில் விலை பேசப்பட்டது பாஞ்சாலியின் கற்பு துச்சாதனர்களின் கொடிய கரம் அவள் ஆடையைப்பற்றி இழுத்த போது ஒரு பெண்ணிற்கு பாதுகாப்பு அவளேதான் என்பதை உணர்த்திய பாஞ்சாலி உண்மையான அன்பிற்கு ஆண்டவன் கட்டுப்படுவான் என்கிற சமய உண்மையையும் எமக்கு உணர்த்தி நிற்கிறாள். பெண்ணையும் பெண்குலத்து விடிவையும் நனி சிறந்த பெண்கள் நல்வாழ்வு சமூதாயத்தையும் கனவாக கொண்ட பாரதிக்கு பாஞ்சாலியின் மீதான ஈர்ப்பு நியாயமானதொன்றே. சமூக கட்டுப்பாடுகளுக்கு விஞ்சி நான்கு சுவர்களும் பாரிய மரக்கதவுகளும் தங்கள் நிறைகாக்கும் காப்பு என்றும் நினைத்து வாழும் இன்றைய பெண்களுக்கு "சிறைகாக்கும் காப்பு என் செய்யும் மகளிர் தம் நிலை காக்கும் காப்பே தலை......" என்ற வள்ளுவன் வாக்கிற்கு இலக்கியத்தில் வாழ்ந்து காட்டி இன்றைய கால பெண்களுக்கு வழிகாட்டியாய் நின்று உயர்கிறாள் பாஞ்சாலி.

சமூகத் தொண்டை மையப் பொருளாகக் கொண்டு தமிழ் மொழியில் முகிழ்ந்த பக்தி இலக்கியம் சேக்கிழாரின் பெரிய புராணமாகும். அப் பெரிய புராணத்தில் "தானுண்டு தன் வாழ்வுண்டு" என வாழாது உரிய தருணத்தில் சிந்தித்து செயல்பட்டு முடிவுகளை எடுக்கும் திறன் பெண்களுக்கு இருக்கிறது. என்ற சிந்தனையை வெளிப்படுத்தியவர் பாண்டிய மன்னனின் இல்லத்தரசியான மங்கையற்கரசியாவார். சைவசமயம் நலிவுற்று சமண சமயம் வளர்ச்சி கண்டிருந்த வேளை மன்னனும் சமணம் சார்ந்திருந்த போது குடிமக்கள் வாழ தன்னுடைய வாழ்வை அர்ப்பணித்து பெண்மைக்கூடாக திறன் மிகு முடிவுகள் வெளிப்படுத்தும் ஆற்றலுண்டு என்பதை ஞான சம்பந்தரை வருவித்து பாண்டிய மன்னனையும் உய்வித்து சமயம் காத்த பெருமை கோப்பெருந்தேவி மாங்கயற்கரசிக்கு உரியது. இன்றைய காலத்து பெண்கள் சமயக் கோட்பாடுகளை சிறிதளவேனும் உணர தலைப்பட்டவர்கள் அல்லர் எனலாம். இதனாலேயே தன்னைக் காக்கும் திறனும் மனப்பாங்கும் செயற்திறன் விவேகமும் இவர்களிடம் குறைந்து போய்விட்டது. தங்கள் பிரச்சனைகளுக்கு அடுத்தவர் தயவில் தீர்வு வரும் என நினைக்கும் இவர்களுக்கு எம் பிரச்சனைகளுக்கு தீர்வு எம் வழியில் தாம் என்று உணர்த்தி வாழ்ந்தார் மங்கையர்கரசியார்.

கம்பன் கவிகொண்டு வடித்த சீதையாகட்டும் இளங்கோ செதுக்கிய கண்ணகியாகட்டும் பாரதி கவர்ந்த பாஞ்சாலியாகட்டும் சேக்கிழார் போற்றிய மங்கயற்கரசியாகட்டும் அனைவருமே இன்றைய இவ்வுலக பெண்கள் வாழ நல்வழிகாட்டிய இலக்கிய பெண்களாவர். சமய வாழ்வும் சமூக வாழ்வும் மனிதனின் இரு கண்கள் போன்றன என வலியுறுத்திய தமிழ் சமூகத்தில் ஆண்பாதி பெண்பாதி என இறைதத்துவத்தை பேசி

பெண்சமத்துவத்தை வலியுறுத்தி வாழ்ந்த இவர்கள் காட்டியவ வாழ்க்கை நெறிமுறைகளை இன்றைய கணனி உலகில் தடம்புரண்டு வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ் நங்கயர்க்கு நல் வழிகாட்டிகளாகும். இவர்களின் செயற்திறன்பாதை உணர்ந்து வாழ்வாங்கு வாழலாம்.

திரு.க.தயாபரன்,
ஆசிரியர்(கல்விக் கல்லூரி)

## -அறிவியல்-

01.பூரண வளர்ச்சியளிக்கும் உணவு அல்லாத மற்றொன்று எது?
விட்டமின்

02.காபோஹைதரேட் செடியின் எப்பகுதியில் தயாரிக்கப்படும்?
ஸ்டார்ச்

03.ஸ்டார்ச் வேர்களில் சேமிக்கப்பட்டால் அந்த வேரின் பெயர் எவ்வாறு அழைக்கப்படும்?
கிழங்கு

04 தாவரங்களில் பெரும்பாலானவை ஸ்டார்ச்சை எவ்விடத்தில் சேகரித்து வைக்கின்றன? காய்களில், கனிகளில்

05.ஸ்டார்ச் தயாரிக்க இன்றியமையாத ஒன்று எது?
சூரிய ஒளி

06.இலையில் உணவு தயாரிக்க இயற்கையாக உள்ள அமைப்பு எது? குளோரோபில்

07. குளோரோபில் என்பது தமிழில் எப்பெயரால் அழைக்கப்படுகிறது? பச்சையம்
-மாணவர்-

# காலங்களில் நாட்டியம்.

மனிதர் தமது கலை கலாச்சாரம், பண்பாடுகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு வாழ்ந்த வாழ்க்கையினை விளக்குவது காலங்களாகும். இக் காலங்களில் அரசனும் குடிகளும் காணப்பட்டதையும், அவன் கலைக்காற்றிய தொண்டுகளையும் பற்றி அகழ்வாராச்சியில் கிடைத்த படிமங்களையும் கல்வெட்டுக்களையும் கொண்டு அறிய முடிகின்றது.

இக்காலங்களை சிந்து வெளிக்காலம், வேதகாலம், மௌரிய குப்பதர் காலம், பல்லவகாலம், சோழகாலம், ஐரோப்பியகாலம், தற்காலம் என பலவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளதை காணக்கூடியதாகவுள்ளது. இக்காலங்களில் நாட்டியம் எவ்வாற காணப்பட்டுள்ளது என்பதை ஆராய்வோமாயின், பழைய நாகரீகத்தில் நாட்டியத்தின் பங்கு இரு வகையாக உள்ளதை அவதானிக்கலாம்.

01. பொழுது போக்கிற்கானவை.

02. சமயத்தோடு தொடர்புடையது.

கி.மு 3000 ஆண்டுகள் பழமை வாய்ந்ததெனக் கருதப்படும் சிந்துவெளி நாகரீக காலத்தில் நாட்டியம் ஒரு பொழுது போக்கு அம்சமாகவே இருந்தது. இதற்கு ஆதாரமாக நாம் அங்கு கிடைத்த நடன கற்சிலைகளையும் வெண்கலச் சிலைகளையும் கூறக்கூடியதாக உள்ளது.

ஹரப்பாவிலும் நாட்டிய மகளைக் குறிக்கும் ஒரு வெண்கலச்சிலை கண்டெடுக்கப்பட்டதாகவும் இது சமகால மத்திய கிழக்கு நாகரீகங்களிலிருந்து வரும் பிற்கால இந்துப் பண்பாட்டில் சிறப்பான ஓர் இடத்தைப் பெற்றிருந்த "வேத அடியார்கள்" மரபிற்குரிய ஒன்றெனெ சில அறிஞர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். இப் பெண் வடிவங்களுள் "நீக்ரோ" இளம் பெண்ணின் சிலையும் குறிப்பிடலானது. இவ்விரண்டு சிலைகளும் நடன மங்கை போலக் காணப்படுகின்றது. ஒவ்வொரு உருவமும் இடது காலைத் தூக்கி வலது கால் மீது நின்ற நடனம் செய்வது போல காணப்படுகின்றத. இச்சிலை சிவபிரானது நடனத் தோற்றமான நடராஜ திருவுருவத்தை ஒத்ததாகும்.

மேலும் தவில் போன்ற கருவியை கழுத்தில் தொங்க விடப்பட்ட மனித உருவம் ஒன்றும்

கிடைத்துள்ளது. அத்துடன் பல இசைக்கருவிகளின் ஓவியங்களும் கிடைக்கப் பெற்றுள்ளன. எனவே இவற்றை ஆராயுமிடத்து இக் காலத்தில் மக்கள் நடனக் கலையில் மட்டுமன்றி இசையிலும் பயிற்சியுடையவராக திகழ்ந்துள்ளனர் என்பது விளங்குகின்றது.

இதனையடுத்து வேத காலத்தினை நோக்கும் போது கி.மு 2000 முதல் 500 அல்லது 1000 ஆண்டுகள் வரை நடனக் கலை மலர்ச்சியுற்ற நிலையிலே இருந்துள்ளதை அறிய முடிகிறது. இக் காலத்தில் நடனம் கோயில் அமைப்புக்குள் இருந்ததாக தெரிகிறது. ஆகம முறைப்படி அபிடேகம் ஆராதனை முடிந்த பின் இறுதி நிகழ்ச்சியாக நடனம் இறை அர்ப்பணமாக ஆடப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்தே கோயில்களில் "நவசந்த" நாட்டியம் இடம் பெற்றதாக சான்றுகள் கிடைத்துள்ளன.

நவசந்தி நாட்டியம் என்பது ஒன்பது சந்திகளுக்கும் ஒன்பது வகை நாட்டியம் ஆடப்படுவதாகும். நவசந்திகளாவன, பிரமசந்தி, இந்திரசந்தி, அக்கினி சந்தி, யமசந்தி, நிரதி சந்தி, வருண சந்தி, வாயு சந்தி, குபேர சந்தி, ஈசா சந்தி என்பனவாகும். இச்சந்திகளின் முறையே சமபாதம், புஜங்கம், லலிதம், சந்தியநிருத்தம், ஊர்த்தவபாதம், குஞ்சிதம், மண்டலம், தண்டபாதம், புஜங்க நிராசம் என்னும் ஒன்பது நிருத்தங்கள் ஆடப்பட்டதாக கூறப்படுகிறது. இந்த முறையின் ஒரு சில நடனங்களை தற்காலத்தில் கோயில் கொடியேற்றத்தின் போதும் கொடியிறக்கத்தின் போதும் காணக்கூடியதாக உள்ளது. வேதகால நடனம் பற்றி இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் ஆகிய வேதகால மக்களில் இருந்து அறியலாம்.

வேதகாலத்தை தொடர்ந்து மௌரிய குப்த கால ங்களில் நடனமாது முக்கியத்துவம் பெறுகின்றாள். இக் காலத்தில் கோயில்களில் பேணி வளர்க்கப்பட்ட நடனம் அரச சபைக்குள் கொண்டுவரப்பட்டது. இங்கு பொழுது போக்கிற்காக மட்டுமல்லாது அரசியல் காரணங்களுக்காகவும் வளர்க்கப்பட்டது. அரசியலுக்காக வளர்க்கப்பட்ட நடன மகளை
" நாஜ நர்த்தசி" , விஷ கன்னிகை" என ஆழைக்கப்பட்டாள். இவள் ஒற்றனிடம் உளவறிவதற்காக பயன்பட்டாள்.

இதனை தொடர்ந்து காலங்களில் பல்வர் காலத்தில் நாட்டியம் சிறந்து விளங்கியது. மகேந்திர வர்ம காலத்தில் சிறப்பாக நடனம் இருந்தது என்பதற்கு "சித்தன்ன வாசல்", குகைக் கோயில்", ஏனைய சுவர் கோலங்கள் சான்று பகர்கின்றன. இவனால் எழுதப்பட்ட "மத்த விலாசம்" என்னம் நூலும் சான்றாகின்றன. இக்காலத்தில் ஆடற் கலை தெய்வீக கலையாக காணப்பட்டது.இதன் பிற்காலமாகிய சோழர் காலத்தில் மேலும் சிறப்புற்று வளர்ந்தது. இக் கலை மீண்டும் கோயிலுக்குள்ளும் கொண்டு வரப்பட்டது. இக் கலை வளர்ப்பதில் மிக ஆர்வமுடையவனாக காணப்பட்ட மன்னன் "ராஜ ராஜ சோழனாவான்" இக் காலத்தில் கோயில்களின் தமிழ் கூத்து, ஆரியக் கூத்து, சந்தி கூத்து, இடம் பெற்றதாக அறிஞர்கள் கூறுகின்றனர். இக் காலத்தில் நடன கலை வல்லுனர்களுக்கு " தலைக்கோலி" என்னும் பட்டம்

வழங்கப்பட்டது என சோழர் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. சோழ மன்னன் நாட்டியத்திற்கு எவ்வளவு மதிப்பளித்தான் என்பதை அவனின் மகளாகிய குந்தையின் நாட்டிய அரங்கேற்ற நிகழ்வுச் சான்று பகிர்கின்றதாக அறிஞர்கள் கூறுகின்றனர். இக் காலத்தில் நாட்டியத்திற்கு மட்டுமன்றி ஏனைய கவின் கலைகளாகிய சிற்பம், ஓவியம், இசை என்பவற்றிக்கும் ஒரு " பொற்காலம்" எனலாம். இக்கவின் கலைகளில் சிறப்பினை இம் மன்னனால் கட்டப்பட்ட தஞ்சை பெரிய கோயில் மூலம் அறியப்படுகிறது.

சோழ காலத்தை தொடர்ந்த பாண்டிய காலத்திலும் நாட்டியம் செழிப்புற்று காணப்பட்டமைக்கு நந்திவர்மனின் அரசசபையில் நாட்டிய மகளிர் பாடி ஆடியதை கூறலாம். மேலும் இவ்வாறான நிகழ்வுகள் நடைபெறும் இடம் " பாண்டியன் கூடம்" எனவும் அழைக்கப்பட்டது.இக் காலத்தினை தொடர்ந்து வந்த ஐரோப்பிய காலத்தில் நாட்டிய கலையானது பொருளாதார, அரசியல் காரணங்களால் சீர்குலைந்து காணப்பட்டது.

இக் காலத்தில் நடனம் பயிலும் பெண்களை ஆங்கிலேயர் "NAVTCH" என அழைக்கப்பட்டனர். இதற்கு காரணம் செல்வி டெனர் எனபவர் செய்த கடுமையான பிரச்சாரமாகும். இவர் இதனை ஓர் இழிவானது என கூறி பிரச்சாரம் செய்து இதனை பயில்வதற்கு தடையினையும் விதித்தனர்.இவ்வாறு சீரற்ற நிலையை அடைந்த நடனம் மீண்டும் 1932ம் ஆண்டு "சங்கீத வித்வசபை" யின் அயராத முயற்சியினால் மீண்டும் மலர்ச்சி பெற்றது. அத்துடன் ஸ்ரீமதி ருக்கமணி அருட்டேல், கனம் கிருஷ்ணய்யர், கௌரி அம்மாள் போன்றோரும் இதன் மலர்ச்சிக்கு அரும்பாடு பட்டவர்களில் சிலராவார். ஆனால் தற்காலத்தில் அரசினால் அங்கீகரிக்கப்பட்டு அந் நடனம் பாடசாலை கலைத்திட்டங்களிலும், உயர் கல்வி நிறுவனங்களிலும் புகுத்தப்பட்டு வளர்ச்சி அடைவதைக் காணக் கூடியதாக உள்ளது.

" வாழ்க பரதக் கலை"

ஆக்கம் ✍ திருமதி.த.சிவானந்தராஜா,
(நடன ஆசிரியை)

# பாடசாலைக் காலம்.

மனிதனின் பருவத்தில்
மாணவப் பருவம் - அது
மாண்பு மிகு பருவம்.

பதின்மூன்று வருடங்கள்
பாங்குடன் பயின்றிடும்
பரவசமான நாட்கள்

ஆசிரிய தெய்வங்களை
அன்பு செய்து அரவணைப்பு பெற்று
ஆசி பெற வேண்டிய காலம்.

நண்பர் கூட்டம் ஏராளம்
முயற்சிக்கு சந்தர்ப்பம் தாராளம்
அள்ளித் தந்திடும் - அப் பாடசாலைக் காலம்

கல்விமானாக மனிதன் - மாற
வைத்தியனாக, உயர்ந்தவனாக மனிதன் தேற
வித்தைகளை விதைப்பது - இப்பாடசாலைக் காலம்

மனிதன் வாழ்க்கையில்
புனிதமான நாட்கள் எனலாம் - இன்னும்
இனிமையான நாட்கள் எனலாம் - அது பாடசாலைக் காலம்

இன்னும் நினைத்துப் பார்த்தாலும்
இதயத்தில் இருந்து நீங்கவில்லை
பாடசாலை நினைவுகள்

சென்றால் வராது சந்தர்ப்பம்
சென்றிடுவோம் தொடர்ந்து – கல்வியை
செப்புடனே பயின்றிடுவோம்.

-திருமதி.எஸ். அருண்.
பட்டதாரி ஆசிரியை (ஆரம்பப்பிரிவு)

# ஓசோன் படை பாதிப்பு

வளி மண்டல வாயுக்களில் ஓசோன் வாயுவும் ஒன்றாகும். $O_3$ எனப்படும் ஓசோன் வாயுவானது வளிமண்டலத்தில் மேல் எல்லையின் ஒரு மெல்லிய படையமைப்பில் புவியைச் சூழ்ந்து அமைந்துள்ளது. புவி மேற்பரப்பிலுள்ள வளிமண்டலத்தில் நில மட்டத்தில் இருந்து 19-48 Km வரையான உயரத்தில் ஓசோன் படை அமைந்துள்ளது. ஓசோன் படையில் செறிவு 10m (10,000,000 இல் ஒரு பங்கு) ஆகும். வளியின் செயற்கையில் 0.000001% ஆக அமைந்துள்ளது. இவ்வாயுப்படலமானது புவியின் பாதுகாவலன் என வர்ணிக்கப்பட்டுள்ளது. மிகச் சொற்பமான அளவில் காணப்படும் ஓசோன் வாயுவானது இன்று ஒரு தனி மனிதன் தொடக்கம் சர்வதேச சமூகம் வரை அனைவரது எண்ணத்திலும் ஆழப்பதிந்துள்ளது. உலகம் எதிர்நோக்கியுள்ள புவிக் கோள சுற்றாடல் மாற்றங்களில் ஓசோன் படையின் தேய்வு முதன்மை பெறுகிறது. இது சூரியனில் இருந்து வெளிப்படும் அல்ற்றா வயலட் எனப்படும் புற ஊதாக் கதிர்களில் இருந்து பூமியை பாதுகாக்கும் வாயுப்படலமாகும்.

அண்மைக் காலங்களில் ஓசோன் படையின் தேய்வு பரபரப்பான செய்தியாக வெளிவந்த வண்ணம் உள்ளன. எனினும் இதன் தேய்வு அன்மையில் ஏற்ப்பட்ட ஒன்றெனக் கருதப்படுகின்றது. கோளம் வெப்பமாதலுக்கு பிரதான காரணமாக ஓசோனின் தேய்வு முன்வைக்கப்பட்டுள்ளது. முதன் முதலாக 1980ம் ஆண்டில் அந்தாட்டிக்காவில் ஆய்வுகளை மேற்கொண்ட U.K விஞ்ஞானிகள் குழுவே வளிமண்டலத்தில் ஓசோன் படையின் தேய்வு பற்றி உலகிற்கு விளக்கியது.. எனவே வழமையான ஓசோனின் செறிவு வளித் தொகுதியில் 40%-50% வரை மெல்லியதாக குறைவுபட்டுள்ளமை இனம் கானப்பட்டுள்ளது. இவ் ஓசோன் வாயுவானது புவியின் பாதகாவலனாகவும் வெப்பச் சீராக்கியாகவும் விளங்குகின்றமை குறிப்பிடத்தக்க ஓர் அம்சமாகும்.

இந்நிலையில் ஓசோனின் பாதிப்பிற்கான காரணங்கள் அதனால் எதிர் நோக்கப்படும் பாதகமான விளைவுகள் அதனை பாதுகாக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்பவை பற்றி அறிந்திருத்தல் மிகவும் அவசியமாகும்.

1. ஓசோன் படை அருகிச் செல்வதற்கு ஹாலோன்ஸ், மிதைல் பரோமைற், மிதைல் குளோரோபோன், காபன் குளோரைட் என்பவற்றின் வெளியேற்றங்களும் காரணமாகின்றன.

2. தரையில் செல்லும் வாகனம் தொடக்கம் ஆகாய விமானங்கள் வரை குறிப்பாக சுப்ப சொனிக் விமானங்களில் இருந்து வெளியேறும் நைற்றஜன் வாயு வளிமண்டலத்தில் கலத்தல்.

3. வருடா வருடம் 750,000 தொன் குளோரோ புளோரோ காபன் (CFC) வாயு உற்பத்தியாவதாக அறியப்பட்டுள்ளது. இதில் 15% தெறிபதன்கள் மூலமாகவும், 20% வாகனஙங்களாலும், 24% பொதிசெய்வதனாலும் CFC வாயு வெளியேறுகின்றது.
4. அணுகுண்டு பரிசோதனை மூலமாகவும்
5. எரிமலை கக்குகைகளின் போது செளியேற்றப்படும் வாயுக்கள்.
போன்னவற்றின் காரணமாக ஓசோனின் செறிவு குறைந்து ஞாயிற்றின் கதிர் வீசல் அதாவது புற ஊதா கதிர்கள் (UN-B) அளவு அதிகரிப்பதால் பல விளைவுகள் உருவாகியுள்ளன.

- மானிட செளபாக்கிய பாதிப்புக்கள் காரணமாக அதிகளவு சருமப் புற்று நோய் ஏற்பட ஏதுவாகிறது. கண்ணில் வெண்படல நோய், கண் பார்வையிழப்பு போன்ற பலவகையான கண் நோய்கள் ஏற்படுகின்றன. இதய புற்றுநோய்கள் ஏற்படுகின்றன. நோய்களின் எதிர்ப்புச் சக்தியினை பலவீனமடையச் செய்கின்றன. இதனால் தடுப்பூசிகளின் செயற்பாடுகள் செயலற்றுப் போகின்றன. ஒவ்வாமைத் தன்மையும் அதிகரித்து வருகின்றன.
- விலங்குகள் பாதிக்கப்படுவதனால் வளர்ப்பு விலங்குகளுக்கு கண் மற்றும் சருமப் புற்றுநோய் என்பன அதிகரித்து காணப்படுவதுடன், விலங்குகளின் மீள் உற்பத்தி திறனும் வீழ்ச்சி அடைந்து காணப்படுகின்றது.
- இயற்கைச் சூழல் தொகுதி, காடுகள், விவசாயம் என்பவற்றிற்கு ஏற்படும் பாதிப்புக்கள் காரணமாக உலகின் அதிகமான பயிர்கள் குறிப்பாக நெல், கோதுமை, பார்லி, சோளன், சோயா, அவரை, தக்காளி, கரட் போன்ற பயிர்கள் ஆபத்தான நிலையில் உள்ளன. இதனால் அவற்றின் வளர்ச்சி, ஒளித்தொகுப்பு, மற்றும் பூத்தல் என்பன குறைவடைந்துள்ளன. தாவர விலங்குகளின் வளர்ச்சியும் பாதிப்படைந்துள்ளது. இத்தகைய மாற்றங்கள் மனிதர்களினதும் மேய்ச்சல் விலங்குகளினதும் உணவின் தரத்தினை பாதிப்படையச் செய்கின்றது.
- பொருட்களுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் காரணமாக ஞாயிற்றுக் கதிர் வீச்சின் அதிகரித்த புற ஊதா கதிர்கள் பருத்தி, கம்பளி, மரம் போன்ற பொருட்களின் பாவனை காலத்தை குறைவடையச் செய்கின்றது. செயற்கை பொருட்களான பொலீத்தீன், பிளாஸ்ரிக், நார்பொருட்கள், கட்டுமான பொருட்கள் என்பவற்றின் பாவனை காலத்தையும் குறைவடையச் செய்கின்றன.

மேற் கூறப்பட்ட காரணங்கள் ஓசோன் படை பாதிக்கப்படுவதால் இனம் காணப்பட்ட பரிதாபகரமான விளைவுகள் ஆகும். இவ் ஓசோன் படையை பாதுகாக்க பல முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றது.

- ✓ ஓசோன் படையைப் பாதுகாப்பதில் U.N.O தாபனத்தின் சூழல் பாதுகாப்பு பிரிவின் ஊடாக 1965ம் ஆண்டின் பின்னர் ஒழுங்கு படுத்தப்பட்ட புவி உச்சி மகாநாடுகள், சூழல் பாதுகாப்பு மகாநாடுகள், சூழல் பாதுகாப்பு அறிக்கைகள் பிரகடணங்கள் மேற்கொள்ளப்பட்டமை.
- ✓ சர்வதேச ரீதியாகவும், தேசிய ரீதியாகவும் அரசசார்பற்ற தாபனங்கள் உடாக ஓசோன் படை பாதிப்பு அதன் அவசியம் என்பன பற்றி மக்கள் மத்தியில் விழிப்புணர்வுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளமை
- ✓ 1977இல் வொஷிங்டனில் 32 நாடுகள் பங்கு கொண்ட மகா நாட்டில் இதனை கட்டுப்படுத்துவதற்கான எதிர்கால திட்டங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இதன் செயற்பாடுகளாகப் பின்வரும் அம்சங்கள் அமையப் பெற்றுள்ளன.

1.ஓசோன்படை தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளல்
2.ஓசோன் குறையும் வீதத்தினை அறிந்து கொள்ளல்.
3.மானிட சௌரியத்தினை எங்கனம் பாதிக்கின்றது என இனம் காணல்.
4.ஓசோன்படை பற்றி அவதானிப்பதற்கான இணைப்புக் குழுவினை நிறுவுதல்.
5.சூழல் தொகுதியையும் காலநிலையையும் எவ்வாறு பாதிக்கின்றது என்று அறிதல்.
6.ஹீலோ காபன் உற்பத்திகளை கட்டுப்படுத்தல்.

போன்றவைதிட்டமிடப்பட்டு உலக நாடுகளில் அமுல்படுத்தப்பட்டதன் விளைவாக உலகின் அநேகமான நாடுகள் CFC உற்பத்தினையும், பாவனையையும் தடை செய்யப்பட்டுள்ளதுடன் CFC இன் மிகையான தயாரிப்பு நிறுத்தப்பட்டுள்ளது.

1.தேசிய ரீதியபாக சூழல் பாதுகாப்பு அணிகள் உருவாக்கப்பட்டு அதன் மூலம் மக்கள் அறிவூட்டப்பட்டமை
2.அபிவிருத்தி அடைந்த அடைந்துவரும் நாடுகளின் பொருளாதார நடவடிக்கைகளில் ஓசோன்படை பாதிப்பு பற்றி கவனம் செலுத்தப்படுதல்.

3.இதனைவிட 1981இல் ஓசோன் பாதுகாப்பதற்கான குழு உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருதல் எமது நாட்டிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருதல் போன்றவற்றை குறிப்பிடலாம்.மேற்கூறப்பட்ட காரணங்கள் ஓசோன் படைடயை பாதுகாக்க எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளாகும்.

மனிதனால் வெளியிடப்படும் பலவகைப்பட்ட வாயுக்கள் மற்றும் மாசாக்கிகளினால் துருவப்பகுதிக்கு அருகாமையில் பாரிய ஓசோன் சிதைவு ஏற்பட்டுள்ளமை இனம் காணப்பட்டுள்ளது. இவ் ஓசோன்படை தேய்வுக்காள காரணங்கள் தேய்வினால் ஏற்படும் விளைவுகள் அவற்றை கட்டுப்படுத்த எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் மிக முக்கியத்துவம் பெறுகின்றன. இவ் ஓசோன்படை புவியின் பாதுகாவலனாக கருதப்படுவதால் அவ்வாயுவினை பாதுகாப்பது மனிதர்களாகிய எமது முக்கிய கடமையாகும் என குறிப்பிட்டால் மிகையாகாது.

நன்றி.

ஆக்கம் :- திருமதி. ப. ஜெயராஜா.
ஆசிரியை (பயிற்றப்பட்ட விஞ்ஞானம்.)

நாடுகளும் நாணயங்களும்

| | | |
|---|---|---|
| 1. பாக்கிஸ்தான் | ☞- | ரூபாய் |
| 2. சவூதி அரேபியா | ☞- | றியால் |
| 3. சிங்ப்பூர் | ☞- | டொலர் |
| 4. பஹ்ரேன் | ☞- | தினார் |
| 5. கனடா | ☞- | டொலர் |
| 6. பூட்டான் | ☞- | நெதில் ரேம் |
| 7. பர்மா | ☞- | கசாட் |
| 8. சீனா | ☞- | யுவான் |
| 9. எகிப்பு | ☞- | பவுன் |
| 10. இந்தோனசியா | ☞- | ரூபாய் |
| 11. லிபியா | ☞- | டினார் |
| 12. சிரியா | ☞- | பவுண்ஸ் |
| 13. பங்காளதேசம் | ☞- | டாகா |
| 14. மலேசியா | ☞- | ரிங்யிற் |
| 15. அவுஸ்ரேலியா | ☞- | டொனர் |
| 16. ஈரான் | ☞- | றியால் |
| 17. ஈராக் | ☞- | டினார் |
| 18. பெல்ஜியம் | ☞- | பிராங் |
| 19. சுவிற்சலாந்து | ☞- | பிராங் |
| 20. ஆப்கானிஸ்தான் | ☞- | ஆட்கனி |

## கூர்ப்பு சிறத்தல்.

பூமி முதற் தோன்றிய முறையைப் பற்றிய கொள்ளைகள் பல உள்ளன. சூரிய மண்டலத்திற்கருகே இருந்த இரு நட்சத்திரங்களிலிருந்தே தோன்றியது என தற்காலக் கொள்கை கூறுகின்றது. இந் நட்சத்திரங்களில் ஒன்று நிலையானது (சூரியன்) நிலையற்றது மற்ற வால்வெள்ளியாகும்.மோதுகை காரணமாக வெடித்துச் சிதறி பூமி, மற்றக்கிரகங்கள், உபகிரகங்கள் தோன்றி நிலையான நட்சத்திரமான சூரியனை வலம் வருகின்றது.

பூமியின் ஆரம்ப காலத்தில் அதன் பொருள்கள் வாயுமயமாகவும், மிக வெப்ப நிலையிலுமே இருந்திருக்க வேண்டும். காலம் செல்லச் செல்ல பூமியின் வெளிப்புறங்கள் குளிர்ந்தன. இதனால் பூமியைச் சூழ்ந்து வளிமண்டலம் தோன்றியது. பருவ காலங்கள் உண்டாயின. மழை பொழிந்து கடல் தோன்றியது.

பலகோடி வருடங்களுக்குப் பிறகு "உயிர்" என்று நம்மால் தற்காலத்தில் அறியப்படும் பொருள் தோன்றியிருக்க வேண்டும். இது எப்போது? எங்கே? எப்படி? தோன்றியது என்பது திட்டமாக நிர்ணயிக்க முடியாததொன்று.

ஆதி காலத்தில் உயிர் தோன்றும் முறை பற்றி மூன்று கொள்கைகளுண்டு. அவையாவன.

- தானாகவே உற்பத்தியாகுதல் **(SPONTANEOUS GENERATION OF LIFE)**
- கடவுளால் உண்டாக்கப்படுதல்
- இயற்கை உற்பத்தி **(NATURALISTIC THEORY)**
- 

**தானாகவே உற்பத்தியாகுதல்**

உயிர் தானாகவே தோன்ற முடியும் என்ற கொள்ளை உலகிற் பல காலமாக நம்பப்பட்டு வந்தது. பெரிய உயிரினங்கள் மற்ற உயிரினங்களிலிருந்து தோன்றிய போதிலும், மிக நுண்ணிய உயிரினங்கள் தாமாகவே தோன்ற முடியும் என்றே பல விஞ்ஞானிகளும் நம்பியிருந்தார்கள். இதற்குச் சாட்சியாக அழுகிக் கொண்டிருந்த இறைச்சியில் புழுக்கள் திடீரென்று தோன்றுவதைச் சுட்டிக் காட்டினார்கள். ஆனால் விஞ்ஞான முறைகளில் படிப்படியாக நடாத்தப்பட்ட சோதனைகளின் மூலம் இவ்வுயிரினங்களும் முன்னர் வாழ்ந்த உயிரினங்களிலிருந்தே உற்பத்தியாகின்றன எனக் கண்டறியப்பட்டது. ஆனால் தற்காலத்தில் உயிரினங்கள் வேறு உயிரினங்களிலிருந்தே தோன்றுகின்றன என்பது பொதுவாக ஒப்புக் கொள்ளப்படுகிறது.

*கடவுளால் உண்டாக்கப்படுதல் *

இக் கொள்கையின் படி எல்லா உயிரினங்களும் சர்வ சக்தி வாய்ந்த கடவுளால் அவ்வப்போது உற்பத்தி செய்யப்படுகின்றன. இத்தகைய உற்பத்தி இப் பிரபஞ்சத்தில் ஒரு முறையோ பல முறையோ நடந்திருக்கலாம்.

*இயற்கை உற்பத்திக் கொள்கை. *

உயிர், உயிரற்றவற்றிலிருந்து தோன்றியது என்பது இக் கொள்ளையின் அடிப்படைக் கொள்ளை. உலகின் நீண்ட சரித்திரத்தில் ஏதோ ஒரு காலத்தில் உயிரற்ற பொருட்கள் பல உயிரினமாக ஒன்று சேர்வதற்கேற்ற சூழ் நிலையில் இருந்திருக்க வேண்டும். உயிரினங்களும், உயிரற்ற பொருட்களும் பலவற்றின் சேர்க்கையே. உதாரணமாக வைரசு எனப்படுபவை உயிரினங்களைப் போன்று பெருக்கமடைகின்றன. ஆனால் உயிரற்ற சில சேர்க்கைகள் போன்றும் பளிங்குகள் ஆகின்றன. எத்தகைய சூழல் உயிரற்றவைகளை உயிரினங்களாக மாற்றுவதற்கு உதவியது என்பதை நாம் அறியாததோ அல்லது அத்தகைய சூழ்ல் தற்காலத்தில் இல்லை என்பதோ இக் கொள்ளையைப் பொய்யாக்காது.

இக் கொள்ளையின் படி உயிர் முதன் முதலாக தோன்றிய பிறகு அதில் உள்ள நியூக்கிளிக் கமிலத்தின் மூலம் பரம்பரை பரம்பரையாகப் பலவித உயிரினங்களாகப் பெருகியது இந்தக் கொள்ளையே "கூர்ப்புக் கொள்கை" எனப்படும்.

***கூர்ப்பு எனப்படும் சொல் பின்வருவனவற்றைக் குறிக்கின்றது.

* எல்லா உயிர்களும் முன்னுள்ள உயிரினங்களிலிருந்தே தோன்றுகின்றன. (பாரம்பரியம்)

* இப் பாரம்பரியத்தில் உயிரினங்களின் உடலமைப்பில் சிறு சிறு மாறுதல்கள் தோன்றுகின்றன. (மாறுதல்களுடன் பாரம்பரீயம்).

இவ் உயிரின வகைகள் காலத்தில் ஒன்றன் பின் ஒன்றாகத் தோன்றுகின்றன.

* பொதுவாக மாறுதல்கள் மிக மெதுவாகவே நடக்கின்றன.

* இம் மாறுதல்களெல்லாம் உயிரினத்தின் உடல்மைப்பயைும், இயங்கும் தன்மைகளையும் சூழலுடன் இயக்கி நன்கு வாழச்

செய்வதின் அடிப்படையிலே இருக்கும்.

இக் கூப்புக் கொள்கையை நிரூபிக்குமுகமாக அமைந்த உயிரியலறிவுச் சாட்சிகள் சில கீழே விபரிக்கப்பட்டுள்ளன.

1. உயிரினப் பாகுபாட்டின் சான்று.

உலகில் தாவர விலங்கின உயிரினங்களில் பலவிதங்களுள்ளன. ஆனால் இவற்றை நன்கு படித்திருந்தால் உலகிலுள்ள தாவரங்ளையும், விலங்குகளையும் இரு பகுதிகளாகப் பிரித்த பின் ஒவ்வொரு பகுதியிலுள்ள உயிரினங்களையும், படிப்படியாக உடலமைப்பில் சிரத்தையடைந்த உயிரினங்களாக வகுக்க முடியும். உதாரணமாக சிக்கலற்ற அமைப்புடைய ஒரு கல விலங்குகளை இரு கலப்படைகள் கொண்ட விலங்குகள் மூலமும், மிகச் சிக்கலான அமைப்புடைய சூத்திரப் பொருட்கள் மூலமும் முள்ளந்தண்டுகளுடன் இணைக்கவியலும். ஒரு விலங்கினக் குழுவாகிய முள்ளந்தண்டு எலும்புள்ளவற்றுக்குள்ளும் இப்படி படிப்படியாகக் கூர்ப்படைந்துள்ள தன்மையை விளக்கமாகக் காணமுடியும். இவ்விலங்குகளை மீன்களிலிருந்து முலையூட்டிகள் வரை வகைப்படுத்துவது விஞ்ஞான முறையிற் தோன்றிய மரபே.

உயிரினம் நன்கு வளர்ச்சியடைந்த நிலையில் சூழ்நிலைக்கும், வாழும் முறைகளுக்கும், ஏற்ற இனங்கலாக உடலமைப்புச் சிக்கலடைந்திருக்கலாம்.

* உருவவியல், உடலமைப்பியல் போன்றவற்றின் சான்று *

உருவத்தில் வேற்றுமை மிகுந்துள்ள உயிரினங்களும் ஒரே விதமாய் உற்பத்தியாகும் உறுப்புக்கள் பலவற்றைக் காணலாம்.

உதாரணமாக *

எலியின் முன் கால்கள், பறவை, வௌவால் ஆகியவற்றின் சிறகு, ஆமை, திமிங்கிலம் ஆகியவற்றின் துடுப்புக்கள் ஓரேவித உற்பத்தியுடையயவை.

முள்ளந்தண்டுள்ள விலங்குகளை ஒப்பிட்டால் இவற்றைச் சிக்கலற்ற அமைப்புடையவைகளிலிருந்து மிகச் சிக்கலான அமைப்புடைய விலங்கினம் வரையில் படிப்படியாக அடுக்க முடியும் என்பது விளங்கும். இவ் விலங்கினங்களின் மண்டலங்களில் பல அமைப்பொத்த உறுப்புக்களுள்ளது. எளிதில் விளங்கும். இது சிக்காலன அமைப்புடைய உயிரினங்கள் சிக்கலற்ற அமைப்புடைய உயிரினங்களிலிருந்தே தோன்றியிருக்கக்கூடும் என்பதற்கு ஒரு சான்றாகவுள்ளது. இத்தகைய அடுக்கு முறை கற்பனையிலுதித்த தொன்றன்று என்பதை தவளை போன்ற விலங்கின வளர்ச்சியே நன்கு விளக்குகின்றன. இதனில் உறுப்பு மண்டலங்கள் நீரில் வாழ்வதற்கேற்ப்ப இணங்னயிலிருந்து நிலத்தில் வாழக்கூடிய இணங்களைப் படிப்படியாக பெறுவது விலங்கின சரித்திரத்திலும்

இத்தகைய மாறுதல் எப்படி நடந்திருக்கக் கூடும் என்பதற்கோர் எடுத்துக்காட்டாய் உள்ளது. தவிர சிக்காலான அமைப்புடைய உயிரினங்களில் பல சுவட்டு உறுப்புக்கள் உள்ளன. இவ் உயிரினங்களில் இவ் உறுப்புக்கள் ஒரு தொழிலையும் செய்வதில்லை. உதாரணமாக மனிதனில் காதுச் சோனை, குடல்வளரி, இவ் விலங்கினத்தின் சரித்திரத்தில் ஏதோ ஒரு காலத்தில் இவ் உறுப்புக்கள் தொழிலுள்ள வகையில் இருந்திருக்க வேண்டும்.

கூர்ப்பு அல்லது சிறத்தல் எப்படி நடந்தது எனப் பல கொள்கைகள் உள்ளன. அவற்றுள் சில தரப்படுகிறது.

இதில் பல விஞ்ஞானிகள் சம்மந்தப்பட்டிருக்கிறார்கள்.

1. ஜீன் டாட்டிஜ்ட் இலாமார்க்கு
2. சாள்ஸ் டார்வின்

அவர்கள் அடிப்படை உயிர்ப் பொருட்களிலிருந்து பலவேறு உயிரினங்கள் எவ்விதமாகச் சிறத்தரடைந்திருக்கக்கூடும் என்பதை நம்பத் தகுந்த தத்துவங்களினால் விளக்கியுள்ளார்.

*** இலாமார்க்கு ***

அவர் பிரான்ஸ் உயிரியல் மேதை. இடைக் காலத்தில் ஐரோப்பியாவில் பரவியிருந்த பலவித குருட்டு நம்பிக்கைகளுக்கு மாறாக அறிவை வளர்க்க முக்கிய தூண்டுகோலாக இருந்தவர். அவர் பின்வருவனவற்றைச் செய்தார்.

1. உயிரியல் (Biology) என்ற சொல்லை முதலில் தொகுத்தவர் இவரே.
2. அவர் காலத்தில் அறியப்பட்டிருந்த விலங்கினங்களை விஞ்ஞான அடிப்படையில் முதன்முதலாக பயன்படுத்தினார்.

அடிப்படை உயிர்ப் பொருளிலிருந்தே பலவேறு வகை உயிரினங்கள் சிறத்தலடையக்கூடியதை இலாமார்க் கீழ்வருமாறு விளக்கியுள்ளார்

1. உயிரினங்கள் வேறு உயிரினங்களிலிருந்து ஒழுங்காகத் தோன்றுகின்றன. இத்தகைய பாரம்பரியத்தில் இவை படிப்படியாக சூழ்நிலைக்கேற்ப இணக்கங்களை நன்கு பெறுகின்றன.

2. உடலில் ஏற்படும் மாற்றங்கள் உயிரினத்துக்குள்ள ஒரு தேவையைப் பூர்த்தி செய்வதற்காகவே அவை தோன்றுகின்றன. இம் மாற்றங்கள் உயிரினம் சூழலுடன் நன்கு இணைந்து வாழ உதவுகிறது.

3. இவ்வாறாக ஒவ்வொரு மாற்றமும் ஒரு புதுச்சூழலாக இயங்கித் தானும் மற்றோர் அமைப்பு மாறுதலை உண்டாக்கக் காரணமாகின்றது.

4. சூழலின் தேவைகளுடன் இணங்கி வாழப் பெற்ற அமைப்பு மாற்றங்கள் அடிக்கடி உபயோகிப்பதனால் பலமடைந்து பெரிதாகின்றன. இவ்வுறுப்பு உபயோகிக்கப்படாவிடில் சுருங்கிப் பாரம்பரியத்தில் முழுவதும் மறையவும் கூடும்.

5.அத்தகைய பெறப்பட்ட இயல்புகள் இன விருத்தியின் போது தலைமுறையுரிமையாகத் தோன்றுகின்றன.

*சால்ஸ் டார்வின். *

இங்கிலாந்தில் 1809ம் ஆண்டு பெப்ரவரி 12ம் தேதி பிறந்தார். உயிரியலறிவு வளர்ச்சிக்கு இவர் செய்த தொண்டுகள்.

1. உயிரினங்களின் அமைப்பு, பழக்கங்கள், சூழ்நிலை ஆகியவற்றைப் பற்றி பெருமளவில் அவர் உண்மைகளை ஆராய்ந்தார்.

2. உயிரினங்களிடையே வெளிப்படையாகத் தெரியும் வேறுபாடுகளில் அடிப்படையானதோர் ஒற்றுமையுள்ளது என்பதை விளக்கினார்.

3. உலகிலுள்ள பல்வேறு உயிரினங்கள் எவ்விதமாகச் சில அடிப்படை இனங்களிலிருந்து சிறத்தலடைந்திருக்கக்கூடும் என்பதற்கு நம்பத்தகுந்ததோர் தத்துவத்தை விளக்கினார்.

இளம் வயதில் உலகத்தைச் சுற்றிப் பிரயாணம் செய்த போது உலகிலுள்ள உயிரினங்கள் முழுதும் ஒத்தவை எனக் கூறக்கூடிய இரு உயிரினமேனும் இல்லை என ஆராய்ந்தறிந்தார். ஓர் இனத்திடையே உள்ள சராசரித் தன்மைகளைச் சூழ்ந்தே உள்ளது. இச் சராசரித் தன்னைகளே அவ் இனத்தின் குணங்கள் எனக் கூறப்படுகிறது.

இத்தகைய மாறுதல்கள் தாமாகவே தோன்றுவன என்றும் சராசரித் தன்மையிலிருந்து சிறிதளவே மாறுபட்டிருப்பதால் ஏற்றவிளக்கம் எனவும் டார்வின் கூறினார். இத்தகைய மாறுதல்கள் தலை முறை உரிமையாகத் தோன்றுவதையும் இவர் கண்டறிந்தார்.

உயிரினங்கள் மிகப் பெரிய அளவில் இனப் பெருக்கமடையும் தன்மையுள்ளவை. ஆனால் ஓர் இனத்தின் தொகை பல தலைமுறைகளுக்கு கிட்டதட்ட ஒரே நிலையிலுள்ளது அல்லது மிகமிக மெதுவாகவே கூடுதலடைகிறது. ஆகையால் பிறக்கும் இனங்களில் பெரும்பான்மை இனப் பெருக்கமடையக்கூடிய

பருவத்தையடையாமல் இளம் பருவத்திலேயே வாழ்க்கைப் போரினால் இறக்கின்றன. இவ் வாழ்க்கைப் போரின் காரணமாக ஒரு சூழலில் வாழும் உயிரினங்களிடையே இயற்கைச் சமநிலையொன்று உண்டாகின்றது. வாழ்க்கைப் போரில் உயிர் வாழத் தகுதியுள்ளவை அச் சூழலுக்கேற்ற இணக்கங்களைக் கொண்டுள்ளவை என்றார். இவை இயற்றையாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றன என்பதனால் தொடர்ந்து உயிர் வாழும் தன்மையை இயற்கைத் தேர்வு எனக் குறிப்பிட்டார்.

**இயற்கைத் தேர்வுக் கொள்கைப்படி புதிய இனங்கள் இவ்வாறு தோன்றுகின்றன.**

1. எந்த இனத்தைச் சேர்ந்த உயிரினங்களிடையேயும் தாமாகவே தோன்றிய சிறு சிறு மாறுதல்கள் பல உள்ளன. இம் மாறுதல்கள் இனத்தின் சராசரித் தன்மையிலிருந்து அதிகமாக வேறுபட்டிருக்காது. இத் தன்மைகளைச் சூழ்ந்தே காணப்படும்.

2. தாமாகவே தோன்றிய இம் மாறுதல்கள் சில மற்றவற்றைக் காட்டிலும் ஒரு குறிப்பிட்ட சூழலிற் தொடர்ந்து உயிர் வாழ உபயோகமாயிருக்கக் கூடும். இத்தகைய மாறுதல்கள் உள்ள உயிரினங்கள் இனப்பெருக்கமடையும் பருவம் வரை தொடர்ந்து உயிர் வாழுகின்றன. மற்றவை வாழ்க்கைப் போரில் மடிகின்றன.
3. இம் மாறுதல்கள் இனத்திலே தலை முறையுரிமையாகத் தோன்றுகின்றன.

4. ஒரு தலைமுறையில் உயிர் வாழ்ந்த இனம் அதன் அடுத்த சந்ததி தமக்குள்ளையே மாறுதல்களைக் கொண்டுள்ளன. ஆனால் அம் மாறுதல்கள் சென்ற தலைமுறையில் புதிதாகத் தோன்றிய மாறுதலைச் சூழ்ந்தே உள்ளன.

5. ஒவ்வொரு தலைமுறையிலும் சூழலில் நன்கு வாழத் தகுந்த உயிரினங்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. பல முறைகளுக்குப் பின் இவ் உயிரினம் அன்று முதல் எம் பிறந்த மூதாதையினத்திலிருந்து உருவத்தில் மிக வேறுபட்டு புது இனம் என்று வழங்கக்கூடிய நிலையை பெறுகின்றது.

6. இயற்கை ஒரே நேரத்தில் உடலிலுள்ள பல மாறுதல்களில் தேர்வு நடத்திக் கொண்டதாகவுள்ளது. தவிர சூழ்நிலைகளுக்கு உலகில் பலவிதங்களில் வேறுபட்டுள்ளன. ஆகையினால் நெடுங்காலத்தில் சில இனங்களிலிருந்து பல இனங்கள் தோன்றுவது ஆச்சரியமன்று.

இயற்கையில் இத்தகைய திடீர் மாற்றங்கள் தோன்றுவதனை டார்வின் அறிந்திருந்தார். ஆனால் புதிய இனங்கள் தோன்றுவதில் அவை முக்கிய பங்கு கொள்வதில்லை என்றே கருதினர். ஆனால் தலைமுறையுரிமையாகத் தோன்றும் இவ்விகாரங்களே. இனங்கள் சிறத்தலடைவதில் மிகப் பெரும் பங்கை ஏற்கின்றன என்பது

தற்காலத்தில்அறியப்பட்டுள்ளதோர் உண்மை. இயற்கைத் தேர்வு நடந்து வாழ்க்கைக்கு தகுதியற்றவை வாழ்ந்து இனப்பெருக்கமடைகின்றன.

விகாரங்கள் திடீரென்று ஓர் இனத்தை மாற்றும் தன்மைகளை ஒரு தலைமுறையிலேயே தோற்றுவிக்கின்றன. மாறிய இத் தன்னைகள் தலைமுறை உரிமையாகப் பாரம்பரியத்தில் தோன்றும் பொழுது புதிய இனம் தோன்றுவதற்குக் காலம் அதிகரிக்க வேண்டியதில்லை. பல விகாரங்கள் தோன்றி அவற்றினிடையே டார்வின் கூறியது போல் வாழ்க்கை போராட்டத்தில் ஓர் இயற்க்கைத் தேர்வு நடந்து வாழத் தகுதியற்றன அழிந்து தகுதியுள்ளவை இனப் பெருக்கமடைவதின் மூலம்தான் கூர்ப்பு நடந்தள்ளது என்று நம்பப்படுகின்றது.

நன்றி.

ஆக்கம் :- செல்வி . எஸ். செலோஜினி,
கல்விக் கல்லூரி (ஆசிரியை)

## குருவியின் கடிதம்

சுடுகாடு வீதி,
சுடுகாடு,
ஆரையம்பதி.

அன்பின் நண்பா,

### பங்குனி மாத வெயில்

"பங்குனி மாத வெயிலில் போறவனைப் பார்த்திருப்பவனும் பதறுவான்" என்பதைப் போல் வெயிலில் போறவனைப் பார்க்க மிகவும் மனவருத்தமாகத்தான் இருக்கிறது.இதற்கு நான் மட்டும் விதிவிலக்கல்ல.

எமது ஆரையம்பதி மகா வித்தியாலயம் அமைந்திருக்கும் இடம் உமக்குத் தெரியும் தானே? நிழலைக் காணவே முடியாது.பாடசாலைப் படிக்கட்டை விட்டு வெளியேறினால் போதும் அக்கினி பகவானின் அட்டுழியத்திற்கு ஆளாகியே தீர வேண்டும்.அவ்வளவு அநியாயம்.மேலும் சூடு, கீழும் சூடு இதிலிருந்து எம்மைக் காப்பாற்ற வேண்டுமானால் ஏதும் உபகரணம் வேண்டும்.உடுப்பிடவைக்கோ கஷ்ரப்படும் போது, வாங்குவோமா என்றால் விலையா அது? நாக்கூசிகிறது.அதிகம் நண்பா எழுத வில்லை. ஆதவன் அறிந்தால் அதோகெதிதான்.

-பொ.வினோஜன்,

# குரங்கின் பார்வையில் மனிதர்கள்.

ஆம். எனக்கு அன்று நடந்த சம்பவம் ஒன்று இன்று என் ஞாபகத்திற்கு வருகிறது.எமது விலங்குகளின் புகலரணாக விளங்கும் மிருகக்காட்சிச் சாலையில் நான் வசிக்கும் போது,சில சொற்பொழிவுகள் அங்கு நடைபெற்றதுஎன்னை சிந்திக்க வைத்தது.

அது ஓர் அரசியல் கூட்டம் என நினைக்கின்றேன்,அதில் ஓர் அரசியல்வாதி எதிர்க் கட்சிஅ ங்கத்தவர்களை பலவாறாக சாடினார்.சுய புத்தி கொண்டவர்கள்,நிமிடத்திற்கு நிமிடம் கொள்கைகளை மாற்றும் தன்மை கொண்டவர்கள் நரிப் புத்தியாக செயற்படுபவர்கள் அவர்கள் மொத்தத்திலே நச்சுப் பாம்பு போன்றவர்கள் என்று கூறுவதே பொருத்தம் என பேசினார்.

அதே போன்று மறு நாள் மற்றுமோர் அரசியல் கூட்டம் நடைபெற்றது.அது எதிர் அணியினரது கூட்டமாக இருக்குமென நினைக்கின்றேன்.அந்தக் கூட்டத்திலே ஒரு பிரமுகர் சொற்பொழிவாற்றினார்.அதில் அவர் கூறிய வாசகம் சற்று என்னை திகைக்க வைத்ததுடன் மன வேதனையையும்ஏற்படுத்தியது.குரங்கிலிருந்துதான்மனிதன்தோன்றினா ன்.அதனாலேதான் மனிதனுக்கு குரங்குப் புத்தி அதிகமாக உள்ளது.குரங்கு எவ்வாறு மரத்திற்கு மரம் தாவுகின்றதோ,அதே போலவே மனிதனும் கட்சிவிட்டு கட்சி மாறுகின்றான் என்று அவர் கூறிய வாசகம் என் மனதைத் தொட்டு விட்டது.

ஆனால் மனிதனின் செயலை சற்று ஆழமாக சிந்தித்தால் எனக்கு சிரிப்புடன் மனிதனின் மேல் வெறுப்பும் ஏற்படுகின்றது.மனிதனைப் பார்த்து மனம் பொறுக்க முடியாத கவிஞர் கண்ணதாசன்பாடிய பாடலிலே "மனிதன் இருக்கின்றானா?- இறைவன் கேட்கின்றான் அவன் இருந்தால் உலகத்திலே எங்கே வாழ்கின்றான்? நாயும் நரியும் புலியம் பாம்பும் வாழும் பாழும் உலகத்திலே மனிதனைக் காணவில்லை என்று பாடுவது உண்மைதான்.

மனிதனில் மனிதனைக் காணவில்லை.மனிதனுக்குள்ளே இருப்பது நாயும் நரியும்,மாமிசம் உண்ணும் புலியும் சிங்கமும்,சத்தமில்லாமல் நஞ்சை ஏற்றிவிடும் நச்சுப் பாம்பும்,தந்திரியாகநடமாடும்நரியுமேஎனக் கூறுகின்றார்.உண்மைதான் இவ்வாறு கெட்ட செயலுடன் துர்நடத்தையும் இழிவுச் செயலும் நிறைந்த மனிதர் எங்களின் வாரிசு என நினைக்கும் போது உண்மையிலேயே தூக்கிலிட்டு துஞ்சிவிடலாம் என நினைக்கத் தோன்றுகிறது.குரங்குகுளாகியஎங்களிடம்மறதிஇருக்கும்.ஆனால்,மமதை தஇருக்காது. மற்றவர்களை சித்திரவதை செய்து பிழைப்பதற்கு எங்களுக்குத் தெரியாது.மற்றவர்களை ஏமாற்றிப் பிழைக்கும் தந்திரம் எங்களுக்கில்லை.

-மாணவி.செல்வி.ப.இலக்கியா-



## கல்வி எங்கள் சொத்து

குண்டொலிக்கும் செல்லடிக்கும்
நெஞ்சை நிமிர்த்தும்
எங்கள் கல்வி.

குண்டுகள் விழுந்த போதெல்லாம்
நாம் விழித்துக் கொள்வோம்.
நாம் இழந்தவற்றை தேடுகிறோம்
இழந்து கொண்டிருப்பதைப்
பார்த்து கொண்டிருக்கிறோம்.

நாங்கள் உணர்ந்து
கொள்ளாத சொத்து
வருந்தி தேடாமல்
வாழ்க்கையில்
வருத்தப்பட்டிருக்கிறோம்.

எதிரிகள் குறிவைத்ததெல்லாம்
என்னவோ.
பள்ளிகளையும் நூலகங்களையும்
நாம்,உணர்ந்து கொள்ளவுமில்லை
புரிந்து கொள்ளவும் இல்லை
அவன் புரிந்தே செயற்பட்டான்.
அதை புரியவும் பல நாட்கள்

எங்கஏ் கல்வி எங்களின் முதிசம்
வேட்டுகளும் அதிர்வுகளும் எங்களை
ஒன்று செய்யாதான்
வரும் காலத்திற்காய்
வளரும் சுதந்திரத்திற்கு
கிள்ளியாவது வைப்போம்
அவை கிளை விட்டு வளர
நல்லவர்களாய் உயர்ந்து நிற்போம்
நல்லவர்களாய் நிமிர்ந்து நிற்போம்.

திருமதி.விஜேஸ்வரி
மணிசேகரன் (ஆசிரியை
பயிற்றப்பட்ட
ஆரம்பப்பிரிவு

## -தமிழ் இலக்கியப் பாரம்பரியத்தில் உமறுப் புலவர்-

தமிழ் இலக்கியப் பரப்பினைப் பொறுத்த வரையில் இஸ்வாமியப் புலவர்களின்பங்களிப்பு குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றிருக்கிறது என்பது யாவரும் அறிந்த உண்மையாகும் . தமிழ் இலக்கிய மரபின் அடியாகவே இஸ்லாமியப் புலவர்கள் இலக்கியங்களைப் படைத்தனர். தமிழில் வழங்கிய இலக்கிய வடிவங்களை அடிப்படையாகக் கொண்டு தம் இலக்கியங்களை யார்த்தனர். ஆற்றுப்படை அந்தாதி, பிள்ளைத்தமிழ் , கலம்பகம், அம்மானை, மாலை, ஊஞ்சல்,திருப்புகழ், சிந்து, கும்மி, தாலாட்டு, போன்ற இலக்கிய வடிவங்களை உதாரணமாகக் கூறலாம். இதைவிடப் படைப்போர் இலக்கியம் எனும் புதிய வடிவம் தமிழில் உள்ளது. ஏனைய முனாஜாத்து , கிஸ்ஸா மசாலா போன்ற பிரபந்தங்களும் முஸ்லிம் மக்களுக்கேயுரிய பிரபந்தங்களாக அரபு, பாரசீகப் பெயர்களுடன் தமிழ் இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளன. இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களில் அனேகமானவை நபிகள் நாயகம் (ஸல்) அவர்களையே தலைவராகக்கொண்டு இஸ்லாமியக் கோட்பாடுகளை எடுத்தியம்புகின்றன.

உமறுப் புலவர் தமிழ் இலக்கியத்தில் பெறும் முக்கியத்துவத்தினை நோக்குவோமாயின் இவரைப்பற்றியும் இவர் படைப்புகள் பற்றியும் அப்படைப்புகள் அவருக்குப்பின் வந்த புலவர்களை எவ்வாறு பாதித்தது என்பது பற்றியும் அறிய வேண்டியது அவசியமாகும். உமறுப் புலவர் இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு சிற்றூரான நாகலா புரத்தில் மாப்பிள்ளை முகம்மது நெய்நார் பிள்ளையின் புத்திரராக, வாசனைப் பொருள் விற்கும் குலத்தில் தோன்றினார். என ஒரு பாடல் மூலம் அறியக்கிடக்கிறது. உமறுப்புலவர் எட்டயபுரம் சமஸ்தானப்படி புலவர் கடிகை முத்துப் புலவரிடம் தமிழ் பயின்றார். இவர் எட்டய புர வேந்தனின் அவைக்கள புலவராக இருந்தார்.

இவர் வாழ்ந்த காலம் 17ம் நூற்றாண்டாகும். ஹிஜ்ரி 1052ம் ஆண்டு (கி. பி 1642) பிறந்தார என்றும் ஹிஜ்ரி 1115ம் ஆண்டு (கி.பி 1703) எட்டய புரத்தில் இறந்தார் என்றும் கூறப்படுகிறது. உமறுப்புலவர் சீதக்காதி என்று வழங்கப்பட்ட செய்கு அப்துல காதிர் மரக்காயர் காலத்தவர் என்று கூறுவர்.

இவர் சீறாப்புரானம் என்று போற்றப்படடம் பெரும் இலக்கிய நூலையும் மற்றும் முதுமொழி மாலை,சீதக்காதி மீது திருமண வாழ்த்து ஆகிய நூல்களையும் இயற்றியுள்ளார். ஆனாலும் அவர் பெருமையை உணர்த்தி நிற்பது சீறாப்புறானமே சீறா என்பது சீறத் என்ற அறபுச் சொல்லில் இருந்து வந்தது சீறத் -சரிதை வரலாறு எனப் பொருள்படும். ஸுரதுன்னபி (நபியின் வரலாறு ) என்பதன் சுருக்கமே சீறா என்பது, நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வரலாற்றை எடுத்துரைப்பது சீறாப்புராணம்.

சீறாப்புராணம் மூன்று காண்டங்களைக் கொண்டது. 5027 பாடல்களை உள்ளடக்கியுள்ளது. முதல் காண்டம் முகம்மது நபியின் பிறப்பு, இளமைப்பருவம் பற்றிக் கூறுவது 24 படலங்களையும் 1239 செய்யுட்களையும் கொண்டது. நுபுவத்துக் காண்டம் 25 படலங்களையும் 1105 செய்யுட்களையும் கொண்டது. ஹிஜ்ரத்துக் காண்டம் 47 படலங்களையும் 2683 செய்யுட்களையும் கொண்டது. உமறுப்புலவர் நபிகள் நாயகத்தின் முழுவரலாற்றையுமே கூறவில்லை. ஊரணி கூட்டத்தார் படலத்துடன் நின்று விடுகிறது. பனி அகமது மரக்காயர், செய்கப்துல் காதர் நெயினார் முதலானோர் நபிகள் வரலாற்றின் எஞ்சிய பகுதிகளைப்பாடி உமறுப்புலவர் தொடக்கிய பணியினை முடித்துள்ளனர். அவர் பாடிய அச் சீறாப்புராணமே அவரையுமே பெரியவராக்கி இஸ்லாமிய தமிழ் இலக்கியத்திற்கும் பெருமை சேர்த்தது.

சீறாப்புராணம் தனக்குப் பின் வந்த இஸ்லாமிய இலக்கியங்களைப் பெரிதும் பாதித்தது என்றே சொல்ல வேண்டும். எப்படித் தமிழ் புலவர்கள் கம்பனைப் போற்றினார்களோ அதே போன்று உமறுப் புலவரை இஸ்லாமியப் புலவர்கள் போற்றுகின்றனர்.

" ...... சீறா வென்னா
முதனுல் நாமமே நாட்டி முதுபயன்
அறம் பொருள் இன்பம் வீடுகளனைத்து மடங்கிய
திறம் பெரும் காப்பியம் செய்தனர் ' என்று

சீறாப் புராணத்தை அச்சேற்றியவரான புலவர் நாயகம் செய்கு அப்துல் காதர் நயினார் லெப்பை ஆலிம் புலவர், உமறுப்புலவரை பாராட்டுகிறார்.இவருக்குப் பின்வந்த புலவர்கள் இவரைப் பின் பற்றி பல இலக்கியங்களைப் படைத்தனர். நபிகள் நாயகத்தின் வரலாற்றைப் பல புலவர்களும் கருவாகக் கொண்டு இலக்கியம் யார்த்தனர். இது உமறுப் புலவர் காட்டிய வழியேயாகும். உதாரணமாக புலவர் நாவலர் வலி நாயகம் இயற்றிய சேது புராணம் செய்கு அப்புல் காதிருநயினார் லெப்பை இயற்றிய புதுக் குஸ்'ாம் புராணம் முதலானவற்றைக் குறிப்பிடலாம். இவற்றை விட நெய்து தம்பி பாவலர் " சீறாப்புராண உரைப்பதிப்பு" நூலையும் நெய்து அபூபக்கர் புலவர் "சீறா கீர்த்தனம்" என்ற நூலையும் உமறுப்புலவர் அடிச்சுவட்டில் இலக்கியம் படைத்துள்ளனர். யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த சேகுத்தம்பிப்புலவர் "சீறா நாடகம்" என்ற நூலையும் இயற்றியிருக்கிறார்.

இவ்வாறு தமிழ் இலக்கியப் பாரம்பரியத்தில் உமறுப்புலவர் சிறப்புப் பெறுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

-திருமதி.சு.ஸ்ரீதரன்
பட்டதாரி ஆசிரியை

# மண்பானைபோதித்த தத்துவம் (சுயசரிதை)

மனம் நொந்து மூலையில் ஒதுங்கி கிடந்த நான் இன்று வீதியின் அனாதரவாகி நடு வீதியில் உடைந்து கிடக்கின்றேன். இது என் தலை விதி. இதுதான் விதி எனக்கு எப்படி இருந்தாலும் அதை நிர்ணயிப்பது நான்தான் அதை வளி நடத்துவதும் நான்தான். இதை ஆட் கொள்வதும் நான் தான். இதை யாரும் நன்கு அறிய மாட்டார்கள். அறிந்திருந்தாலும் ஏளனமாக ஊதாரினப்படுத்தி கொள்வார்கள்.

ஒரு மனிதன் தன்னைப் பற்றி உணர்ந்து கொள்ளாதவரை தன்னைப் பற்றி யார் என்று அறிந்து கொள்ளாத வரை பல கஸ்டங்களை அனுபவிக்கத்தான் வேண்டும. அது அவனது தலை விதி அது அவனாகவே தேடிக் கெகாண்டது. நான் ஏன் இப்படிச் சொல்கிறேன் என்றால் என்னை அவமதித்த ஒருவன் தன் விதியை உணர்ந்து கொள்ளவில்லை அவனுக்கு என்ன நடக்கும் என்பதை அறியாதவனாய் என்னை கொடுமைப் படுத்தினான். அதுதான் எனக்கு வேதனை.

நான் ஒரு காலம் வீட்டு மனையாளுக்கு உதவி செய்பவனாக இருந்து வந்தேன் அந்த மனையாள் என்னை தீயில் மட்டும் வேக வெய்க்க வில்லை வீட்டுக்குள் என்னனைப் பத்திரமாக பாதுகாத்து பல பொருட்கள் என்னிடம் தந்து வைப்பாள் நான் பத்திரப்படுத்திக் கொடுப்பேன்.

ஒரு நாள் தவறியதால் ஏதோ அடிபட்டு என் உதடு உடைந்து சேதமடைந்து விட்டது. எனக்கு கொஞ்சம் வேதனைதான். அப்படி இருந்தும் வீட்டு மனையாள் என்னை கைவிட வில்லை அன்றொரு நாள் வீட்டில் உள்ள எஜமான் வீடு சுத்தப்படுத்தும்போது நான் இருப்பதை அவர் விரும்பவில்லை . என்னை தூக்கி நடு வீதியில் எறிந்து விட்டார். நான் சின்னா பின்னமானக உடைந்து விட்டேன்.

இப்பொழுது நான் நடு வீதியில் மனம் நொந்து வேதனையில் கிடக்கின்றேன். எங்கோ இருந்து வந்த வழிப்போக்கன் ஒருவன் வந்து கொண்டிருக்கிறான் அவன் என்னைப் பார்த்து ஏன் நீ வீதியில் உடைந்துகிடக்கிறாய் என்று என் மீது ஏறி என்னை நொறுக்கித் தூளாக்கி விட்டு பொறுமையுடன் சென்றான். நான் மேலும் வேதனைப்பட்டேன்.

வேதனை மிகுதியால் அவனை நான் அழைத்தேன். ஏ மனிதா நில்! அந்த அசரீதியான சத்தம் கேட்டு ஆச்சரியப்பட்டு விழித்து நின்றான். ஏன் தயங்குகின்றாய் வா! இங்கே அவன் பயந்தவனாய் எனக்கு பக்கத்தில் வந்து நின்றான். அப்பொழுது நான் சொன்னேன். ஏ மனிதா நீ பஞ்ச பூதங்களினால் ஆக்கப்பபட்ட ஓர் மனித பிறவி நான். மண் பிறவி ஒருபோதும் அழிவில்லை. பல ஜீவராசிகளுக்கும் பலம் அளிப்பதும் நான்தான்.

என்னால் பலரும் நன்மை அடைகின்றனர். நீ பிறந்ததும் என் மீதுதான் தவழ்ந்ததும் என் மடியில் தான். நடப்பதும் என்மீதுதான் மூடி வாய் அரவணைத்து கொள்வதும் நான்தான் அப்படிப்பட்ட என்னை நீ மறந்து வாழ முடிவு செய்து விட்டாய் அது நடக்காது என்னில் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து கொண்டிருக்கும் நீ என்னிடம் ஒரு காலம் விதி முடிந்து வரத்தான் போகிறாய். அப்போது நான் உன்னை அனு அனுவாக அரித்து சாப்பிட்டு முடிப்பேன். ஞாபகம் இருக்கட்டும் என்று நான் சொன்னேன். நான் சொன்னது பொய்யா?

வி.கார்த்தினி, தரம்.10M

- பொது அறிவு –

1. உயிரினங்களின் வகைப்பிரிவுகள் எத்தனை?
   8
2. உலகில் உள்ள புறாக்குடும்பங்கள் எத்தனை?
   42 குடும்பங்கள்
3. உலகில் உள்ள புறா இனங்கள் எத்தனை?
   300 இனங்கள்
4. புறா வாழாத பகுதி எது?
   அண்டாடிகா
5. மாடப்புறா தொடர்ந்து ஓய்வின்றி எவ்வளவு தூரப்பயணம் செய்யும்?
   சுமார் 2500 கி.மீ
6. தெற்காசிய முன்னுரிமை வர்த்தக உடன் படிக்கை எது?
   சப்தா
7. உலகத்தின் சர்க்கரைக் கிண்ணம் எனப்டும் நாடு எது?
   கியூபா
8. உலகில் மிகப்பெரிய கம்யூனிச நாடு எது?
   சீனா
9. உலகில் கூடிய தீவுகள் உள்ள நாடு எது?
   பிலிப்பைன்ஸ்
10. உலகிலே அதிக நூல்களை எழுதியவர் ?
    அலெச்சாண்டர் டூமாஸ்

# -ABACUS-

Do you really care for children a powerful advantage?
If yes, Now we have the solution.

That is Development of mental and Intellectual skills...

## ABACUS MENTAL ARITHMETIC.

The 21st Century has posed a challenge to human intelligence due to the fierce competition hence the need of the day is to nature the child's intelligence to cope up with the challenges in the competition area of education.

Abacus is an instrument used in ancient china to solve all arithmetic problems with in seconds. It has been accepted by the modern science that this instrument is very useful to develop human brain an entirely systematic manner.

Mental Arithmetic is a process which children are able to visualize the "ABACUS" and carry out complex mathematical problems including. Addition Subtraction, Multiplication and Division.

The brain development of a child is at the peak between the age 5 and 14. to create overall intelligence both sides of the brain should be stimulated .

Every child had his/ her own unlimited talents. Unfortunately most of them are unable to stimulate effectively and activate their hidden and stagnated mental power and skills mainly due to lack of Co – ordination between both sides of brain. This results in:-

- Week memory
- Loss of comprehension
- Poor in Observation
- Poor in Creativity
- Loss of self confidence
- Loss of concentration

- slow Listening
- Poor reading & writing
- Poor reading and writing
- Poor in Arithmetic and Maths

The parents anxiety in regard to the future of the children still exists despite adopting various means to educate their children which only results in curring high expenditure without fruitful results.

Are you really serious about your child's future?

Imagine your child handing those complicated calculations with ease and still managing to get the right answers even to the fifth decimal point with in seconds.

Abacus develops children's overall intelligence.

Creativity will be high only when there is communication and Co- operation among the two sides of brain. The right – side of the brain is the abode of intellect and it can be boosted by the information stored on the left.

Children train with the fingers of both hands which activate both right and left sides of the brain. Hence the imaging skills and concentration of the children are developed.

After the Abacus training programme the following question are evidently seen in the children.

- Extraordinary Memory power
- Deep concentration & Comprehension
- Speed, Accuracy & Creativeness
- Shay Listening power
- Better Observation
- Improvement in academic performance and mental computation skills
- Improvement in Arithmetical calculations and Mathematics.

Millions of students have enrolled and benefited through Abacus and Mental Arithmetic training programme all over the world.

Benefits of Children

01. Improve calculation ability
02. Will acquire speed and accuracy which will also boost their confidence level.
03. Get rid of somatoform disorders and examination related tensions.
04. They also stand apart with exams and other competitive exams.
05. Activate endurance, logical thinking and rational approach.
06. Will sharpen the listening power
07. Will reduce child's carelessness which in turn reduces mental carelessness.
08. Will develop better observation capabilities.

**Brain Functions**

| Left Brain | Right Brain |
| --- | --- |
| Sequence | Wholistic |
| Analysis | Intuition |
| Linear | Creative |
| Maths | Art |
| Language | Rhythm |
| Verbal | Non Verbal |
| Facts | Feeling |
| Word of songs | Think in picture |
| Computation | Tune of songs |
| Logic | DayDreaming |
| Imagination | |

Mrs. M. Logendrarajah (Trained Teacher in English)
BT/ Arayampathy M.V
Arayampathy.

# சிங்காசனச் சிறப்பு

மன்னன் ஒருவன் தனது பரிவாரங்களுடன் காட்டிற்கு வேட்டை ஆடுவதற்காகச் சென்றான். வெகு நேரம் வேட்டையாடியதாலும் வெயிலின் கொடுமையினாலும் பரி வாரங்களும் மன்னனும் பசியாலும் தாகத்தினாலும் சோர்வடைந்தன. இந்நிலையிலே மன்னன் தனது மதி நுட்பம் வாய்ந்த மந்திரியை அழைத்து அமைச்சரே தாகத்தினால் என் தொண்டை வரண்டு விட்டது. நீயும் இன்னும் சிலரும் சென்று எப்படியென்றாலும் தண்ணீர் கொண்டு வர வேண்டும் எனக் கூறினான்.

அமைச்சர் தனது குதிரையிலிருந்தபடி நான்குபுறமும் தன் கண்பார்வையைச் செலுத்தினான். வெகு தூரத்தில் பறவைகள் சில சிறகு உலர்த்துவதை கண்டான் மனதில் ஒரு சிறு துளி நம்பிக்கை ஏற்பட்டது. வீரர்கள் சிலருடன் தண்ணீர் எடுத்து வருவோம் வாருங்கள் என அழைத்துச் சென்றான். அவர்கள் அவ்விடத்தை அடைந்ததும் அங்கு நீர் தடாகத்தைக் காணவில்லை. சற்று முற்றும் பார்த்தனர். அங்கு ஒரு சேனை காணப்பட்டது. அச் சேனை அமைந்திருக்கும் காணியிலேதான் நீர் நிறைந்த குளம் ஒன்றும் காணப்பட்டது.

சேனைக்குள் செல்வோம் வாருங்கள் என அமைச்சர் அழைத்தபடி வீரர்களும் பின் தொடர்ந்தனர். அங்கு சேனை செய்த வேடன் மரத்தின் கீழ் நிலத்தில் பரண் அமைத்து அதன் மேல் உட்காத்திருந்தான். தண்ணீர் தேடிவந்தவர்களைக் கண்ட வேடன் அவர்களின் சோர்வடைந்த நிலையை எண்ணி பரிதாபப்பட்டவனாக துடிதுடித்த வண்ணம் ஐயோ ஐயோ இப்படி களைப்பாக வருகின்றீர்களே இங்கே உள்ள காய் கனிகளைப் பிடிங்கிச் சாப்பிடுங்கள் என்று கூறினான். இதைக் கேட்ட அமைச்சர்களும் வீரர்களும் நல்ல மனமுடைய வேடன் என அவனைப்பாராட்டி காய்கனிகளைப்பிடிங்கிச் சாப்பிட்டனர். அப்போது வேடன் நான் உங்களுக்கு நல்லவற்றைப் பிடிங்கித்தருகிறேன். என்று கூறி பறனை விட்டு இறங்கினான்.

இறங்கிய வேடன் குய்யோ முனறயோ என சத்தமிட்டு எனது சேனையை அழிக்கின்றீர்கள் இது தகுமா எனக் கூறி அவர்களை ஓட ஓட விரட்டினான். பின்னர் தனது இருக்கையான பறணிலே ஏறி அமர்ந்தான். துரத்தியவர்களை வாருங்கள் வாருங்கள் பசியுடன் ஏன் செல்கின்றீர்கள்

உங்களுக்கு விரும்பியதைப் பறித்து உண்ணுங்கள் என பரிதாபமடைந்தவனாக அவர்களை அழைத்தான். சென்றவர்கள் அவ்வேடனின் வேண்டுகோளை மறுக்க முடியாமல் திரும்பி வந்து காய்கனிகளைப் பிடிங்கி உண்டனர். அப்போது வேடன் உங்களுக்கு நல்லவற்றை நானே பறித்துத்தருகிறேன் எனக் கூறி பறனிலிருந்து இறங்கினான்.

இறங்கிய வேடன் ஐயோ எனதுபயிர்களை நாசம் செய்து விட்டீர்களே ஓடுங்கள் ஓடுங்கள் என துரத்தியதுடன் ஒப்பாரி வைத்து ஓல மிட்டான். இவனது நிலையை அவதானித்த அமைச்சர் சற்று சிந்தித்தார். பரணில் ஏறியவுடன் பரிதாபப்படும் வேடன் அதைவிட்டு இறங்கியதும் ஏன் மறுக்கிறான் எனச்சிந்தித்தான்.

மன்னரிடமும் இதனைக் கூறினான். மன்னும் அமைச்சனும் அவ் வேடனின் இருப்பிடத்தை அனுகினர். தன்னுடன் வந்த படை வீரர்களைப் அப் பரணின் கீழ் வெட்டிப் பார்க்குமாறு மன்னன் கட்டளையிட்டான். வெட்டினார்கள் வீரர்கள் என்ன ஆச்சரியம் அதனுள் இருந்து அழகிய சிங்காசனம் வெளிப்பட்டது. அப்போதுதான் அமைச்சரும் மற்றவர்களும் வேடனின் மன மாற்றத்துக்கான காரணத்தை அறிந்தனர். சிங்காசனத்தில் மேல் இருக்கும்போது தர்ம சிந்தனை வெளிப்பட்டது. அதனை விட்டு இறங்கியதும் அச்செயல் மாறுபட்டது. சிங்காசன மகிமையே சிறப்பானது தூய்மையானது என்பது விளங்குமல்லவா.

-செல்வி.ப.இலக்கியா-

# வளர்ச்சி பெற வேண்டிய வாசிப்புக்கலை

உலகம் வேகமாய் போய்க்கொண்டிருக்கிறது. எதற்கும் எப்போதும் நேரமில்லை. எல்லா வேலைகளும் சுருங்கி விட்டன. இது அன்றாடம் எல்லோராலும் பேசப்படும் பல்லவி. இப்படியாக பேசுபவர்கள் எல்லாம் தங்கள் நேரத்தை எப்படிப் போக்கிக்கொள்கிறார்கள். என்று பார்த்தால் அவர்களின் போலித் தனம் தெரியும். காலையில் தொலைக் காட்சித் தொடர் நாடகங்கள் சிறுவர்கள் கணனியில் விளையாட்டுக்கள் இப்படியாகவே அமைந்து விடும் இவர்கள் வாழ்க்கை.

இன்று எமது நாட்டின் எத்தனையோ பத்திரிகைகள், சஞ்சிகைகள், நாவல்கள் இலக்கியங்கள், நன்நூல்கள் இப்படி எவ்வளவோ இருக்கின்றன. அவை சமூகத்திற்கும் மக்களுக்கும் ஏன் முழு நாட்டிற்கும் நன்மை பயிர்க்கும் அறிவாற்றலையும் நல்ல மனிதர்களையும் உருவாக்கக்கூடியது. பத்திரிகைகள், நூல்களை வாசிப்பவர் எத்தனை பேர் என்று பார்த்தால் நூற்றுக்கு இரண்டு மூன்று பேர்தான் எனலாம். இப்படி வாசிப்பவர்களும் கொஞ்சம் வயது முதியவர்கள்தான். இளம் வயதினர் மிக அரிதாகவே வாசிக சாலையில் காணப்படுகிறார்கள். வாசிப்பு "என்பது" ஒரு மனிதனை பூரணமாக்கும் என்பது ஆன்றோர் வாக்கு.

இன்று நாம் எமது இனம் எமது மொழி, எமது சமயம் , கலாச்சாரம் கலை நாகரீகம் என்று மார் தட்டி கொள்கிறோம். பிற இனத்தவரோ, பிற நாட்டவரோ நமது பூர்வீகம் வரலாறு பற்றி பேசினால் எந்த விதமான ஆணித்தரமான பதிலையும் கூற முடியாத ஓர் பாரம்பரியமற்ற நாகரிகமற்ற வரலாறு இல்லாத இனம் என்று தான் ஏளனம் செய்வார்கள். எமது இனம்,மொழி, சமயம் ,கலாச்சாரம் கலை நாகரிகம் இவற்றைப்பற்றி அறிய வேண்டுமானால் இதற்கான மூல சூத்திரம் வாசிப்பு. ஆனால் இன்று எங்களில் எத்தனை பேர் அறிவு நூல்கள் ஆராய்ச்சி நூல்கள் சரித்திர நூல்கள் என்பவற்றைக் தொட்டுக் கூட பார்க்கவில்லை. இப்படியானவர்களுக்கு பொது அறிவோ வரலாறோ, இதிகாசமோ சமயமோ துளியும் தெரியாது என்பதில் ஐயமில்லை.

இதன் காரணமாக தான் நம் முன்னோர்கள் "எழுத்தறிவித்தவன் இறைவனாவான்." என்றும் எண்ணும் எழுத்தும் கண்ணெனைத் தகும். பட்டை தீட்ட தீட்டத் தான் வைரம் ஒளி கூடும். அதே

போல வாசிக்க வாசிக்கத்தான் அறிவு முதிர்ச்சி அடையும். இன்று எங்களில் எத்தனை பேருக்கு திருக்குறள் தெரியும். ஔவையார் அருளிய ஆத்தி சூடி தெரியும்? ஔவையார் என்றால் யார் என்று கேட்கும் அளவுக்கு இன்றைய மாணவர்கள் இருக்கிறார்கள். அரசியல் முதற் கொண்டு இல் வாழ்க்கை வரை அனைத்து விடயங்களையும் இரண்டே அடிகளில் அறிவு புகட்டும் ஆயிரத்தி முன்னூற்று முப்பது குறல்களில் எத்தனை குறள்கள் தெரியும் என்று நீங்களே உங்களை கேட்டுப் பாருங்கள்.

ஒருவன் வாசிப்பதினால் எத்தனையோ பல தரப்பட்ட விடயங்களை தன்னகத்தே எடுத்து கொள்கிறான். பத்திரிகைகள் , சஞ்சிகைகள் வாசிப்பதன் பொருட்டு அன்றாட உலக நிகழ்வுகள், அரசியல் , பொருளாதரம் சமூகத்தின் நடை பெறும் நிகழ்வுகள் விஞ்ஞானம், மெய்ஞானம், விளையாட்டு பொது அறிவு இவைகளைத் தான் அறிந்து கொள்வதுடன் , தான் மற்றவர்களுடன் அதையிட்டு கலந்துதுரையாடி மேலும் அறிவு பெறுகிறான். இதனால் தான் திருவள்ளுவர் கூறினார். கற்றவரே கண்ணுடையார் மற்றவர் முகத்திரண்டு புண் உடையார் என்று வாசிப்பு மூலம் எத்தனையோ சிறந்த சிந்தனைகள் நல்ல அறிவுரைகள் வாழ்க்கையின் நெறி முறைகள் பெற்றுக் கொள்ளலாம்.

ஒரு அரிச்சந்திரன் கதையை வாசித்ததன் காரணமாக ஒரு மகாத்மா காந்தி தோன்றினார். தோன்றியது மட்டுமல்ல பாரததேசத்திற்கு சுதந்திரம் வாங்கிக் கொடுத்தார். கத்தியின்றி இரத்தமின்றி அகிம்சை வழியே காட்டினர். அன்பு அறம் அகிம்சை போன்றவற்றின் வலிமையை உலகிற்கு உணர்த்தினார். அதே நல்ல நெறிகளை வாசிக்கும் நல்ல இளைஞர்கள் எதிர் காலத்தில் மகாத்மா ஆகத் தேவையில்லை சிறந்த மனிதனானாலே அது வாசிப்பின் மகத்துவத்தை உணர்த்தும் ஒவ்வொரு ஊரும் சிறந்ந முன்னேற்றத்தை கண்டு வருகிறது. ஒவ்வொரு ஊரிலும் ஒவ்வொரு பாடசாலைக்கட்டடங்கள் , வைத்தியசாலைக் கட்டடங்கள் , கடைகள் , விளையாட்டு கழகங்கள் என்று பெருகிக்கொண்டே போகும்போது இந்த வாசிப்பு சாலைகளும் அதே அளவு பெருகிக்கொள்கிறதா என்றால் இல்லை என்றே கூற வேண்டும். அதிலும் நம்மூர் சில வாசிக சாலைகளைப் பார்த்தால் பழைய சில புத்தகங்கள் சில பத்திரிகைகள் இவைகளுடன் ஒரு சில வயது முதிர்ந்த முதியவர்கள் பொழுதை போக்கும் வண்ணம் ஊர் விடயங்களை அலசுவார்கள் இந்நிலைமை மாறவேண்டும் நிறைய நூல்கள் பல்மொழி செய்தித் தாள்கள், மிக சிறப்பாக வாசிக சாலையை ஒவ்வொரு ஊரிலும் உருவாக்க வேண்டும் . மாணவர் மத்தியில் வாசிப்பின் மகத்துவத்தை உணர்த்த பாடசாலை நூலகம் பயன்படுத்தப்பட வேண்டும். ஒவ்வொரு நாளும் மாணவர்கள் கட்டாயமாக நூலகத்திற்கு சென்று வாசிப்பதை உறுதி செய்ய வேண்டும். பொழுதை போக்குவதற்கு அல்ல நல்ல செயல்களை ஆக்குவது" என்பதை ஒவ்வொரு மனிதனும் உணர வேண்டும்.

இன்றைய உலகம் முன்னேறி இலத்திரனியல் ஊடகம் மூலம் பல அன்றாட நிகழ்வுகளை மாணவர்கள் அறிந்து கொள்ளும்

ஆர்வத்தையும் குறை சொல்லவில்லை. அதே நேரம் சிறந்த அறிவை ஞாபகத்தில் கொள்ள உதவும் வாசிப்பு குறைந்து செல்வதை குறை என்று சொல்கிறோம்.

எனவே வளர்ந்து செல்லும் விஞ்ஞான உலகில் வளர்க்கப்பட வேண்டிய வாசிப்பு கலை இன்றும் பூரண வளர்ச்சி பெறவில்லை . அதை வளர்த்து தம் அறிவை பெற வேண்டியது ஒவ்வொரு மனிதனதும் கடமை வெளியுலக விதிகளை அராய்ச்சி செய்து அறிய முற்பட்ட மனிதன் உள்ளுலக விதிகளை அறியத் தவறி விட்டான். அளவே இல்லாத தன் ஆசைகளை எப்படி சமாளிப்பது என்று அவன் அறிந்திருக்கவில்லை. பொறாமையால் மனம் புளுங்கி துடிக்கும் போது என்ன செய்வதென்று அவனிற்கே புரியாது. ஆசை மற்றும் அச்சம் எனும் இரு துருவங்களும் மத்தியில் அவனுடைய வாழ்க்கை அலைக்கழிக்கப்படுகிறது. கவலை எனும் தீராத நோயால் அவன் பீடிக்கப்படுகிறான். உடல் தளர்ந்து மூப்பெய்து மரணமே அவனது தொல்லைகளுக்கெல்லாம் முடிவுரையாக அமைகிறது. என்பது எண்ணத் தோன்றுகிறது.

மனிதனது உள்ளுலக இயக்கங்களையும் அதன் விதிகளையும் தான் அக உலக விஞ்ஞானிகளான ரிகிள் ஆராய தலைப்பட்டார்கள். உள்ளுலகம் வெளியுலகத்தைக் காட்டிலும் அதி நுட்பமானது. இந்த ஆராய்ச்சிக்கு இன்னும் அதிக கவனம் தேவைப்பட்டது. எனவே தான் ஆரவாரமிக்க அவசர வாழ்க்கையிலிந்து விலகி அமைதி நிறைந்த காடுகளை நோக்கிச் சென்றார்கள்

நம் முன்னோர்களான முனிவர்கள் அக உலகங்களின் அடி ஆழங்களை ஊடுருவ இன்னும் அதிகமாகத் தன்னுள் மூழ்க வேண்டியிருந்தது. அதற்காக புலன்களை ஒடுக்கினார்கள். மனதினை நிலை நிறுத்தினார்கள். சுக போகங்களை நாட அவருக்கு நேரம் இருக்கவில்லை. அப்படி ஒரு நிலைப்பாட்டின் உச்ச கட்டத்திலிருந்து அக உலகை அவதானிக்க ஆரம்பித்தார்கள். தங்களின் அக உலக ஆய்வுகளிலிருந்து உணரப்பெற்ற தரவுகளைத்தான் அலசி ஆராய்ந்து தொகுத்து மெய்ஞானம் என்று அருளியிருக்கிறார்கள். இவர்களும் ஒரு வகை விஞ்ஞானிகளே. புற உலக விஞ்ஞானத்தின் வளர்ச்சி குறைந்து மதிப்பிடுவதற்கில்லை. விஞ்ஞான ஆராய்ச்சியின் விளைவுகள் மண்ணுலகில் வாழும் மாந்தர்க்கெல்லாம் வரப்பிசாதமாகவே அமைகிறது. ஆனால் அதனை அனுவித்து ஆனந்தம் கொள்ளும் அவனது அக உலகம் , சுயநலம் பேராசை எனும் புற்றுநோயால்புரையோடியிருந்தால் ...... யாரால் அவனைக் காப்பற்ற முடியும்.அக உலகம் தூய்மையின்றி புற உலக விஞ்ஞான வளர்ச்சியால் இந்த உலகம் அழிவையே கண்டிருக்கும். ஆகவே தான் விஞ்ஞான வளர்ச்சியின் அற்புதத்தோடு சேர்ந்தே மெய்ஞானமும் தழைத்தோங்க வேண்டும். எனவே பௌதிகத்தோடு சேர்ந்தே பகவத்கீதையும், வானுலக ஆராய்ச்சியோடு சேர்ந்தே வால் மீகி இராமாயணத்தையும் ஆராய வேண்டும். இந்த கால கட்டத்தில் ஒரு மனிதன் வெற்றி கரமாகவும் இன்பமாகவும் வாழ விஞ்ஞானம் மெஞ்ஞானம் இரண்டுமே அவனிற்கு தேவை. இல்லாவிட்டால் " OPERATION SUCCESS BUT PATIENT DIED" என்ற கதையாகிவிடும்.

திருமதி.ர.மகேந்திரன்,
பயிற்றப்பட்ட கணித ஆசிரியை

# நான் விரும்பும் வைத்தியத் தொழில

உலகில் உள்ள தொழில்களில் மக்கள் உயிர்காக்கும் தொழில் வைத்தியமாகும். அதுவே நான் விரும்பும் தொழில். நோயால் வாடும் மக்களின் துயர் துடைப்பவனே வைத்தியனாவான். அவன் பயன் கருதாது பணி செய்பவன். காலை மாலை என்று பாராது எந்நேரமும் மக்கள் பணி செய்ய அவன் கடமைப்பட்டுள்ளான். ஏழை, பணக்காரன், தாழ்ந்தவன், உயர்ந்தவன் என்ற பேதம் பாராது அனைத்து உயிருக்கும் தொண்டாற்றுபவன் வைத்தியன் அவனது தொழில் புனிதமானது. இப் புனிதமான தொழிலில் ஈடுபட்டுழைப்பதே என் இலட்சியமாகும். உயிர்களைப் பிடித்து வாட்டும் பிறவிப் பிணியைப் போக்கி அவர்களுக்குப் பேரின்பத்தை வழங்குபவன் இறைவன். அவன் வைத்திய நாதன் என்று அழைக்கப்படுகிறான். இம் மண்ணுலகில் நோயால் வாடும் மக்களின் துன்பத்தைப் போக்குபவன் வைத்தியன். அவன் கண்கண்ட கடவுளாகப் போற்றப்படுகின்றான்.

தாகத்தால் தவிப்பவனுக்கு தண்ணீரே மிக உயர்ந்த பொருளாக விளங்கும். அதே போன்ற நோயால் வருந்துபவனுக்கு அவனது நோய் நீங்குதலே மிக உயர்ந்த பொருளாகும். இதனை நிறைவேற்ற வல்லவன் வைத்தியன் உயிர் காக்கும் இந்த உத்தமத் தொழிலில் ஈடுபடுவோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்புண்டு. மக்கள் மதிப்பும் உண்டு. அன்று இத் தொழில் ஈடுபட்டோருக்கு அரசு மிக்க மதிப்பளிக்கிறது. உயர்ந்த ஊதியமும் வழங்குகிறது. நான் வைத்தியத் தொழில் ஈடுபடுவதன் மூலம் நல்ல வருமானத்தைப் பெறுவேன். அதன் மூலம் மக்களுக்குத் தொண்டு செய்யும் வாய்ப்பையும் பெறுவேன்.

வைத்தியத் தொழிலுக்கு வயது கட்டுப்பாடே இல்லை. இத் தொழிலில் ஈடுபட்டவர்கள் இறுதி வரை தொண்டாற்ற முடியும். ஏனைய தொழில்களில் அத்தகைய வாய்ப்பு வசதி இல்லை. வைத்தியத் தொழிலில் ஈடுபடுவதன் மூலம் அத் தொழிலில் மேன்மேலும சிறந்த பயிற்சியினைப் பெற முடியும். இதன் மூலம் என் மதிப்பும் உயரும். ஆகவே உலகிற் சிறந்த வைத்தியத் தொழிலே உயிர் காக்கும் இத் தொழிலேயே நான் பெரிதும் விரும்புகிறேன்.

-த.திவ்வியா
தரம்-09 A

## நெசவுத் தொழிலின் வரலாறு.

உணவும் உடையும் மனிதனுக்கு மிக முக்கியம்.ஆகையால் மனிதனுக்கு உழவுத் தொழிலும்,உடையாக்கமும் பிரதான கருமங்களாகியிருக்கின்றன.பண்டைக் காலத்தில் வாழந்த மக்கள் உணவுற்பத்திக்காக எடுத்துக் கொண்ட முயற்சியைப் போலவே,நெசவுத் தொழிலுற்பத்தியிலும் முயற்சித்ததாக தெரிய வருகின்றது.

வேட்டையாடிச்சீவித்தகாலத்திலிருந்தே மனிதன் பிராணிகளின் தோலைக் காயவைத்து உடலை மூடிக் கொண்டதிலிருந்தே உடையாக்கம் தொடங்கியது.இது பின் காலம் செல்லச் செல்ல உரோமங்களையும் மரப் பட்டைகளையும் சேர்த்து முறுக்கிய ஆடையாக மாறியது.ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு எகிப்திய மன்னர்களின் பிணங்கள் சணல் நாரிலால் நெய்யப்பட்ட பட்டினால் சுற்றி வைக்கப்பட்டது.அதனால் அக்காலத்தில் எகிப்தில் நெசவுத் தொழில் வளர்ச்சியடைந்துள்ளதென்பது தெரிகின்றது.

ஆசிய நாடுகளில் முதன்முதலில் பருத்தியை உபயோகித்து சீலை நெய்த நாடு இந்தியா ஆகும்.பதின்மூன்றாம் நூற்றாண்டில் இயந்திரங்கள் மூலம் நெசவு செய்யப்பட்டதாக அறியப்படுகின்றது.இம்முயற்சியின் பயனாக கி.பி.1733ல் "யோன்கோ" என்பவர் பிளைசட்டிலையும்,1765ல் "காகிறிசு" என்பவர் இசுப்பின்னிங் செனி எனும் நூல் நூற்கும் இயந்திரத்தையும் ,1785ல் காட்டிறைற்று என்பவர் தானாகவே இயங்கும் இயந்திரத்தையும் கண்டு பிடித்தார். இதனால் கைத்தறிகளில் நெய்த புடவைகளிலும் அழகானதும் மினுக்கமுள்ளதுமான புடவை அதிகரிக்கத் தொடங்கியது.இப்படியான நிலையிலும் கைத்தறிகளை ஒதுக்கித் தள்ளிவிட முடிய வில்லை. எவ்வளவு நவீனமுறை இயந்திரத்தில் சீலை நெய்த போதிலும் கைத்தறிப்புடவைகளை விரும்பும் மக்களும் இருக்கின்றனர்.

இனி அடுத்தாக நம் நாட்டு நெசவுத் தொழில் பற்றிக் கவனிப்போமாயின், 2500 வருடங்களுக்கு முன் விஜயனும் அவனது நண்பர்களும் இலங்கைக்கு வந்த போது விஜயகுமாரனைச் சந்தித்த குவேனி என்பவள் நூல் நூற்றுக் கொண்டிருந்தாள் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது.இதிலிருந்து இலங்கையில் விஜயன் வரவதற்கு முன்பே சேலை நெசவு செய்யப்பட்டது.என்பதை அறிய முடிகின்றது.அதன் பின் அதன் வளர்ச்சி படிப்படியாக குன்றிக் கொண்டிந்த வேளை அநாகரிக

தர்மபாலாவின் வேண்டுகோளுக்கிணங்கதொன்கறோலிசு கேவா வித்தாரண தமது பணத்திலே வித்தியா விருத்தி நிதியை பயன்படுத்தி கல்வியறிவும் செயற்திறனும் மிக்க இளைஞர்களை ஜப்பானுக்கு அனுப்பி அவர்களுக்கு தொழிற்பயிற்சி கொடுத்து அவர்கள் அத்தொழிலை இந்நாட்டில் ஆரம்பிக்க வழிவகுத்தார்.இத்திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற கலாநிதி.யூ.பி.தொலபிகில்லே அவர்கள் இராஜகிரியில் 1912ம் ஆண்டு நெசவுத் தொழில் கல்லூரியை ஆரம்பித்தார். 1918ம் ஆண்டு கல்விப் பகுதியில் பாடசாலையில் நெசவுத் தொழில் கற்பிக்கத் தொடங்கினார்கள்..1940ம் ஆண்டு தொழிற்பகுதியினர் நெசவுத் தொழிலை இலங்கையில் பரப்புவதற்குத் திட்டமிட்டு வெற்றிம் கண்டனர்.இப்போது கல்விப்பகுதியைச் சேர்ந்த அனேக பாடசாலைகளிலும் நெசப் பயிற்சியளிக்கப்படுகின்றது.இதனால் இத்தொழில் எதிர்காலத்திலும் வளர்ச்சியுறும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

**நெசவுத் தொழிலுக்குப் பயன்படுத்தப்படும் மூலப்பொருட்கள்**

செடிகளிலிருந்து பெறும் நார்கள்:-

☞ பஞ்சு,பட்டுச்சணல்,சடைச்சணல்,மனிலா,சீசல்,இறம்,பைனா

பிராணிகளிலிருந்து பெறும் நார்:-

☞ உரோமம்:-
செம்மறியாடு,காஷ்மீர் ஆடு,ஒட்டகம்,அங்கோரா ஆடு,இலாமா ஆடு,அற்பகா ஆடு,

☞ பட்டு:- பட்டுப்புழு

☞ கனிப்பொருள்களிலிருந்து பெறும் நார்:-
பொன்,வெள்ளி,கண்ணாடி,கன்னல்

☞ விஞ்ஞான முறைப்படி செய்யும் நார்:-
செயற்கைப்பட்டு

-திருமதி.ச.சுதாநந்தம்
தொழில்நுட்ப ஆசிரியை

வாழ்வினூடாக வெளிக்காட்டி,கற்றபடி நடந்து கொள்வான்.கல்வியே அவன் வாழ்வதற்கு துணை நிற்கும்.மொழியையும்,தொழிலையும் தேடிக்கொடுக்கும்.

தற்காலத்தில் தொழிலை மையமாக் கொண்ட கல்வியையே மனிதன் நாடுகின்றான்.கல்வி என்பது சத்தியம்,தர்மம்,சாந்தி பிரேமை,அஹிம்சை நிறைந்த மனித நேயக் கல்வியாக அமைவதே எம் எதிர்காலச் சந்ததியினரை வாழ வைக்கும் கல்வி முறையாகும்.கல்வி மூலம் மனிதன் தெய்வமாகலாம்.கல்வி முறைமை எமது மாணவர்க்கு அடிப்படையிலேயே உறுதியான அத்திவாரமாக இடப்படவேண்டும்.ஒரு கட்டிடத்திற்கு அத்திவாரம எவ்வளவு முக்கியமானதோ,அதே போன்று மாணவர்க்கு அடிப்படைக் கல்வி முக்கியமானது.

"காலை எழுந்தவுடன் படிப்பு,பின்பு கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு மாலை முழுவதும் விளையாட்டு என்று வழக்கப்படுத்திக் கொள்ளு பாப்பா'

என்ற பாரதியார் பாடல் மூலம் கல்வியும்,விளையாட்டும் முக்கியம் பெறுகின்றன.ஒரு நாட்டின் கல்வி அபிவிருத்தியில் ஆரம்பக் கல்வியே அத்திவாரமாக அமைய வேண்டும்.இதை உணர்ந்து கொண்ட அன்றைய எமது மூத்த ஆசான்கள் ஆரம்பக் கல்வியில் அதிக அக்கறை காட்டினர்.இன்று ஆரம்பக் கல்வியைப் போதிப்பதற்கு ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகிறது.இந்நிலையில் ஆரம்பக் கல்வி ஆசிரியர்களில் சிலர் தம்மை இனங்காட்டிக் கொள்ள கூச்சப்படுவதும் வேறு பாடங்கள் கற்பிக்க ஆர்வம் காட்டுவதும் இன்றுள்ள கல்வித்தரம் அன்றுள்ள கல்வித்தரம் போல் இல்லாமைக்கு காரணமாகவும் இருக்கலாம் அல்லவா?

கல்வி அபிவிருத்தி பற்றி எல்லா இன்று எல்லா மட்டங்களிலும் பேசப்பட்டாலும் எமது நாட்டின் சகல பிரதேசங்களிலும் இன்றும் கல்வியில் சம வாய்ப்பு இல்லாததைக் காணக்கூடியதாகவுள்ளது.இலவசக் கல்வியின் தந்தையான சீ.டபிள்யூ.டபிள்யூ.கன்னங்கரா அவர்கள் கண்ட கனவு எந்தளவுக்கு நனவாகியுள்ளது என்பது கேள்விக்குறியாகும்.கல்வி அபிவிருத்தி என்பது வசதிவாய்ப்புகள் குறைந்த பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளை மையமாகக் கொண்டே கட்டியெழுப்பப்படவேண்டும்.அப்பொழுதுதான் எமது நாட்டிற்கு நன்மையான சமத்துவமான கல்வி அபிவிருத்தியைக் காண முடியும் என்பது வெள்ளிடை மலையான யதார்த்தமான மறுக்கமுடியாத உண்மை என்பதில் சந்தேகமில்லை.

***-திருமதி.த.நவசரந்தினி,***
***பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி.***

## வித்தியாலயப் பணியில்.........

| | | | |
|---|---|---|---|
| 01. | திரு. மா . தங்கவடிவேல். | அதிபர், | பயிற்றப்பட்ட கணிதம். |
| 02. | திருமதி. சி. பத்மநாதன். | பிரதி அதிபர், | பட்டபின்கல்விடிப்ளோமா. |
| 03. | திருமதி. ந. தயானந்தா. | பகுதித் தலைவர், | பயிற்றப்பட்ட ஆரம்பிரிவு. |
| 04. | திருமதி. ர. மகேந்திரன். | பகுதித் தலைவர், | பயிற்றப்பட்ட ஆரம்பப் பிரிவு. |
| 05. | திரு. கா. கருணேந்திரா. | பகுதித் தலைவர், | பட்டபின் கல்வி டிப்ளோமா. |
| 06. | செல்வி. க. ஜெயராணி. | | பயிற்றப்பட்ட விவசாயம் |
| 07. | திருமதி.க.திரவியராசா. | | பயிற்றப்பட்மனைப்பொருளியல் |
| 08. | திருமதி ப. தயாபரன். | | பயிற்றப்பட்ட விஞ்ஞானம். |
| 09. | திருமதி. ப. ஜெயராஜா. | | பயிற்றப்பட்ட விஞ்ஞானம். |
| 10 | திரு. ம. உமாபதிசிவம். | | பயிற்றப்பட்ட உடற்கல்வி. |
| 11. | திருமதி. ஞா. சிவதாஸ். | | பயிற்றப்பட்ட ஆரம்பப்பிரிவு |
| 12. | திருமதி. ஐ.ர. ஏலாளசிங்கம். | | பயிற்றப்பட்ட ஆங்கிலம். |
| 13. | திருமதி. சு. ஸ்ரீதரன். | | பட்டபின் கல்வி டிப்ளோமா. |
| 14. | திருமதி. டெ.சீ.ரா. கிருஷ்ணமூர்த்தி. | | பட்டபின் கல்வி டிப்ளோமா. |
| 15. | திருமதி. மா. தேவதாசன். | | பயிற்றப்பட்ட ஆரம்பப் பிரிவு |
| 16. | திருமதி. த. சிவானந்தராசா. | | பயிற்றப்பட்ட நடனம் |
| 17. | திருமதி. இ. சந்திரகுமார். | | பட்டபின் கல்வி டிப்ளோமா. |
| 18. | திரு. க. சற்குருலிங்கம். | | பயிற்றப்பட்ட ஆரம்பப்பிரிவு |
| 19. | திருமதி. ச. சதானந்தம். | | பயிற்றப்பட்ட சங்கீதம். |
| 20. | திருமதி. வி. மணிசேகரன். | | பயிற்றப்பட்ட ஆரம்பப் பிரிவு |
| 21. | திருமதி. ச. சுதானந்தம். | | பயிற்றப்பட்ட் நெசவு |
| 22. | செல்வி க. சுசிலாதேவி. | | பயிற்றப்பட்ட இந்து சமயம் |
| 23. | திருமதி. த. ஸ்ரீறிதரன். | | பயிற்றப்பட்ட வர்த்தகம், B.A |
| 24. | திருமதி. அ. சர்வேஸ்வரன். | | பயிற்றப்பட்ட ஆங்கிலம். |
| 25. | திருமதி. ஆ. மகேந்திரராஜா. | | பயிற்றப்பட்ட ஆங்கிலம். |
| 26. | திருமதி. ம. லோகேந்திரராஜா. | | பயிற்றப்பட்ட ஆங்கிலம். |
| 27. | திரு. சி. வசிதரன். | | பட்டப்பின் கல்வி டிப்ளோமா |
| 28. | திருமதி. பி. எ. தே. கிருபைராஜா. | | பட்டப்பின் கல்விடிப்ளோமா |
| 29. | செல்வி. க. இதயவேணி. | | கலைப்பட்டதாரி ஆரம்பப் பிரிவு |
| 30. | திருமதி. சு. அருண். | | கலைப்பட்டதாரி ஆலோசனையும் வழிகாட்டலும். |

## கல்வி சாரா உத்தியோகத்தர்கள்.

| | | |
|---|---|---|
| 01. | செல்வி.க.கருணேஸ்வரி. | பாடசாலைமுகாமைத்துவ உதவியாளர். |
| 02. | திருமதி.கி. மதியழகன். | நிதி திட்டமிடல் உதவியாளர். |
| 03. | திருமதி. க. வர்ணகுலசிங்கம். | நூலகப் பணியாளர். |
| 04. | திருமதி. சு. தம்பிராசா. | விஞ்ஞான ஆய்வு கூடப் பணியாளர். |
| 05. | திருமதி. ம. வன்னியசிங்கம். | அலுவலகப் பணியாளர். |
| 06. | திரு. க. தர்மராசா. | சுகாதாரத் தொழிலாளி. |
| 07. | திருமதி. ப. இரகுநாதன். | பாடசாலைப் பணியாளர். |

புத்தக உலகின் பூங்கா
வனம்......
மாலின்ஸ் புத்தக நிலையம்.
எங்களிடம்....

☞ பாடசாலைப் பயிற்சிப் புத்தகங்கள்.

☞ அப்பியாசக்கொப்பிகள்.

☞ அலுவலக காகிதாதிகள்.

☞ அன்பளிப்புப்பொருட்கள்.

☞ வாழ்த்து அட்டைகள்.

போன்றவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள நாட வேண்டிய ஒரே ஸ்தாபனம்.

☞ மாலின்ஸ் புத்தக நிலையம்,
பிரதான வீதி,
காத்தான்குடி – 01
☎ :- 065 – 2245476